1509

...oved by the Text-Book-Committee, Madras.

6 SEP 1929 MADRAS

AURANGAZEBE

BRIEF SURVEY OF HIS REIGN

V.509 3-29

BY

E. N. MARAGADA VELU, B. A.,

AND

S. S. ARUNAGIRI NATHAN

Tamil Pandit

Tondaimandalam Tulava Vellalar's High School,

Madras.

MADURA

E. M. GOPALAKRISHNA KONE

Reserved 1929 *Price As.* 10½.

TB 031.6 M29 180100.

ஔரங்கசீப்

3766
923.A4

எழுதியோர்:

E. N மரகதவேலு, B., A.

எஸ் எஸ். அருணகிரிநாதர்.

பிரசுரகர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம்,

ஸ்ரீ கோபால்மஹால், மதுரை.

ாபிரைட் ரிஜிஸ்டர்ட்] 1929. [விலை அணு 10½.



EXCELSIOR PRESS,
MADURA.

T3
034/6
N24

முகவுரை.

இக்காலத்துப் பொது ஜனங்களும், கலாசாலைகளில் உயர்தர வகுப்புகளில் வாசிக்கும் மாணவர்களும் முன்னோர் வரலாறுகளை வாசித்தறிவது அவசியமென்று வித்தியா இலாகா அதிகாரிகளும், அறிஞர் பலரும் அபிப்பிராயப்படுவதை முன்னிட்டே இந்நூலில் இரண்டொரு விஷயங்களைத் தவிர்த்து வேறு எல்லா விஷயங்களிலும் சிறந்து விளங்கிய மெகலாய சக்கரவர்த்திகளில் ஒருவரான ஔரங்ஸீப்பின் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. ஏனையோர் சரிதங்களைப் போலின்றி இவர் சரிதத்தில் ஊன்றிப் படிப்போர்க்குத் தோன்றும் விஷயங்கள் பலவாகும். நூல் எழுதுவோர் "எவர்க்கும் பெரிதும் உரிமையான நடுநிலைமை தவறுமை என்னும் கடமையை அனுசரித்து எழுதவேண்டும்" என்பது பற்றி இந்நூல் முதலில் இருந்து முடிவு வரையில் அதே முறையில் எழுதப்பட்டிருக்கிறது. நடுநிலைமை தவறுத தன்மையில் எழுதியுள்ள சில பூர்விக சரித்திரங்களை ஆராய்ந்து அவைகளைப் பின்பற்றியே இந்நூலாசிரியர்கள் காலம் களம் காரணம்முதலியவற்றை நன்கு விளக்கித் தெள்ளிய தமிழ் நடையில் எழுதியுளாராகவே கலாசாலை ஆசிரியர்கள் இதனை நன்கு ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

E. M. G.

Madura.

அத்தியாய அட்டவணை.

அத்தியாயம்.	விஷயம்.		பக்கம்.
1.	ஔரங்கசீப்பின் இளமைப்பருவம்	...	7
2.	ஔரங்கசீப்பின் மணவினை	....	16
3.	தட்சிணதேச சரித்திரம்	....	19
4.	சகோதரத் துரோகம்	...	26
5.	ஔரங்கசீப்பும் சிவாஜியும்	....	34
6.	சிவாஜியின் மைந்தன்	...	58
7.	ஔரங்கசீப்பின் ஆளும்முறைமை	....	62
8.	அழிவுக்கு அடிப்படை	....	77
9.	ஔரங்கசீப்பின் கடிதங்கள்	...	82
10.	பல பெரும் விஷயங்கள்	....	90



TO

M.R.Ry. DIWAN BAHADUR

V. MASILAMANI PILLI Avl., B. A., B. L.,

THIS BOOK

IS

DEDICATED

AS A HUMBLE TOKEN REGARD AND GRATITUDE

BY

THE AUTHORS

"Though earth and heaven could in return be given
A benefit received when none was due
They would not recompense"

—*The 'Sacred' Kural.*

ஔரங்கசீப்.

ஔரங்கசீப்.

OFFICE OF THE REGISTRAR OF
6 - SEP 1929
MADRAS

முதலாவது அத்தியாயம்.

ஔரங்கசீப்பின் இளமைப்பருவம்.

"விளையும்பயிர் முளையில் தெரியும்"—பழமொழி.

ஆயிரத்து அறுநூற்றுப் பதினெட்டாம் வருஷம் அக்டோபர் மாதம் இருபத்துநான்காம் தேதி காலை சுமார் ஆறு மணி இருக்கும். அப்போது உஜ்ஜினி புரத்திற்குச் சுமார் இரண்டுகாத தூரத்திலுள்ள தோஹத் (Dohad) என்னும் இடத்தில் ஜிஹாங்கீர் தமதுபரிவார சகிதமாய்க் கூடாரமடித்துத் தங்கியிருந்தார். அங்கு அரண்மனை அந்தப்புர மொகலாய ஸ்திரீகளும், தனியே ஒருபுறத்திருந்தனர் அங்கிருந்தாரனைவரும் மகிழ்ந்திருந்தனர். காரணம் யாதோ?

சில நாட்களுக்கு முன் ஆமத் நகரத்தில் ஜிஹாங்கீர் சக்கரவர்த்திக்கு விரோதமாக மாலிக்காம்பர் (Malikamber) என்பவன் கிளம்பினன். அவனை அடக்குப்பொருட்டுத் தமது புத்திரர்களுடனும், ஏராளமான சைனியங்களுடனும் ஜிஹாங்கீர் அங்குச் சென்றார். அவர் செல்லும்போது அரண்மனை ஸ்திரீகளும் விநோதார்த்தமாக அவருடன் சென்றிருந்தனர் அவர்கள் ஆமத் நகரத்திற்குப்போய் அத்துஷ்டனை யுத்தத்தில் தோற்கடித்து வெற்றிமாலை சூடிச் சந்தோஷமிகுதியுடன் திரும்பி வருகிற வழியில் நாம்மேற்கூறிய தோஹத் என்னுமிடத்தில் அழகிய கூடாரமடித்து அங்குத் தங்கினர்.

அப்போது பூர்ண கர்ப்பவதியாயிருந்த ஜிஹாங்கீரின் மருமகளும், ஷாஜஹானின் அருமை மனைவியுமாகிய மும்தாஜ்மகால் என்பவள் ஆண்குழந்தை ஒன்றை அங்குக் கருவுயிர்த்தாள். அது அவளுடைய ஆறாவது குழந்தையாகும். அக் குழந்தைதான் ஔரங்கசீப்!

ஔரங்கசீப் பிறந்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகு ஜிஹாங்கீரும், அவருடைய பரிவாரங்களும் மாளவதேசத்துத் தலைநகராகிய உஜ்ஜினி புரத்தின் அரசன் அவைக்களத்தை அடைந்து அவ்விடத்தில் மிகுந்த பணச்செலவு செய்து மிக்க ஆடம்பரத்துடன் குழந்தை பிறந்ததற்காகச் சந்தோஷங் கொண்டாடினர்.

ஏறக்குறைய இரண்டு மூன்றுவாரம் உஜ்ஜினிபுரத்திலிருந்துவிட்டுப் பின்னர் எல்லோரும் தங்கள் வாசஸ்தானமாகிய ஆக்ராவுக்குத் திரும்பினர்கள். குழந்தை பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து யாவர்க்கும் மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருந்தது.

ஔரங்கசீப்பின் இளமைப் பருவத்தில் நாம் ஞாபகத்தில் வைக்கக்கூடிய இரண்டொரு விஷயங்கள் நடந்தன.

இளம் பிராயத்திலேயே ஔரங்கசீப் புத்தி கூர்மையுடையவராய் இருந்தார். அவர் தாம் வாசித்தவைகளில் உள்ள விஷயங்கள் யாவற்றையும் எளிதில் அறிந்து நினைவிருத்திக் கொள்ளும் சக்தியை உடையவர். அவருக்கு இளம் பருவத்தில் உபாத்தியாயர்களாக இரண்டு பெயர் ஏற்படுத்தப்பட்டிருந்தனர். அவ்விருவரில் ஒருவர் ஷாஜஹானின் மந்திரியாகிய சாதுல்லாஹான் என்பவர்; மற்ற உபாத்தியாயர் மீர் மகமத் ஹஷீம் என்பவராவர்.

அவ்விரு உபாத்தியாயர்களின் உதவியாலும், தமது புத்தி கூர்மையாலும் ஔரங்கசீப் கொரான் என்னும் மகம் மதியவேதத்தை அருத்தம் அறிந்து பாராயணம்செய்தார். அதுவுமல்லாமல் மகமத் தீர்க்கதரிசி அவ்வட்போது மொழிந்துள்ள பொன் போன்ற திவ்விய விஷயங்களை அவர் நன்றுகப் படித்து மனப்பாடம் செய்திருந்தார். அதனல் அவர் சமபம் நேரும்போதெல்லாம் அவ்விஷயங்களை மேற் கோள்களாக எடுத்துக் காட்டும் சாமர்த்தியம் வாய்ந்திருந் தார். அரபி பாஷையையும், பாரசீக பாஷையையும் கச டறக் கற்று அக்காலத்தில் அப்பாஷைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்த சல்விமான்களுக்குத் தாமும் சமானமாக விளங்கினர். ஹிந்தி பாஷையும் ஒரு சிறிது அவருக்குத் தெரிந்திருந்தது என்றே கூறலாம்.

அவ் இளப்பிராயத்திலே அவர், தாம் வாசித்திருந்த சாதி, (Sadi) ஹாவிஸ் (Hafiz) என்னும் பாரசீக மகான் கள் எழுதிவைத்திருந்த முக்கிய செய்யுட்களை மறவாமல் சாகும் வரையிலும் படித்து, வேண்டும்போது அவைகளைப் பிரயோகித்து வந்தார். இவ்வாறெல்லாம் அவர் கல்விகற்று அரசகுமாரர்களிலும் மேம்பட்டு விளங்கினர். "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் முதுமொழிக் கேற்ப இளமையிலேயே அவர் மனத்தில் ஊறிய மத விஷயங்கள் இறக்கும் வரையில் மேன்மேலும் விருத்தியாகிக் கொண்டே யிருந்தன. மத வைராக்கியத்தில் அக்காலத்திய மகமதியரில் அவர் மிகவும் சிறந்து விளங்கினர்.

குழந்தைப் பருவத்திலேயே அவர் மிகவும் மனைசரியமுடையவரா யிருந்தார். ஆனல் வீண் பெருமையில் ஒரு சிறிதும் ஈடுபட்டிருக்கவில்லை.

இவ்விதமாக ஔரங்கசீப் கல்வியில் கண்டோர் மெச்சும்படி விருத்தியடைந்து பதினைன்காம் பிராய மெய்தினர்! இந்த வயதிற்குள், அரசகுலத் துதித்து இராஜபோகம் அனுபவிக்க வேண்டிய அவர், கல்வியில் தமது கவனத்தைச் செலுத்தி, சிறந்து விளங்கினமை இற்றை ஞான்றும் யாவராலும் பாராட்டப்படத் தக்கதன்றே?

1633-ஆம் வருடம் மே மாதம் இருபத்து எட்டாந்தேதி காலையில் யமுனை நதிக்குச் சமீபத்தில் இருந்த ஷாலிமார் என்னும் விஸ்தாரமான இடத்தில் ஷாஜஹானின் பணியாட்கள், சுதாக்கர், சூரத்சுந்தர், என்னும இரண்டுபெரிய யானைகளை ஒன்றோடொன்று சண்டையிடச் செய்து, சக்கரவர்த்தியும் அவர் குடும்பத்தாரும், மற்றும் பலரும் வேடிக்கை பார்க்கும் பொருட்டுக் கொண்டுவந்து நிறுத்தினர்.

இரண்டு யானைகளும் மிகுந்த கோபத்தோடு ஒன்றை யொன்று எதிர்த்தன. அச்சமயத்தில் அரசகுடும்பத்தாரிற் பலரும், பல்வேறு ஜனங்களும் அங்குத் திரண்டு நின்று அக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர் அதுசமயம் அக் காட்சியைக் காணக் குதிரையின் மீது அங்கு வந்த ஔரங்கசீப் பயம் சிறிதுமின்றிச் சண்டையிடும் யானைகளில் ஒன்றுகிய சுதாக்கர் என்னும் பராக்கிரம யானையின் சமீபத்தில் நெருங்கிச் சென்றார்.

நெருங்கியதும் அந்தச் சுதாக்கர் என்னும் யானை சூரத்சுந்தர் என்னும் யானையின்மீது தனக்குஏற்பட்டிருந்த கோபத்தை அவர் பக்கந் திருப்பி அவர்மீது காட்ட ஆரம்பித்தது. ஆனால் குதிரைமீதிருந்த ஔரங்கசீப் அச்சம் சிறிதுமின்றி அசையாமல் அவ்விடத்திலேயே நின்று அந்த யானையின் சிரசின்மீது தமது கையிலிருந்த ஈட்டியை எறிந்

தார். எறியவே அந்த யானைக்குக் கோபம் பொங்கி அதன் நீண்ட கோட்டினால் ஔரங்கசீப் ஏறியிருந்த குதிரையை இழுத்துக் கீழே வீழ்த்திற்று. குதிரையின்மீதிருந்த ஔரங்கசீப்பும் கீழே விழுந்தார். எனினும் கண்ணிமைக்கு முன் அவர் உணர்வுற்று எழுந்து நின்று தமது வாளை உறையினின்றும் எடுத்துப் பிடித்துக் கொண்டு அதனால் அந்த மூரட்டு யானையை எதிர்த்தார்.

அதைக் கண்டார் அனைவரும் திகைப்பமை கொண்டு 'ஆகா!' என்றரற்றினர். அவர்களுக்கு அச் சமயத்தில் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. ஔரங்கசீப் யானையால் கிழிக்கப்பெற்று இறந்து போவார் என்று நினைத்தனர். ஆனால் தெய்வசங்கல்பம் வேறுவிதமாயிருந்தது. யானையின் துதிக்கைக்குள் ஔரங்கசீப் சிக்குந் தருணத்திலும் அவர் தைரியத்தைக் கைவிடாமல் நின்று தமக்குதவி வருகிற வரையில் அந்த யானையை எதிர்த்தார்! என்னே அவர் தைரியம்! அப்போது அவருடைய சகோதரரான ஷுஜா (Shuja) என்பவர் வந்து அவருக்கு உதவி புரிந்தார். அவ்விதம் போரியற்றி அவர் தமது தந்தை ஷாஜஹானிடம் சென்றார். தம்மை நோக்கி வந்துகொண்டிருந்த தமது புதல்வர் ஔரங்கசீப்பை, ஷாஜஹான் எதிர் கொண்டு சென்று, தமது ஆகமுறக் கட்டித் தழுவி, 'நீயே வீரன்; நீயே பகதூர்' என்று பாராட்டி வாய்விட்டுச் சொன்னார்.

அப்போது அவரைச் சூழ்ந்து நின்ற அரண்மனை உத்தியோகஸ்தர், 'பாதஷாவே! இளம்பிராயத்தில் கையிற் கத்தியுடன் புலியொன்றை எதிர்த்த உங்களுக்குப் பிறந்த இந்த அரசிளங் குமரருக்கு யானையை எதிர்க்கும் தைரியம் வந்தது ஆச்சரியமல்லவே' என மொழிந்தனர்.

மகிழ்ச்சி மிகுந்திருந்த ஷாஜஹான் ஔரங்கசீப்பை நோக்கி, நீயே பராக்கிரமசாலி; ஆயினும் 'நீ, அவ்வித அபாயகரமான தொழிலில் இனி நுழையாதே' என்றார்.

அதைக் கேட்ட ஔரங்கசீப், 'தந்தாய்! அந்த யானையுடன் சண்டை செய்யத் துணிந்த நான், அச் சண்டையில் இறந்திருந்தாலும் எனக்குப் புகழ்தானே! முடி சார்ந்த மன்னராயினும் முடிவில் மரண மடைவது நிச்சயந்தானே! நான் யானையை எதிர்த்து இறந்திருப்பின் எனக்கு இகழ்ச்சியில்லை யென்பதை நீங்கள் அறியாதது ஆச்சரியமாயிருக்கின்றது' என்று பதில் கூறினர்.

இவ்வதிசய சம்பவம் நிகழ்ந்த மூன்றும் நாள் அவருக்குப் பதினான்காம் வயது பூர்த்தியாகிப் பதினைந்தாவது வயது ஆரம்பமாயிற்று. அவர் பிறந்த அத் தினத்தைக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் அவர் யானையுடன் எதிர்த்த வீரச் செயலுக்காக ஜிஹாங்கீர் அவருக்கு அவர் நிறையளவு பொன் பரிசாக அளித்தார். சுதாக்கர் என்னும் யானையும் அவருடையது ஆயிற்று. ஐயாயிரம் பொன் நாணயங்கள் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. அரண்மனை முழுவதும் சந்தோஷமே நிரம்பி இருந்தது.

ஔரங்கசீப்பின் இளமைப் பருவத்தில் நடந்தேறிய சம்பவங்களில் முக்கியமான மற்றொன்றை இங்குக் குறிப்பிட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

ஔரங்கசீப் தன் தந்தையாராகிய ஷாஜஹான் சக்கரவர்த்திக்கு எக்காரணம் பற்றியோ தம்முடைய முதற் புத்திரராகிய தாராஷுகோ என்பவர்மீது மிகப் பற்று உண்டாயிருந்தது. அதனால் அவர் அக் குமாரருக்கு அதிக கௌரவம் கொடுக்கவேண்டு மெனக் கருதி ஒரு தினம்

அவரை வரவழைத்துப் பொக்கிஷத்திலிருந்து அவருக்கு ஏராளமான திரவியத்தைக் கொடுத்து அவரை நோக்கி, 'மகனே! இத்திரவியத்தைக்கொண்டு நீ யமுனை நதிக்கரையில் உன்னிஷ்டம்போல் அழகிய மாளிகை ஒன்றமைத்து அதில் உல்லாசமாக மகிழ்ந்திரு' என்று சொன்னர்.

அதைக்கேட்ட அவர் குமாரரான தாராஷுகோ அளவற்ற சந்தோஷத்துடன் அப்படியே செய்து மகிழ்வதாகக் கூறித் தந்தையார் கொடுத்த பெரும் பொருளைப் பெற்றுக் கொண்டு தமதிருக்கை யேகினர்.

ஏகியவர் தந்தையார் கொடுத்த பெரும் பொருளின் உதவியால் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு அழகிய மாளிகை ஒன்றை யமுனை நதிக்கரையில் ஏற்ற இடத்தில் சில மாதங்களில் கட்டி முடித்தார்

கட்டி முடிந்ததும் கிருகப் பிரவேசம் போன்றதொரு கொண்டாட்டம் நடக்கத் தொடங்கியது. அதற்காகவும், அந்த அழகிய மாளிகையைப் பார்க்கும் பொருட்டும் ஷாஜஹான், ஔரங்கசீப்பையும், வேறு இரண்டு குமாரர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு குறித்த நேரத்தில் அந்த மாளிகைக்குச் சென்றார்.

அங்குச் சென்றவுடன், மாளிகையின் பல பாகங்களையும், அவர்களுக்குத் தாராஷுகோ காண்பித்தார். கடைசியாகத் தாராஷுகோ அவர்களைத் தாம் அற்புதமாக அமைத்திருந்த நிலவறை ஒன்றைப் பார்க்கும்படி அழைத்துச் சென்றார். அங்குச் சென்றவுடன் தாராஷுகோ நிலவறையின் கதவைத் திறந்து அதற்குள் அவர்களை அழைத்துக் கொண்டு போனர். ஆனல் மற்றவர்களைப் போல் ஔரங்கசீப் நிலவறைக்குட் புகாமல் அதன் வாயிற்

படியிலேயே உட்கார்ந்து கொண்டார். அதைக் கண்ட ஏனையோர் ஆச்சரியப்பட்டு அவரைப் பரிகசித்தனர்.

நிலவறைக்குள் வந்த தம் தந்தையாரையும், மற்றைச் சகோதரர்களையும் தாராஷுகோ அங்கிருந்த அழகிய ஆசனங்களில் அமரச்செய்து அவர்களுக்கு அவ்வறையின் நேர்மையைப் பற்றிக் கூறினர். பின்னர் ஷாஜஹான் முதலியோர் நாலாவிடங்களிலும் சுற்றி அவ்வறையின் வனப்பைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் அடிக்கடி சில காரணங்களை முன்னிட்டுத் தாராஷுகோ நிலவறையின் வெளியிற் போவதும் வருவதுமாயிருந்தார். அப்பொழுதும் ஔரங்கசீப் தாம் நிலவறையின் வாயற்படியில் உட்கார்ந்த இடத்தை விட்டு அப்பாலிப்பால் நகரவில்லை.

அதைக்கண்ட தாராஷுகோ நிலவறைக்குட் சென்றவுடன் தமது தந்தையாரைப் பார்த்து, 'தம்பி ஔரங்கசீப் வரவர மகிழ்ச்சி குன்றியவனாக இராஜ புத்திரர்களுக்கு இருக்கவேண்டிய வீரமின்றிக் காணப்படுகின்றான். பாருங்கள் இப்பொழுது நம்மைப்போல் அவன் மகிழ்ச்சி இல்லாதவனாக எதையோ நினைத்துக்கொண்டு நிலவறையின் வாயிலில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான்' என்று கூறினர்.

கடைசியாக அனைவரும் நிலவறையை விட்டு வெளியே வந்தபோது ஷாஜஹான், தம்மைக் கண்டவுடன் எழுந்து நின்ற ஔரங்கசீப்பைப் பார்த்து, 'நீ மட்டும் இவ்வாறு இங்கேயே உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டிய காரணமென்ன?' என்று கேட்டார்.

கேட்டதும் ஔரங்கசீப் அவரைப் பார்த்து, 'இவ்வாறு நான் இங்கு உட்கார்ந்திருப்பதற்குக் காரணமிருக்

கின்றது. அதைக்குறித்துப் பிறகு சமயம் நேரும்போது சொல்லுகிறேன்' என்று கூறி வேறு பல விஷயங்களைப் பேசிக்கொண்டு அவரோடு அரண்மனைக்குச் சென்றார்.

பின்னர் ஒருநாள் ஔரங்கசீப் சொல்லிய வார்த்தை ஷாஜஹானின் நினைவில் வந்தது. உடனே அவர் ஔரங்கசீப்பைத் தனிமையில் சந்தித்து, 'அன்று நீ நிலவறைக்குள் எங்களோடு வராமலிருந்ததற்குக் காரணமென்ன? சொல்லுகிறேன் என்றாயே' என்று கேட்டார்.

கேட்டதும் ஔரங்கசீப் அவரைப் பார்த்து, தந்தையே! நீங்கள் நிலவறைக்குள் என்சகோதரர்களோடு சென்றபோது நான் அவ்வறையின் வாயிலேயே உட்கார்ந்து கொண்டிருந்ததற்குக் காரணம் இதுதான். நீங்கள் நிலவறைக்குட் சென்று எதையும் கவனியாமல் சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள். அப்போது என் மூத்த சகோதரர் தாராஷுகோ அடிக்கடி வெளியில் வரவேண்டிய காரணமென்ன? முதலிலேயே நான் முன்னெச்சரிக்கையாக நிலவறையின் வாயிற்படியில் உட்கார்ந்திராவிட்டால் அடிக்கடி வெளியே வந்துகொண்டிருந்த தாராஷுகோ இராஜ்ஜிய ஆசையினால் நிலவறையின் கதவை மூடிவிட்டிருந்தால் உள்ளிருந்த உங்களுடைய கதி என்னவாகுமென்பதைச் சற்று ஆலோசித்துப் பாருங்கள். இதனால் தான் நான் நிலவறையின் வாயிலிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன். நான் இவ்வாறு சொல்லியதற்காகத் தாங்கள் என் மீது சீற்றங் கொள்ள மாட்டீர்களென்று நம்புகிறேன்' என்று சொல்லி முடித்தார்.

முடித்ததும் ஔரங்கசீப்பின் ஆதாரமற்ற சந்தேகத்திற்கு ஷாஜஹான் வியப்பும் விசனமும் அடைந்தார்; வாய்விட்டுச் சிரித்தார். வேறென் செய்வார்!

இவ்வாறு இளம்பருவத்திலேயே ஔரங்கசீப் தமது மூத்த சகோதரரிடத்துக் கொண்டிருந்த பொறுமையும் சந்தேகமும் நாளடைவில் மற்ற சகோதரர்களின் மீதும், இராஜாங்க உத்தியோகஸ்தர்களின் மீதும் பரவியது.

ஔரங்கசீப்பின் இளம்பருவத்தில் நேர்ந்த சம்பவங்களில் முக்கியமானவை இவைகளே யாகும்!

இரண்டாவது அத்தியாயம்.

ஔரங்கசீப்பின் மணவினை.

1636-ம் வருஷம் ஜூலைமாதம் பதினான்காம் தேதி ஷாஜஹான் ஔரங்கசீப்பை அவரது யுத்தவன்மையைக் கண்டு ஆனந்தமும், மதிப்பும் கொண்டவராய்த் தட்சிணத்திற்கு இராஜப் பிரதிநிதியாக அனுப்பினர்.

ஔரங்கசீப் அவ் உத்தியோகத்தை 1644-ஆம் வருஷம் வரையில் வகித்திருந்தார். இந்த எட்டு வருடங்களுக்குள் அவர் தமது அம்மான் ஷேயிஸ்டகான் என்பாரைத் தமக்குப் பதிலாக வைத்துவிட்டு நான்குமுறை வட இந்தியாவிலிருந்து வந்த தமது தகப்பனாரைப் பார்த்து வரவேண்டுமென்று போயிருந்தார்.

முதன் முறை அவர் அவ்விதம் போயிருந்தபோது அவருக்கு விவாஹம் நடந்தது. ஷாநவாஸ்கான் என்பவருடைய அருமந்த புதல்வியாகிய தில்ரஸ் பானுவையே அவர் மணந்து கொண்டார். அவ்வம்மை இருபது வருடம் அவருடன் இல்வாழ்க்கை புரிந்து, 1657-ம் வருடம் அக்டோபர் மாதம் எட்டாந் தேதி, பிரசவித்த பின்னர் ஏற்பட்ட வியாதியினால் இறந்து போனார்.

அவ்வம்மை பீகம் என்னும் பட்டம் வகித்துத் தமது கணவரைத் தமது திறமையினாலும், பிடிவாத குணத்தினாலும் ஒருவாறு அடக்கி ஆண்டு வந்தார்.

அவ்வம்மை வயிற்றில் ஜனித்த மக்களில் முக்கியமானவர்கள். ஜேப்-உந்-நீஸா என்னும் புதல்வியும், ஆஸம், அக்பர் என்னும் இரு புதல்வருமே யாவர்.

ஔரங்கசீப்புக்குத் தமது ஜேஷ்ட புத்திரியாகிய ஜேப்-உந்-நீஸாவால் வயோதிக பருவத்தில் அதிக மனமகிழ்ச்சியுண்டாயிற்று.

ஔரங்கசீப்புக்குத் தமது முதல் மனைவி தில்ரஸ் பானுவைத் தவிர வேறு பல மனைவியரும் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் முதல் பகதூர்ஷா, முகாஸம் என்பவர்களின் தாயாரும் காஷ்மீர தேசத்திலிருந்த இரஜ்சௌரி என்னும் ஊரின் மன்னனாகிய இராஜராஜாவின் புதல்வியுமாகிய இரகமத் உன்னீஸாவும், மீர் உன்னீஸாவின் தாயாராகிய ஔரங்கபாதி மஹாலும், காம்பாதுஷாவின் தாயாராகிய உதயபுரி மஹாலும், ஹீராபாய் என்னும் ஸெய்யின பாதியுமாவர்.

இவர்களில் உதயபுரி மஹால் என்பவள், மானுஸ்சி (Manucci) என்னும் ஐரோப்பிய யாத்ரீகர் சொல்லுகிறபடி ஷர்கேஷியா என்னும் ஊரில் அடிமைப் பெண்ணாக விற்கப் பட்டு ஔரங்கசீப்பின் மூத்த சகோதரர் தாராஷுகோவின் அந்தப்புரத்திலிருந்தவளே யாவாள். பிற்காலத்தில் ஔரங்கசீப்புக்கும், தாராஷுகோவுக்கும், இராஜ்ஜிய விஷயமாக நடந்த சண்டையில் தாராஷுகோ கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட பின்னர், ஔரங்கசீப் அவருடைய அந்தப்புரத்திலிருந்த உதயபுரி மஹால் என்பவ

ளைத் தமது அந்தப் புரத்தில் சேர்த்துக் கொண்டார். உதய புரி மஹாலே இராஜபுத்திரஸ்திரீ என்றும் சிலர் கூறுவர்.

ஔரங்கசீப்பின் மேற்கூறிய மனைவியர்களில் ஒருத்தியாகிய ஹீராபாய் என்னும் ஸெயினபாதி என் பவள் முதன் முதல், ஔரங்கசீப்பின் சொந்த சிற்றன்னை யின் கணவர் மீர்கலீல் என்பவருடைய அந்தப்புரத்தி லிருந்தாள். ஔரங்கசீப் தட்சணத்திற்குப் போகும்போது வழியில் இருந்த சிற்றன்னையின் மாளிகைக்குச் சென்றார். சென்று அங்குத் தங்கியிருக்கையில் அவர் பூந்தோட்டத் தில் ஹீராபாய் என்னும் ஸெயின பாதியைக் கண்டார். கண்டதும் அவளையும் தமது அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்ள முயன்று அம் முயற்சியில் சித்திபெற்றார். அவர் தமது மற்றெல்லா மனைவியர்களைப் பார்க்கிலும் அவள் மீது அளவுகடந்த பிரியம் பாராட்டி வந்தார். அதற்கு உதாரணமாக ஒன்று கூறுவோம்.

ஔரங்கசீப் கொரானில் கூறியுள்ள கட்டளைகளை எள் ளளவும் தமது வாழ்நாட்களில் மீறி நடந்தவரன்று. அவர் மதுபான மென்றால், விஷத்தைப்போல் வெறுக்கக் கூடிய வர். ஒருநாள் அவர் மனத்தைக் கவர்ந்த ஹீராபாய் தனது கரத்தில் மதுபானம்நிறைந்த பொற்கிண்ணத்தைவைத்துக் கொண்டு அவரைப் பார்த்து, 'அன்பு நிறைந்த பாதுஷா வே! உங்களுக்கு என்மீது உள்ளன்பு இருக்குமானால், அதற்கு அடையாளமாக, இதோ என் கரத்தில் பொற் கிண்ணத்திலுள்ள மதுபானத்தை அருந்துங்கள் பார்க்க லாம்' என்று மிகுந்த ஆதரவுடன் கேட்டாள். அவர் சிறி தும் ஆலோசியாமல் அவள் கரத்தில் இருந்த பொற் கிண் ணத்தை வாங்கி, அதிலிருந்த மதுவைப் பருகுவதற்காகக் கிண்ணத்தைத் தமது வாயின் அருகே கொண்டுபோனார்.

உடனே ஹீராபாய் அந்த மதுவில் ஒரு துளியும் அவர் வாயிற்படாவண்ணம் தடுத்து, 'பாதுஷாவே! நீங்கள் என்மீது கொண்டுள்ள அன்புக்கு மெச்சினேன்' என்று சொல்லி அவர் கரத்திலிருந்த மதுபானத்தை வலிய வாங்கிக் கீழே ஊற்றிவிட்டாள்.

இவ்வாறு தாம் அன்புடன் நேசித்துவந்த ஹீராபாயுடன் ஔரங்கசீப் நெடுநாள் வாழக் கொடுத்துவைக்கவில்லை. அவள் அவருடைய அந்தப்புரத்திற்குவந்த இரண்டு வருடங்களுக்குப் பின்னர் இறந்துபோனாள்.

ஹீராபாய் இறந்ததனால் ஔரங்கசீப் மனமுடைந்து பெரிதும் வருந்தினர். பிற்காலத்தில் அவர் மனக்கிளர்ச்சியின்றி இருந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

மூன்றுவது அத்தியாயம்.

தட்சிண தேச சரித்திரம்.

"புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து" - நீதிநெறிவிளக்கம்.

உலகப் பிரசித்தி பெற்ற உரோம தேசத்து ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) உரோமாபுரி ராஜ்ய உரிமை பெறுவதற்குச் செய்த யுத்தத்தில், அடைந்த வெற்றிக்குக் காரணமாயிருந்தது, கால் (Gaul) என்னும் தேசத்தில் அவர் அடைந்திருந்த யுத்தசாதனப் பயிற்சியே யாகும். அவ்வாறே ஔரங்கசீப் மொகல் இராஜ்ஜியத்தைத் தமது கைவசப் படுத்துவதற்கு அவர் தட்சிண தேசத்தில் செய்த போரினால் ஏற்பட்ட அனுபவம் அனுகூலமாய் இருந்ததென்று சரித்திர ஆராய்ச்சி ஆசிரியர் கூறுவார்.

தட்சிணத்திற்கு அவர் போகவேண்டியதற்குக் காரணம் யாது? இதற்குத் தகுந்த விடையைத் தெரிந்து கொள்ளுவதற்கு, அக்பர் காலத்திலிருந்து மொகலாய சக்கரவர்த்திகளுக்கும், தட்சிண தேசத்திற்கும், ஏற்பட்ட சம்பந்தத்தை எடுத்துச் சொல்ல வேண்டுவது அவசியமாயிருக்கிறது.

1591-ஆம் வருட முடிவில் அக்பர் சக்கரவர்த்தி தென்னிந்தியாவைத் தமது கைவசப்படுத்தினலொழியத் தமக்கு மனம் நிம்மதியா யிரா தென்று தட்சிண தேசத்திற்குத் தூதர்களை அனுப்பினர். அதுசமயம் காந்தேஷ் (Khandesh) பிஜப்பூர் (Bijapur,) கோலகொண்டா (Golakonda,) ஆமத் நகரம் (Ahmed nagar) என்னும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த தட்சிண தேசத்தில் மேற்கூறிய பிரிவுகளில் இருந்த அரசர்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையின்றி அடிக்கடி பகைமேற்கொண்டு யுத்தம் புரிந்துகொண்டிருந்தனர்.

இவர்களுக்குள் ஏற்பட்டிருந்த ஒற்றுமைக் குறைவு அக்பர் தட்சிணத்தில் தாராளமாக நுழைவதற்குச் சாதகமாயிருந்தது.

அக்பர் அனுப்பிய தூதர்களுக்கு மரியாதை செய்து, அக்பரின் ஆட்சியின் கீழ் அடங்குவதற்குச் சம்மதித்தவன் காந்தேஷ் தேசத்து அரசன் ஒருவனே யாவன். மற்றைய அரசர்கள் அக்பருக்கு அடங்குவதில்லை யென்று தங்களிடம் வந்த அக்பரின் தூதர்களின் வசம் மனத்திடத்துடன் சொல்லி யனுப்பினர்கள்.

தமக்கு அவர்கள் அடங்குவதில்லை யென்று சொன்னதைக் கேட்டவுடனே அக்பருக்குக் கோபம் பொங்கியெழுந்தது. அதனல் 1595-ம் வருடம் ஆமத் நகரை

முற்றுகை செய்வதற்கென்று அக்பர் பலத்த சேனை யொன்றை அனுப்பினர். அந்த நாட்டிலிருந்த இராஜத் துரோகிகளின் முயற்சியால் மொகலாய சேனைகள் ஆமத் நகரத்தினுள் நுழைந்தன. அதே வருஷம் டிசம்பர் மாதத் தில் முற்றுகை ஆரம்பமாயிற்று. அம்முற்றுகையில் தலைமை வகித்து நின்றவன் அக்பரின் இரண்டாவது குமாரனை மூரத் (Murad) என்பவன். அம் முற்றுகையின்போது ஆமத் நகரத்துக்குப் பக்க பலமாயிருந்து, போர்க்கவசம் பூண்டு வாளேந்திய கையுடன் சேனைகளை முன்னின்று நடத்தி மொகலாயரை நடுங்க வைத்தவள் அரசகுலத் துதித்த சாந்த் பீபி (Chand Bibi) என்னும் பிஜப்பூர் இராணியே யாவள்.

சாந்த் பீபி உயிருடன் இருக்கும்வரையில் அக்பரின் குமாரனை மூரத்தென்னும் அரசிளங்காளை ஆமத் நகரத் தைத் தன்வசப்படுத்தச் செய்த முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின என்றே கூறலாம்.

வெகு விரைவில் சாந்த்பீபி ராணி தன் எதிரிகளின் வஞ்சனையினாலும், தன் இனத்தாரின் துரோகச் செய்கை யினாலும் வீணே கொலையுண்டிறந்தாள். அவள் இறந்த செய்தி அக்பருக்கு எட்டியது. அவர் உடனே தமது கடைசிக் குமாரனை தனியல் என்பவனை ஆமத்நகரை முற்றுகை யிட்டுவருமாறு அனுப்பினர். அவன் அங்குச்சென்று மும் முரமாக யுத்தம் செய்தான். 1600-ஆம் வருடம் ஆமத் நக ரின் ஒருபாகம் அவன் கைவசப்பட்டது. கைவசப்பட்டதும் அக்பர் தமது கைவசப்பட்ட அப் பாகத்தைத் தமது ஆட் சிக்குட்பட்ட மாகாணங்களில் ஒன்றாக்கினர்.

1591-ஆம் வருடம் அக்பருக்கு அடங்குவதாக ஒப்புக்கொண்ட காந்தேஷ் தேசத்தரசன் அக்பருக்கு நேர் விரோதியாக நின்றான். அவனை அடக்க அக்பர் ஒரு சேனையை அனுப்பித் தட்சிணதேசத்திற்குள் தாராளமாய் நுழைவதற்கு வழிகாட்டியாயிருந்த அசுரகிரி (Asirgarh என்னும் பலத்த கோட்டையை முற்றுகை யிட்டார். அம்முற்றுகை பதினைரு மாதங்கள் வரை நடந்தேறி, 1601 - ஆம் வருடம் வெற்றி பெற்று அசுரகிரிக் கோட்டை மொகலாயரின் கைவசப்பட்டது.

அக்பர் தட்சிணத்தில் தமது கைவசப்பட்ட இடங்ளுக்குத் தமது குமாரன் தனியலை இராஜப் பிரதிநிதியாக நியமித்தார். தட்சிண தேசத்தில் அக்பரின் முயற்சியால் மொகலாய இராஜ்ஜியத்திற் குட்பட்டவை ஆமத்நகரின் ஒருபாகமும், காந்தேஷ் தேசமுமேயாகும்.

அக்பருக்குப் பிறகு அவர் குமாரரில் ஒருவரான ஜிஹாங்கீர், என்பவர் டில்லியில், மொகலாயச் சக்கரவர்த்தியாகச் சிம்ஹாசன மேறினார்.

ஜிஹாங்கீரின் காலத்தில், அக்பர், 1600-ஆம் வருடம் தம் வசப்படுத்திய ஆமத் நகரம் மறுபடியும் அப்பிரதேசத்தாரால் மொகலாயரின் ஆளுகையினின்றும் மீட்கப்பட்டது. அம் மீட்சிக்குக் காரணமாய் நின்றவன் மாலிக் காம்பர் (Malik Amber) என்னும் அபிஸீனிய நாட்டினின்றும் வந்திருந்த மந்திரியே யாவன். ஜிஹாங்கீர் அவனை அடக்குவதற்கு அநேக தடவை முயன்று, கடைசியில், ஒருவாறு வெற்றி பெற்றனர்.

அவருக்குப் பிறகு அவர் குமாரரான ஷாஜஹான் தட்சிண தேசத்தில் 1603-ஆம் வருடத்திலிருந்து 1637-

ஆம் வருடம் வரையில் யுத்தம் செய்து ஆமத் நகரை மீண்டும் மொகலாயரின் ஆளுகைக் குட்படுத்தினர். கோல கொண்டா, பிஜப்பூர் ஆகிய இவ்விரு நாடுகளின் அரசர்களையும் தமக்கு அடங்கச்செய்து வருஷா வருஷம் அவர்கள் தமக்குக் கப்பங்கட்ட ஏற்பாடுசெய்தார். 1621-ஆம் வருடம் பாரசீகர் கைவசப்பட்டிருந்த காந்தேஷ் தேசத்தை மீளவும் தம்வசப் படுத்தினர்.

தமது தந்தையாராகிய ஷாஜஹானின் காலத்திலேயே ஔரங்கசீப் இரண்டுமுறை தட்சிணத்திற்கு இராஜப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். அவர் முதன் முதற் சென்ற போது 1636-ஆம் வருடம் மே மாதம் வரையில் அங்கே இருந்து, பின் தமது பதவியை இராஜிநாமா கொடுத்துவிட்டுப் பக்கீராகப் போய்விடுவதாகச் சொல்லிப்புறப்பட்டார்.

தமது மூத்த சகோதரரான தாராஷுகோ என்பவர் மீது கொண்ட பொறுமையும் விரோதமும், தமது தந்தை ஷாஜஹான் பட்சபாதமாகத் தம்மினும் அதிகமாகத் தாராஷுகோவை நேசித்து வருகிறார் என்னும் எண்ணமும் ஒன்றுகச்சேர்ந்து அவர் மனதில் ஒருவிதவெறுப்பையுண்டாக்கி அவரைத் தாம் வகித்திருந்த பதவியை இராஜிநாமா செய்துவிடத் தூண்டின

இவ்விதம் ஔரங்கசீப் பக்கீராகப் போய்விட்டால் அவரைப்போல் வெகு திறமையுடன் மொகலாய சேனையை நடத்துபவர் எவரும் இலராவர் என்று மனதில் நினைத்து, ஷாஜஹான் அவருடைய நிர்ணயத்தைப் பல முயற்சிகளால் மாற்றி இந்தியாவுக்கு வடமேற்கே யுள்ளவையும், பகைவர்கையில் சிக்கியவையுமான பாக் (Balkh), பதக்ஷான்

(Badakshan) என்னும் ஊர்களை அப் பகைவர்களிட மிருந்து மீட்கும்பொருட்டு ஔரங்கசீப்பை அனுப்பினர். ஆனல் ஔரங்கசீப் அங்கு நடந்த யுத்தங்களில் வெற்றி பெறவில்லை. ஏனெனில், அந்நாடுகள் இந்தியாவுக்கு வெகு தூரத்திலிருந்ததுமன்றி அவைகளின் சீதோஷ்ண நிலைமை மொகலாய சேனைகளுக்குத் தகுந்ததாயுமிருக்கவில்லை. ஆதலால் ஔரங்கசீப் மிகுந்த பிரயாசையுடன் திரும்பிவந்தார். திரும்பி வந்தவர் வாளாவிருக்கவில்லை. தட்சிணத்தில் மொகலாய ஆட்சிக்குட்பட்டிருந்த காந்தேஷ் தேசத்தை 1648-ஆம் வருடம் பாரசிகர் மறுபடியும் பிடித்துக்கொண் டமையால், ஔரங்கசீப் அதை மீட்கும்பொருட்டு அங் குப் போனர். பாரசிகருங்கும், ஔரங்கசீப்புக்கும் நடந்த இரண்டு யுத்தங்களிலும் ஔரங்கசீப் தோல்வியுற்றார். காந்தேஷ்தேசம் இறுதியில் மொகலாயரிடமிருந்து பிரிந்து பாரசீகர் கைவசப்பட்டது.

ஷாஜஹான் டில்லியில் சக்கரவர்த்தியா யிருக்கும் போதே ஔரங்கசீப் இரண்டாம்முறை தட்சிணத்திற்கு இராஜப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். அவர் அவ்வி டத்தில் 1653-ஆம் வருடம் முதல் 1658-ம் வருடம் வரை யில் ஐந்து வருஷம் ஆட்சிசெய்தார்.

1656-ஆம் வருடம் ஔரங்கசீப் மொகல்அரசஉரிமை யைப் பெறுதற்கு டில்லிக்குப் போவதற்குமுன் அவர் காந் தேஷ், பீரார் தெலிங்கணம், ஆமத்நகரம் இவைகளின் ஆதி பத்தியத்தை முற்றிலும் பெற்று, அவற்றுடன் சோல கொண்டா, பீஜப்பூர் என்னும் நாடுகளையும் சேர்த்துத் தட்சிணதேசம முழுவதையும் தமது தந்தையின் ஆளுகைக் குக் கொண்டுவரும் சமயம் நெருங்கியிருந்தது. ஆனல், அரச உரிமை பெறவேண்டுமென்று அவருக்கிருந்த எண்

ணம் நெருங்கிவந்த சமயத்தை விடும்படி செய்தது. அதே சமயம் ஔரங்கசீப் தமது எண்ணம் வெற்றிபெற வேண்டு மென்று டில்லிக்குப் புறப்பட்டார்.

ஆதலால், தட்சிணத்தில் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பின்னர் ஔரங்கசீப் தாம் மொகல் சக்கர வர்த்தி யானபிறகே மறுபடியும் தட்சிணத்திற்கு வந்தார். இவ்வாறு அவர் வருவதற்கிடையில் பல வருடங்கள் சென் றன. சக்கரவர்த்தி யானபிறகு அவர் தட்சிணத்தில் செய்த விஷயங்களைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

நான்காவது அத்தியாயம்.

சகோதரத் துரோகம்.

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனை
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே —விஞ்சு [யும்
வீரதமே பூண்டிநீந்த மேதினியை யாண்ட
பரதனையும் இராமனையும் பார்." —தனிப்பாடல்.

ஷாஜஹான் திடீரென நோயுற்று வருந்தினர். அச் சமயமே அரச உரிமை பெறுவதற்குத் தகுந்த தென்று எண்ணி அவருடைய குமாரர்கள் ஒருவரோ டொருவர் முரண்பட்டுச் சண்டையிட லாயினர்.

ஷாஜஹான் மிகப் பற்றுவைத்திருந்த அவருடைய மூத்தகுமாரன் தாராஷுகோ தமது தந்தை நோயால் வருந்திக் கிடந்தபோது லாகூர், முல்டான் என்னும் இரு நாடுகளுக்கும் இராஜப் பிரதிநிதியாக இருந்து வந்தார். திடீரெனத் தமது தகப்பனர் நோய் வாய்ப்பட்ட செய்தியைக் கேட்டதும், அவ்விரு நாடுகளின் ஆட்சியைத் தமது குமாரரிடம் விட்டுவைத்துத் தாம் டில்லிக்கு வந்து அங்குச் சக்கரவர்த்திக்குப் பதிலாக ஆட்சி செய்யலானர்.

அதை அறிந்த ஷுஜா என்னும் அவருடைய சகோதரன் தானே டில்லிக்குப் பாதுஷாவாக வேண்டும் என்னும் நோக்கத்துடன் தான் இராஜப் பிரதிநிதியாக இருந்த வங்காளத்தை விட்டுச் சேனையுடன் டில்லியை நோக்கிப் புறப்பட்டான். தாராஷுகோ அதை அறிந்துகொண்டு தமது குமாரரில் ஒருவனன ஸுலைமான் ஷுகோவைச் சேனையுடன் அவனை எதிர்க்கும்படி அனுப்பினர். அங்கு

அவ்விருவருக்கும் நடந்த யுத்தத்தில் ஷுஜா தோல்வியுற்று வந்தவழி நோக்கி ஓடிப்போனன்.

வட இந்தியாவில் இவ்வாறு நடந்துகொண்டிருந்த போது தட்சிணத்தில் இராஜப் பிரதிநிதியாய் இருந்துவந்த ஔரங்கசீப், கூர்ஜரத்தில் இராஜப் பிரதிநிதியா யிருந்த மூரத் என்னும் தமது சகோதரனுடு கடிதப் போக்குவரவு வைத்துக்கொண்டார். அவ்வப்போது அவர் அவனுக்கு எழுதிய கடிதங்களில் தமக்கு உலகஇச்சைஇல்லையென்றும், இவ்வுலக இச்சை நிலையற்றதென்றும், தமது தகப்பனுருக்கே துரோகம் நினைத்த நன்றியற்ற தாராஷுகோவை, நீங்களும் நானுமாகச் சேர்ந்து, அடக்கவேண்டு மென்றும், தாராஷுகோவைப் போன்ற மதப் பற்றற்ற துரோகிகள் இவ்வுலகில் நிலைத்திருப்பது அடாதென்றும் எழுதிவந்தார். மூரத் அக்கடிதங்களை வாசித்துத் தானும் ஔரங்கசீப்பும் ஒன்று சேரவேண்டிய முயற்சிகளைச் செய்தான். 1858-ம் வருடம் மூரத்தும் ஔரங்கசீப்பும் ஒன்று சேர்ந்து பாத்த பாடு (Fathabad) என்னும் சாமகிரியில் தாராஷுகோவை எதிர்த்தார்கள். அச் சண்டையில் தாராஷுகோவின் பக்கம் சேர்ந்திருந்த இராஜபுத்திர வீரர்கள் வெகு மும்முரமாக எதிரிகளின் சேனைகளுடன் சமராடினர். தாராஷுகோவும் அவ்விடத்தில் ஆண் சிங்கம்போல் கர்ஜித்து நின்றார். அப்போது அவர் தம் முன்னே எதிர்த்து நின்ற வீரர்கள் பலரைக் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தினர். அதனால் அவர்பக்கமே வெற்றி இருக்கிறதாகத் தோன்றியது. தோன்றியதேயன்றி வெற்றி யுண்டாக வில்லை. ஏனெனில், தாராஷுகோ துரதிர்ஷ்ட வசத்தால் தாம் ஏறியிருந்த யானையைவிட்டுக் கீழே இறங்கி அங்கு நிறுத்தப்பெற்றிருந்த குதிரையின்மீது ஆரோகணித்துச்

சண்டைக்குத் துவக்கம் செய்தார். அவர் செய்த அச் செய்கையானது அவருக்கே கேட்டை விளைவித்தது. எவ்விதமெனில், யானைமீது அவர் இல்லாததைக் கண்ட அவருடைய சேனைவீரர்கள் அவர் இறந்துவிட்டதாகக் கருதிப் பின்வாங்கி ஓடலாயினர். அதனால் ஔரங்கசீப்பும், மூரத்தும் வெற்றிபெற்றனர். யுத்த களத்தில் ஔரங்கசீப் மூரத்தை மிகவும் புகழ்ந்து பேசி ஆக்ராவை நோக்கிச் சென்றார்.

அவர் வெற்றிபெற்று வருவதை அறிந்த ஷாஜஹான் அவருக்கு மரியாதையாக 'ஆலம்கீர்' அல்லது 'உலக ஜய வீரன்' என்று செதுக்கப்பட்டிருந்த வீரவாள் ஒன்றைக் கொடுத்தனுப்பினர். அப்போதே அங்கிருந்த ஜனங்கள் ஔரங்கசீப்பே பாதுஷாவாக வருவார் என்று நினைத்தார்கள். அவர்கள் நினைத்ததே சரியாக முடிந்தது. அரச உரிமை என்னும் பேரவாவின் கையிற் சிக்கியிருந்த ஔரங்கசீப் மூரத்தை எவ்விதத்திலேனும் தொலைக்க வேண்டுமெனக் கருதித் தகுந்த சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். ஒருதினம் அவர் மூரத்தை நன்றாகக் குடிக்கச் செய்து அக் குடி வெறியில் அவன் மயங்கி இருக்கையில், மொகலாய பிரபுக்களின் முன்னிலையில் அவனைக் கொண்டு வந்து நிறுத்தி, அவர்களைப் பார்த்துப் 'பிரபுக்களே! இவன் இருக்கும் கோலத்தைப் பாருங்கள்! நமது கொரானில் கூறியபடி குடியைத் தவிர்க்காமல் அதைக் கைக்கொண்டிருக்கிறானே! இவன் எப்படி அரசுரிமைக்குப் பாத்திரனாவான்? நீங்களே யோசித்துக் கூறுங்கள்' என்றார். அதைக்கேட்ட அந்தப் பிரபுக்களெல்லோரும் ஔரங்கசீப்பை மெச்சி அவர் சொல்லுவதே சரியென்று ஒப்புக் கொண்டார்கள். அத்தருணமே ஔரங்கசீப் மூரத்தை இரகசியமாகக் கொண்டுபோய்ச் சிறையிலிடுவித்தார்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு மூரத் யாரையோ கொலை செய்து விட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் குவாலியர் என்னும் இடத்தில் கொலையுண்டிறந்தான்.

ஷாஜஹான் உயிருடனிருக்கும்போதே அவருக்குப் பதிலாக டில்லியில் அரசாளத் தொடங்கிய தாராஷுகோ என்பவரை நன்றியற்ற மகனென்று கூறிய ஔரங்கசீப்பே இப்போது, நன்றியற்ற மகனுகித் தமதுதகப்பனுரை அவர் இருந்த இடத்திலேயே சிறையிட்டார். ஷாஜஹான் 1658-ம் வருடத்திலிருந்து 1666-ம் வருடம் வரையில் சிறையிலிருந்து பிணிவாய்ப்பட்டு உயிர் விட்டார்.

துரதிர்ஷ்டசாலியான தாராஷுகோ இன்னெரு சேனையைத் தயாரித்து அஜ்மீரத்தில்ஔரங்கசீப்பைஎதிர்த்தார். அப்போரிலும் ஔரங்கசீப்பே வெற்றி பெற்றார். அப்போதே தாராஷுகோதிகிலடைந்துசிந்துதேசத்திற்கு ஓடினர். அங்கு முன்னெரு காலத்தில் தம் உயிருக்குவந்த ஆபத்திலிருந்து தாராஷுகோவினுல் காப்பாற்றப்பட்ட பட்டாணிய சாதியாெருவன் அவர் முன்னே தனக்குச் செய்த உதவியையும் நினையாமல், செய்ந்நன்றி கொன்றவனுய், அவரை ஔரங்கசீப்பின் ஆட்களுக்குக் காட்டிக் கொடுத்தான். தமது கையிற் சிக்கிய தாராஷுகோவுக்கு ஔரங்கசீப் கந்தைத் துணியை உடுத்தி அவரை டில்லி நகரின் வீதிகளில் அந்தமற்ற ஒரு யானையின்மீது ஏற்றிப் பவனி வரச் செய்தார்.

ஆனுல் அவரெண்ணியபடி தாராஷுகோவை ஒருவரும் நிந்திக்கவில்லை. ஜனங்கள் அவருக்கு நேர்ந்த துன்பத்தைக் கருதி அவர்மீது பெரிதும் பரிதாபப் பட்டார்கள். ஆயினும் பரிதாபப்பட்ட அவர்களால் அவருக்கு ஒரு தவியும் செய்யக்கூடவில்லை.

ஜனங்களுக்குத் தாராஷுகோவின் மீதிருந்தநல்லபிப் பிராயத்தை ஒருவாறு அறிந்துகொண்ட ஔரங்கசீப் அவ ரை உயிருடன் வைத்தால் தம்க்கே ஆபத்துவரக்கூடுமென் பதை உணர்ந்து 'மதத்துவேஷி' என்று அவர்மீது குற்றஞ் சாட்டி அவரைக் கொலைசெய்து விட்டார். தாராஷுகோ வின் இரு புத்திரர்களும் தமது தந்தையடைந்த கதியையே தாமும் அடைந்தனர். இது நிற்க,

மூன்னர்த் தாராஷுகோவுக்குத் தோற்று ஓடிய ஔர ங்கசீப்பின் சகோதரர்களில் ஒருவரான ஷுஜா என்பவர் தாராவின் கதியையும் கருதாமல் ஔரங்கசீப்புக்கு விரோத மாக வங்காளத்திலிருந்து சண்டையிட வந்தார். சேனை பல மிகுந்த ஔரங்கசீப்புடன் அவர் போர்புரிந்து வெல்வ தெப்படி? அவர் ஔரங்கசீப்புக்குத் தோற்று அரக்கான் தேசத்திற்கு ஓடிப்போய் அங்கே இறந்துபோனர்.

இனி ஔரங்கசீப்பை எதிர்ப்பார் எவருமில்லை. அவர் டில்லியில் பாதுஷாப் பட்டம்வகிக்காவிட்டாலும் பாதுஷா வாகவே இருந்தார். ஷாஜஹான் இறந்த பிறகே ஔரங்க சீப் பாதுஷாப் பட்டம் வகித்து அரசாளத் தொடங்கினர்.

அவர் அரசாளத் தொடங்கிய பொழுது அவருக்கு வயது நாற்பது. அவர் டில்லியில் சிம்மாசனம் ஏறிய வுடனே அஸாம், அரக்கான் என்னும் இரு நாடுகளைக் கைப் பற்றினர். அவ் விரு நாடுகளையும் கைப்பற்ற அவர் செய்த யுத்தங்கள் இந்துஸ்தான் என்னும் வட இந்தியாவின் அமைதியைச் சிறிதும் கெடுக்கவில்லை. அவர் சிம்ஹாசனம் ஏறியதுமுதல் இருபது வருடம் வரையில் வட இந்தியாவில் அமைதியே குடிகொண்டிருந்தது. அதன் பிறகு அவர் இறக்கும் வரையில் சண்டைகள் மிகுந்தன. அச் சண்டை களுக்குக் காரணம் அவருடைய மதக்கோட்பாடுகளே

யாகும். தம் மனத்தில் மதப் பற்று ஊன்ற ஊன்ற அவர் இந்துக்களைப் பல விதங்களில் இம்சிக்கத் தொடங்கினர்.

இவ்விதம் அவர் செய்த பல செய்கைகளால் இந்துக்கள் அவருக்கு விரோதிகளாயினர். இரஜபுத்திரர்களும் இந்துக்களேயாதலால் அவர்களும் ஔரங்கசீப்பின் மீது அதிருப்தி கொண்டனர்.

ஔரங்கசீப் சிம்ஹாசனம் ஏறிய பிறகு இருபது வருடங்கள் வரையில் எங்கும் அமைதி குடிகொண்டிருந்ததென்று முன்னரே கூறியிருக்கின்றோமல்லவா? அந்தச் சமயத்தில் ஔரங்கசீப் தட்சிணத்தைப் பற்றி நினைத்தார். அப்போது கோலகொண்டாவில் அரசாட்சி சீர்கெட்டிருந்தது. அந்நாட்டு மன்னன் அபுல்ஹாஸன் என்பவன் உலக இன்பத்தைப் பெரிதும் கருதி அரசியலை மொகல் உத்தியோகஸ்தரிடம், விட்டு விட்டுச் சச்சந்தனைப் போலானன்.

ஔரங்கசீப் அங்கு அமைதியை நிலைநிறுத்தத் தமது குமாரர் முயாசீம் (Muazeem) என்பவரை அனுப்பிவைத்தார். அங்குச் சென்ற முயாசீம் தாம் கருதி வந்த விஷயத்தில் கவனத்தைச் செலுத்தாது தாமதம் செய்து வந்தார். கடைசியாகக் கோலகொண்டாவின் தலைநகரான ஹைதராபாக்கத்தை முற்றுகையிட்டுத் தம்முடன் வந்த போர் வீரர்களைக் கொள்ளையடிக்கத் தூண்டினர். அபுல்ஹாஷன் அப்போது கோலகொண்டாவை அடுத்திருந்த மற்றொரு கோட்டையில் அடைக்கலம் புகுந்தான். 1685-ம் வருடம் அவனுக்கும் முயாசீமுக்கும்ஓர்உடன்படிக்கை ஏற்பட்டது. அவ் உடன்படிக்கையில் கண்ட நிபந்தனைகள் ஔரங்கசீப்புக்கு வெறுப்பைத் தந்தன. அதனால் அவர் தம் புதல்வரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். மேற்படி உடன்படிக்கை நடந்த மறு வருடம் ஔரங்கசீப் தமது மற்றொரு

புதல்வனுகிய அஸாம் என்பவனைப் பிஜப்பூர் நாட்டைக் கைப்பற்ற அனுப்பினர். அவன் அங்குப் போனனே யொழிய ஒன்றுஞ் செய்யவில்லை.

தட்சிணத்தில் தமது இரு குமாரர்களும் செய்த விஷயங்கள் ஔரங்கசீப்புக்குக் கொஞ்சமும் பிடிக்காமையினால் அவர் தாமே புறப்பட்டுத் தட்சிணத்திற்கு வந்தார். வந்து பிஜப்பூரை ஒரு வருஷம் முற்றுகைசெய்து தமது கைவசப் படுத்தினர். அஃதோடு அவ்வூர் அரச வம்சம் அழிந்தது. ஔரங்கசீப் பிஜப்பூர் நகரைத் தகர்த்துத் தரைமட்டமாக்கினர். அதன் பிறகு மனிதர்கள் வசிப்பதற்கு அவ்வூர் யோக்யதை யற்றதாயிற்று. அங்குப் புலி கரடி முதலிய துஷ்ட மிருகங்களே நாளடைவில் குடியேறின. தாம் கொண்ட முரட்டு வைராக்கியத்தினால் ஔரங்கசீப் இவ்வாறு அவ்வூரைத் தமக்கும் பிறருக்கும் பிரயோசன மற்ற தாக்கினர்.

ஔரங்கசீப் பிஜப்பூரை இக் கெதிக் குள்ளாக்கிச் சந்தோஷத்துடன் கோலகொண்டாவை நோக்கிச் சென்றார். இதுகாறும் சுகவாசியாயிருந்த அந் நாட்டு மன்னனுகிய அபுல்ஹாஸன் என்பவன் ஔரங்கசீப் தன் நாட்டை அழிக்க வருவதைக் கண்டதும், இன்பங்களை விட்டு நாட்டுப் பாதுகாப்பே முக்கியமான தென்று தீர்மானித்து, வீராவேசங் கொண்டு ஔரங்கசீப்பை எதிர்த்தான். மொகலாய சேனவீரர் தாம் கருதிவந்த எண்ணம் எளிதில் சித்திபெறு தென்று கண்டு கொண்டனர். அபுல்ஹாஸனுக்கு உதவியாக மகாராஷ்டிரரும் வந்து சேர்ந்துகொண்டனர். அவர்கள் மொகலாயருக்கு கள்ளவழியால் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்களை அபகரித்தனர். மொகலாயருக்கு உணவுக்கே திண்டாட்டமாயிற்று. மொகலாயர்களின் கதி மிகவும் தர்ப்பாக்கிய நிலைக்கு வந்துவிட்டது.

பஞ்சம் ஒரு புறமும், மகமாரி மற்றொரு புறமுமாக அவர்களை வருத்தின. ஆனலும், அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் இருந்தது. அச் சமயத்தில் கோல கொண்டாவில் இருந்த இராஜத் துரோகிகள் ஒரு சிலர் ஔரங்கசீப்புக்கு இரகசிய வழிகளைக் காண்பித்தனர். அப்போதே, அதாவது 1687-ம் வருடம், செப்டம்பர் மாதத்தில் இராஜத் துரோகிகளின் வஞ்சனையினல் கோலகொண்டா மொகலாயர் வசமாகியது.

அஸாம், அரக்கான், தட்சிணம் ஆகிய இந்நாடுகள் மொகலாயர் கைவசப்படவே மொகலாயத்தின் இராஜ்ஜிய எல்லை அகன்றது. அதனல் ஔரங்கசீப் ஆளுகைக் குட்பட்ட மொகலாய இராஜ்யம் அசோகர், சமுத்திரகுப்தர். ஹர்ஷவர்த்தனர், அக்பர் ஆகிய இவர்களின் இராஜ்ஜியங்களிலும் மிகுதியும் பரப்புற்றிருந்தது.

ஐந்தாவது அத்தியாயம்.

ஔரங்கஸீபும் சிவாஜியும்

"உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான்?" —வாக்குண்டாம்.

ஔரங்கசீப் காலத்தில் மொகலாய இராஜ்ஜியம் அதற்கு முன்னிருந்த இந்து, முகம்மதிய இராஜ்ஜியங்களைப் பார்க்கினும் மிகப் பரப்புற்றிருந்தது என்று முன்னமே கூறியுள்ளோம், அத்தகைய பெரியஇராஜ்ஜியத்திற்கு அவர் அதிபதியாயிருந்தும் அவருக்கு மனச்சந்தோஷம் சிறிதும் இல்லாதிருந்தது. ஏனெனில், கோலகொண்டாவைக் கைப் பற்ற அவர் செய்த யுத்தத்தில் அவருக்கு விரோதியான அபுல்ஹாஸனுடன் சேர்ந்து மொகலாய சேனையைச் சிதற அடித்த மகாராஷ்டிரர்கள் நாளுக்குநாள் பலப்பட்டு வந்தார்கள். அவர்கள் ஔரங்கசீப்புக்குக் கொடுத்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல.

அத்தகைய மகாராஷ்டிரர்களின் வல்லமைக்குக் காரணம் யாது என்பதைப்பற்றி இனிக் கவனிப்போம்,

இப்போது, பம்பாய் இராஜதானி யென வழங்கும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசமாகிய மகாராஷ்டிரத்தில் சாத்பூரா மலைக்குத் தெற்கே மகாராஷ்டிரர்கள் முதல் முதல் வசித்துவந்தார்கள். பதின் மூன்றும் நூற்றாண்டில் அவர்கள் வசித்து வந்த பிரதேசம் யாதவர் என்னும் அரச வமிசத்தாரால் அதற்கு முன் ஆளப்பட்டு வந்தது. அப் பிரதேசத்தின்முக்கிய பட்டணங்கள் பூனா,சதாரா,கோலாப் பூர், நாசிக் முதலியவைகளாம்.

அம் மஹாராஷ்டிரர்களுக்கு விவசாயமே முக்கிய தொழில். அத்தொழில் ஒழிந்த நேரத்தில் அவர்கள் ஆமத் நகரம், பிஜப்பூர் என்னும் நாடுகளின் மன்னருடைய சேனைகளில் போர் வீரர்களாக உத்தியோகம் செய்து கொண்டு வந்தனர். அவர்களுக்கு முக்கிய ஆயுதங்கள் ஈட்டியும், கத்தியுமே. அவர்களைப்பற்றி எல்பின்ஸ்டன் (Elphinston) என்னும் ஆங்கிலசரித்திர ஆசிரியர் ஒருவர் சவிஸ்தாரமாகப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"மகாராஷ்டிரர், மனத்தை வசீகரிக்கும் அழகுவாய்ந்தவர்களாய்ச் சிறியஉருவத்துடன் இருப்பினும் அவர்கள் தேகம் வலிமையுடையது. அவர்கள் எப்போதும் சுறுசுறுப்பு வாய்ந்தவர்கள். எவ்வித கஷ்ட வேலையாயிருந்தாலும், அதை விடாமுயற்சியுடன் செய்தே முடிப்பார்கள். அவர்களுக்கு இராஜ புத்திரர்களுக்குள்ள பெருமிதமும், கௌரவமும் இல்லாதிருந்தும், அவர்கள் அவர்களைப்போல் சோம்பலுள்ளவர்களாயும், உலக அனுபவம் அற்றவர்களாயும் இருக்கவில்லை இராஜபுத்திரனொருவன் தான் தனது வமிசத்திற்குஅபகீர்த்திஉண்டாவதைத் தவிர்ப்பானேயொழிய அவ்வபகீர்த்தி வருவதற் கேதுவான விஷயங்களின் முடிவைப்பற்றி அவன் கொஞ்சமும் கருதான். ஆனால் மகாராஷ்டிர வீரனோ வீரத்தைக் கருதாமல் தன் காரியத்திலேயே கண்ணுயிருப்பான். அக்காரியத்தை முடிக்க அவன் எவ்வாளும் மார்க்கம் நன்றேனும், தீதேனும்அவனுக்குச் சம்மதமே! தான் எடுத்துக்கொண்ட காரியத்தில் சித்திபெறும் வரையில் தன் அறிவைச் செலுத்துவான். உலகஇன்பத்தை அறவே ஒழிப்பான். தன் உயிரையும் ஒரு பொருட்டாகக் கருதவேமாட்டான். புகழை விரும்பித் தன் உயிரையாயினும், சுதந்தரத்தையாயினும் தியாகம் செய்யமாட்டான்."

யுத்த காலத்தில் தங்கள் பக்கம் ஜயம் உண்டாகு மென்று தெரிந்தால் மகாராஷ்டிர வீரர் சண்டையில் உயிரையும் விடத் துணிவர். ஜயம் கிடைக்காதென்று தெரிந்து விட்டாலோ கடைசிவரையில் நின்று வீம்புக்கு வேட்டையாடாமல் மறைந்து சென்று விடுவார்.

மகாராஷ்டிரர் தங்கள் மட்டக்குதிரைகளின் மீதேறி வெகுதூரம் சலிப்பின்றிச் செல்ல வல்லவர்கள். அதுமட்டுமன்று. அவர்கள் வாழ்க்கை மிகவும் அமைதியானது அவர்கள் கோதுமை ரொட்டியைத் தின்று தண்ணீரைக் குடித்துக் காலத்தைத் தள்ளுவார்கள். தனவந்தனான மகாராஷ்டிரனும் டம்பமாக உண்ணவும், உடுத்தவும் இஷ்டப்படமாட்டான். வாழ்க்கையை எவ்வளவு சாதாரணமாக நடத்தமுடியுமோ அவ்வளவு சாதாரணமாக நடத்துவான். ஆனால் "உள்ளதே போதும்" என்னும் எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. மேன்மேலும் எவ்வகையிலும் விருத்தியடைய வேண்டுமென்பதே அவர்களுடைய முக்கிய நோக்கமாயிருந்தது. அதனல் அவர்கள் மொகலாய சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப்பும் அஞ்சும்படி நாளுக்குநாள் எவ்வகையிலும் முன்னேற்ற மடைந்து வந்தனர். அவர்களுடைய சாதாரண அமைதியுற்ற வாழ்க்கைக்கும், டம்பமும் பணச் செலவுமுள்ள காம்பீரம் மிகுந்த மொகலாயரின் வாழ்க்கைக்கும் எவ்வளவோ தாரதம்மிய மிருந்தது.

ஆனல் மகாராஷ்டிர வீரர்கள் வெகு காலம் வரையில் பொருளேமட்டும் பிரதானமாகக் கருதித் தங்கள் பயிர்த் தொழில் இல்லாத காலத்தில், பாமினி ராஜ்ஜியத்தில், கூலிக்கு யுத்தம் செய்தும் போர்வீரர்களா யிருந்தும் வந்தார்கள். அன்றியும் அவர்களுக்குள் யாதொரு கட்டுப்பாடுமின்றி அவரவர்கள் இஷ்டம்போல் நடந்து வந்தனர்.

அவர்கள் ஒன்றுகூடியிராமல் பலபாகங்களிலும் சிதறுண்டு காணப்பட்டனர். அவர்கள் அவ்விதமாகவே எந்நாளும் இருந்திருப்பார்களாயின் அவர்களைப்பற்றி இப்போது நாம் எழுதவேண்டிய அவசியமே நேரிட்டிராது.

இவ்விதம் தட்சிண தேசத்திலுள்ள பாமினி ராஜ்ஜிய மன்னர்களான அடில்ஷா (Adllsha) நைஜாம்ஷா (Nizam Shah) என்பவர்களுக்கு அடிமைத் தொழில் பூண்டு வறிதே தமது காலத்தைக் கழித்த மகாராஷ்டிர வீரர்கள் ஒன்று கூடிச் சுய அரசாட்சி ஸ்தாபனம் செய்வதற்கு ஏற்ற வீரரொருவர் அவர்கள் குலத்தில் தோன்றினர். அவரே உலகப் பிரசித்திபெற்ற சிவாஜி மன்னர்.

எவன் ஒருவன் தன் நாட்டினரைத் தன்வசப் படுத்தித் தனக்கு எல்லா விஷயங்களிலும் அவர்களை அடங்கி நடக்கும்படி செய்கின்றானே அவனே சிறந்த வீரனுவான். அத்தகைய குணம் சிவாஜியிடம் பெரிதும் பொருந்தியிருந்தது. அவர் காலத்தில் மகாராஷ்டிரர் அனைவரும் அவர் சொற்படி நடந்துவந்தனர். மீறி நடந்த இரண்டொருவரை அவர் வெகு சாமர்த்தியமாக அடக்கினர்.

இத்தகைய வல்லமை வாய்ந்த சிவாஜி பிறவாதிருந்திடில் மகாராஷ்டிரர் ஒன்று கூடித் தங்களுக்கென்று இராஜ்ஜியம் ஸ்தாபித்திருக்க மாட்டார்கள். மொகல் இராஜ்ஜியமும் கீழ்நிலையடைந்து அழிந்துபோயிராது.

சிவாஜி பிறந்த காலத்து அவருடைய தகப்பனர் ஷாஜி (Shaji என்பவர் பாமினி இராஜ்ஜிய மன்னருடன் சேர்ந்து மொகலாயரை எதிர்த்துக்கொண்டிருந்தார். எனினும் அவர் சுயராஜ்ஜியம் ஸ்தாபிக்கவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டவரல்லர். அவர் பாமினி மன்னரிடம்

அடிமைத் தொழில் செய்து அம்மன்னர் மனமுவந்து அவருக்கு இனமாகக் கொடுக்கும் ஜாகீர்களை அடைந்து சந்தோஷித்து வந்தார். பிற்காலத்தில் நமது சிவாஜி, பாமினி ராஜ்ஜிய மன்னருக்கு விரோதமாய்க் கிளம்பியபோது அவர் தகப்பனார் அவர் அவ்விதம் செய்யாமலிருக்குமாறு எவ்வளவோ முயற்சி செய்தார். சிவாஜி, 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் முதுமொழியின் கருத்தின்படி நடந்திருப்பாராயின் மகாராஷ்டிரர் சரித்திரம் வேறு விதமான பாதையடைந்து போயிருக்கும்.

நாம் இனி சிவாஜியின் பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சிறிது எடுத்துக் கூறுவோம்.

பான்சலே வம்சத்தின் ஷாஜியின் மனைவியாகிய ஜீஜாபாயின் வயிற்றில் சிவாஜி பிறந்தார். பான்சலே வமிசம் தேவ்கிரி யாதவர்களைச் சேர்ந்தது என்பர் சரித்திராசிரியர். 1627-ஆம் வருஷத்தில்—ஷாஜஹான் டில்லியில் சிம்மாசனமேறினார். அதேவருடத்தில்—சிவனேரி என்னும் கோட்டையில் பிறந்த சிவாஜி தமது தாயாராகிய ஜீஜாபாயுடன் பூனாவில் வளர்ந்துவந்தார். அவருக்கு அவ்விடத்தில் ஆசிரியராயிருந்து வந்தவர் தாதாஜி கண்டதேவர் என்பவர். சிவாஜி இளமைப் பருவத்தே தம் தாயார் தமக்குக் கூறி வந்த மகாபாரத இராமாயணக் கதைகளை மிக்க ஆர்வமுடன் கேட்டு வந்தார். அதனால் அவர் அவ்விரு காவியங்களில் உள்ள அழியாப் புகழ்வாய்ந்த வீரர்களைப்போல் தாமும் முன்னேற்ற மடைந்து மகாராஷ்டிர ராஜ்ஜியம் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். அவருடைய ஆசிரியராயிருந்த தாதாஜி வில், வாள், வேல் முதலிய ஆயுதப் பயிற்சிகளில் அவரைத் தேர்ச்சியடைவித்தார். சிவாஜி தம் தாயார் உயிருடன் இருக்கும்

வரையில் அவள் அனுமதியின்றி ஒரு காரியமும் செய்வ தில்லை. அவளுடைய உத்திரவுப்படியே அவர் பவானி தேவதையைத் தியானிப்பதைக் கைக்கொண்டார். உயி ருக்கே ஆபத்து வரும்படியான விஷயங்களில் தலையிடும் போதெல்லாம் சிவாஜி பவானி தேவியின் கோயிலுக்குட் புகுந்து அத்தேவியின் அனுமதியைப் பெற்றே அவ்விஷயங் களை ஆரம்பிப்பார். அத் தேவதையின் மீது வைத்த நம் பிக்கையினாலேயே சிவாஜி அநேக விஷயங்களில் சித்தி பெற்றதாக அநேகர் கூறுவார். சிவாஜியே மகாராஷ்டிரரை யுத்தவீரர்களாக்கினர் என்பதற்கில்லை. அவர் பிறப் பதற்கு முன்பே மகாராஷ்டிரர் கூலிக்கு யுத்தவீரராகப் பாமினி ராஜ்ஜிய மன்னர்களிடம் அமர்ந்திருந்தனர். ஆனால் சிவாஜி அவர்களை, இந்து மதத்தை நிலை நிறுத்தவேண்டும் என்னுங் காரணங்கொண்டு, ஒன்றுசேர்ந்தார். இவ்விதம் யாவர்க்கும் பொதுவான மதத்தின் காரணங்கொண்டு மகாராஷ்டிரர்களுள ஒருவித ஒற்றுமையை உண்டாக்கிய விஷயமே சிவாஜியின் புகழுக்குக் காரணமாகும். அது வேயு மன்றி அவர் அவர்களை ஊழியக்காரர்கள் என்னும் நிலைமையி னின்றும் நீக்கி எஜமானராகும் பதவிக்குக் கொண்டுவந்த விஷயம் நாம் கருத்தில் வைக்கத் தகுந் தது. சிவாஜியின் தகப்பனார் ஷாஜி தக்ஷிண தேசத்துச் சுல்தான்களுக்கு அடங்கி நடந்து அவர்கள் கொடுத்த ஜாகீர்களே போதுமென்று மனத்திருப்தியடைந்துவந்தார். ஆனால் அவருக்குப் புத்திரராக ஜனித்த சிவாஜியோ பிற் காலத்தில் அந்தச் சுல்தான்களிடமிருந்து, அவர்களுக்கு எஜமானராகிக் கப்பம் வாங்கினர்.

மகாராஷ்டிரர் ஒன்றுகூடுவதற்குச் சிவாஜியின் முயற் சியே அன்றி இன்னொரு விஷயமும் முக்கிய காரணமா

யிருந்தது. மகாராஷ்டிரத்தில் இராமதாஸ். துகாராம் என்ற சிறந்த புருஷர்கள் தோன்றிப் பக்திவிஷயத்தில் ஈடுபட்டு அவ்விஷயத்தை நாளுக்கு நாள் மகாராஷ்டிரருக்குப் போதித்து வந்தனர். மகாராஷ்டிரர் என்னும் பெயர் வகித்த அனைவரும் ஒன்று சேர்ந்து மகாராஷ்டிர தர்மத்தை நிலைநாட்டவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாய் இருந்தது. அந் நோக்கத்தில் அவர்கள் ஜயமடைந்தார்கள். அந்தப் பக்திமான்களின் உபதேசத்தால் மகாராஷ்டிரர் ஒன்று சேர்ந்து தங்கள் நாட்டிற்காகவும், மதத்திற்காகவும் சண்டையிட முன் வந்தனர். அச்சமத்திலேதான் சிவாஜி தோன்றி அம் மதவிஷயத்தில் அவர்களுக்கிருந்த பற்றை அதிகரிக்கச் செய்து அக்காலத்தில் அவர்களை அடக்க ஆவல்கொண்ட மொகலாயர்மீது அவர்களுடைய ஆவேசத்தைத் திருப்பினர். மொகலாயரின் இந்துமதத்து வேஷமென்னும் வெள்ளத்தில் இந்து மதம் அடியோடு அடித்துக்கொண்டு போகாதபடி நிலைநிறுத்தியவர் அவரே.

இவ்விதச் சிறப்பு மிகுந்த சிவாஜியைப்பற்றி ஆங்கிலேய சரித்திராசிரியரும், மகம்மதிய சரித்திராசிரியரும் பலவாறு கூறுகின்றனர். அக் கூற்றுகளிலிருந்து உண்மை விஷயங்களைக் கிரகித்து அவற்றிற் சிலவற்றை மாத்திரம் இங்கு எடுத்துக் கூறுவோம்.

இந்துக்களின் மனோவன்மை என்னும் குன்றின் மேலிட்டிருந்த இந்து மதவிளக்கை ஔரங்கசீப்பின் மூட வைராக்கியச் சூறாவளி அணைக்காவண்ணம் ஒருவாறு தடுத்துநின்ற நமது சிவாஜி பூனாவில் வளர்ந்து வந்ததாக முன்னமே கூறியுள்ளோம். அவ்விதம் வளர்ந்துவந்த சிவாஜிக்கு அவருடையதாயார் ஜீஜா பாய் மதாபிமானத்தையும்,

தேசாபிமானத்தையும் பாரத இராமாயணக் கதைகளைக் கூறி, அதிகப்படுத்தி வந்தாள். சிவாஜிக் குண்டான அவ்விரு அபிமானங்களும் பயனற்றவை யாகாவண்ணம் அவருடைய ஆசிரியர் தாதாஜி யானையேற்றம், குதிரையேற்றம், வில், வாள் பயிற்சி முதலியவற்றில் அவரை வெகு ஆர்வமுடன் பழக்கி வந்தார். அதனால், நாம் சிவாஜியைக் கலியுக அர்ச்சுனன் என்றால், அவருடைய ஆசிரியராகிய தாதாஜியைத் துரோணாசாரியார் என்றே கூறவேண்டும்.

சிவாஜி தம் தாயுடன் பூனாவுக்கு வந்தபோது அவ்வூர் ஒரு குக் கிராமமாக இருந்த தென்பர் சரித்திர ஆசிரியர். பூனா நகரைச்சுற்றிலும் கரம்பு நிலங்கள் சூழ்ந்திருந்தன. அங்கிருந்த நதிகளால் அவ்வூருக்குப் பிரயோசன மொன்றுமில்லா திருந்தது. ஆனால், தாதாஜி, சிவாஜியின் தகப்பனான ஷாஜியின்உத்தரவுப்படி அவ்வூருக்குச்சென்றபோது அவ்வூரைத் தம்மா லானமட்டும் விருத்திசெய்ய ஆரம்பித்தார். சில வருஷங்களுக்குள் அவர் செய்த சீர்திருத்தங்களால் பூனாவைச் சூழ்ந்திருந்த கரம்பு நிலங்கள் பண்படுத்தப் பெற்றுக் கண்கவரும் வனப்பு வாய்ந்திருந்தன.

சிவாஜி சிறு பிராயத்திலேயே பூனாவைச் சுற்றியுள்ள மலைக் குகைகளிலும், நதியோரங்களிலும், மனிதர் நுழையக்கூடாத அடர்ந்த கானகங்களிலும் தம்மையொத்த சிறுவருடன் அடிக்கடி அலைந்து திரியலானார். அப்போது அவர் செய்த செய்கைகள் அவருடைய தாயாருக்கும், ஆசிரியருக்கும் ஒருவித அருவருப்பைக் கொடுத்தன. எனினும் பிற்காலத்தில் பூனாவைச் சுற்றியுள்ள பலத்த கோட்டைகளைச் சிவாஜி கைப்பற்றுவதற்கு அவர் சிறுவயதில் அலைந்து திரிந்து அனுபவித்த விஷயங்களே கைகண்ட முக்கிய ஆதாரமாக இருந்தனவென்று சொல்லலாம்.

'இளங்காளை பயமறியாது' என்னும் பழமொழி சிவாஜியிடம் உண்மையாயிற்று. ஒருநாள் அவர் ஆட்டு மந்தைகளை ஓட்டிக்கொண்டுபோன சிலரை மடக்கி அவ் வாட்டு மந்தைகளைத் தம் ஊர்ப்பக்கம் திருப்பி, "ஜீவ ஹிம்சை செய்வது மனிதராய்ப் பிறந்த நமக்கு அழகன்று; உங்கள் எஜமானருக்குப் போய்ச் சொல்லுங்கள்" என் றுரைத்து அவர்களை வெருட்டி அடித்தார். அவர்களிடம் கவர்ந்த ஆடுகளைச் சுயேச்சையாய்த் திரிய விட்டுவிட்டார். இதுவே முதல் முதல் சிவாஜி செய்த காருண்யமுள்ள அவர் வயதுக்கேற்ற வீரச்செயல் என்னலாம்.

தட்சிண தேசத்தில் அடில்ஷா, நைஜாம்ஷா என்னும் மகம்மதிய மன்னர்களின் தயவுக்காகக் காத்துக்கொண் டிருந்த சிவாஜியின் தகப்பனார் ஷாஜிக்குத் தமது குமார னுடைய அத்தகைய செய்கை பெருத்த அச்சத்தை உண் டாக்கிற்று. அவர் தம்மால் கூடியவரையில் சிவாஜிக்கு எவ்வளவோ புத்திமதி கூறினர். கூறியும் அது பயனற்ற தாயிற்று. ஹிந்துக்களின் முன்னேற்றத்தின் பொருட்டு இந்தியாவில் அவதாரம் செய்த சிவாஜிக்கு அவர் தகப்ப னரின் புத்திமதி நாராசங் காய்ச்சி நடுச்செவியில் ஊற்றி னதுபோ லிருந்தது. அவர் தகப்பனரின் வார்த்தையைக் கிஞ்சித்தும் சட்டைசெய்யவில்லை. இவ்விஷயத்தில் சிவாஜி தந்தையை மீறி நடந்தும் அதனல் அவருக்குப் பிற்காலத் தில் நன்மையே உண்டாயிற்று. அவர் அவ்விதமின்றித் தம் தந்தைசொல்லைக் கேட்டு நடந்திருப்பாராயின் உலகப்பிர சித்தி பெற்றிருக்கமாட்டார். நாம் முன்னே கூறியபடி அவர் ஒரு அவதார புருஷர். இதனல் சிவாஜியைப் பின் பற்றி மற்றைச் சிறுவரும் தமது தந்தையர் சொற்களை மீறி நடந்தால் நன்மை யடைவார்களென்று சொல்வதற்கில்லை.

சிவாஜியின் தகப்பனார் ஷாஜி சிறுபிள்ளையா யிருக்கையில் அவருடைய தகப்பனார் மலோஜி என்பவர் ஆமத் நகரச் சுல்தானிடம் சேனைவீரர் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவர் ஒருநாள் வழக்கம்போல் மகாராஷ்டிரரின் தளகர்த்தரான லக்ஜியாதவராவ் என்பவர் வீட்டிற்குச் சென்றார். போகும்போது தமது புதல்வனான ஷாஜியையும் உடன் அழைத்துச் சென்றார். அங்கு ஓர் விருந்து நடந்தது. அவ்விருந்து முடிந்த பிறகு அத் தளகர்த்தர் தமது இரு துடைகளில் ஒன்றில் தமது மகள் ஜீஜாபாயையும், மற்றொன்றில் ஷாஜியையும் வைத்துக்கொண்டு அன்று விருந்தினராக வந்திருந்த மகாராஷ்டிர சபையோரை நோக்கி, 'இவ்விருவரும் இணையற்ற தம்பதிகளா யிருக்க வேண்டுமென்பதே என் கோரிக்கை; ஈசன் செயல் எப்படியோ' என்று கூறினார். சிறிது காலம் சென்றது ஜீஜாபாயை ஷாஜிக்கு விவாகம் செய்து கொடுப்பதைத் தடுக்க வேண்டுமென்று அப்பெண்ணின் தாய் எவ்வளவோ முயன்றும் கடைசியில் அவ்விருவருக்குமே விவாகம் நடந்தேறியது.

அவர்கள் வயிற்றில் பிறந்தவர்தாம் நம் சிவாஜி அவர் பிறக்குமபோதே அவர் முகத்திலிருந்த இராஜ தேஜசைக் கண்ட அநேகர், 'இவன் பூபாலன் ஆவான் என்பதற்கு இவன் முகத்தில் தோன்றும் இராஜகளையே அறிகுறி' என்றனர். அவருடைய ஜாதகத்தைக் குறித்தவர் அவர்கள் சொல்லையே ஆமோதித்துக் கொண்டனர்.

சிவாஜி இளம்பிராயத்தில் செய்த வீரதீரச் செயல்களைக் கண்ட அவரையொத்த சிறுவர் அநேகர் அவருடன் சேர்ந்து கொண்டனர். அக்காலத்தில் சிவாஜிக்குமேல் வயதில் மூத்திருந்த அநேகர் சிவாஜியின் வார்த்தையைக் கேட்டு அதன்படியே தவறுமல் நடக்கலாயினர்.

அதாவது சிவாஜி பத்தொன்பது. வயது நிரம்பிய வாலிபராயிருக்கையிலேயே பல வீரச்செயல்களில் சிறந்து விளங்கினர். அவைகளே அவர் இராஜ போகங்களே எந் நேரமும் நினைத்துக்கொண் டிருக்கத் தூண்டின; அவை களே அவர் சேனு பலத்தை மிகுவித்தன; அவைகளே அநேகரை ஆர்வமுடன் அவரைச் சேர வற்புறுத்தின; அவைகளே அவர் பிற்காலத்தில் அடைந்த ஜயங்களுக்கு முக்கியமான காரணமா யிருந்தன.

1646-ஆம் வருஷத்திலிருந்து 1659-ஆம் வருஷம் வரையில் சிவாஜி பூனைவைச் சேர்ந்த அநேக சிறு சிறு கோட்டைகளேத் தம் கைவசப் படுத்தினர். அதனல் அவர் பூனவுக்குத் தெற்கேயுள்ள ஒரு பெரிய விசாலமான பிரதேசத்திற்கு அதிகாரியாயினர்.

1646-ஆம் வருஷம் சிவாஜி தம் சிறிய படையுடன் திடீரென்று சென்று தோரணு என்னும் கோட்டையைக் கைப்பற்றினர். முதன் முதல் அக் கோட்டையைப் பிடித்த விஷயம் அவருக்கு மிகுந்த நன்மையைச் செய்தது. ஏனெனில் தம் கைவசப்பட்ட அக்கோட்டையைப் பழுதுபார்க்க எத்தனிக்கையில் அங்கு புதைத்திருந்த பெருநிதிக்குவியல் ஒன்று சிவாஜிக்குத் தென்பட்டது. அதைக்கொண்டு அவர் இராஜகிரிக்கோட்டையைக் கட்டிமுடித்தார்; அநேக சப்பல் கள் செயதார்; அநேக படைக்கலங்கள் வாங்கினர்; தமது சேனு பலத்தை அதிகப்படுத்தினர். சிவாஜி தோரணுக் கோட்டையைக் கைப்பற்றிய செய்தி பூனவிலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் பரவியது. ஆனல், அவருக்கு அநேக புதிய நண்பர்கள் ஏற்பட்டனர்.

அதன் பிறகு கொஞ்சகாலத்திற்குள் சிவாஜி பூரண்டர் கோட்டையைப் பிடித்து அதன் பாதுகாப்புக்கு வேண்டிய விஷயங்களேச் சரிவரச் செய்து முடித்தார்.

அஃதோடு மூன்று கோட்டைகள் அவர் கையிற் சிக்கின. அக்காலத்தில் பூனாவைச் சுற்றியிருந்த மகராஷ்டிர வீரர்கள் அநேகரை ஒன்று சேர்த்தார்.

சிவாஜியின் செயல்கள் அக்காலத்திய மகம்மதிய மன்னருக்கு அடங்காக் கோபத்தை உண்டுபண்ணின. அதைக் கண்ட சிவாஜியின் தந்தை ஷாஜியும், அவருடைய ஆசிரியர் தாதாஜியும் மிகுந்த திகிலடைந்து சிவாஜி அவ்விதம் செய்வது அவர் உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் என்று பெரிதும் வருந்தி அவரைப் பிஜப்பூர் சமஸ்தானத்தின் உத்தியோகங்களில் ஒன்றை வகிக்கத் தூண்டினர். சுயேச்சையாய்த் திரிவதை விடுத்து அந்நியருக்கு அடிமைத் தொழில் பூண்டிருக்கச் சிவாஜி கிஞ்சித்தும் இசையவில்லை. 'ஹிந்து ராஜ்ஜிய ஸ்தாபனம்' என்னும் எண்ணமே சிவாஜியின் மனத்தில் குடிகொண்டு அவ்வெண்ணத்தில் சித்திபெற அவரைப் பலவித முயற்சிகள் செய்யத் தூண்டிற்று.

நாளுக்கு நாள் சிவாஜியின் பலம் ஓங்கி வளர்ந்தது. சிவாஜியும் அதுவே தம் எண்ணம் சித்தி பெறுவதற்குத் தகுந்த தருணம் என்று உத்தேசித்துப் பிஜப்பூர் மன்னரிடம் யுத்தம்செய்ய ஆரம்பித்து விட்டார். அந்த யுத்தம் 1659-ஆம் வருஷம் ஆரம்பித்தது. சிவாஜி அதிக மனக் கிளர்ச்சியோடு பிஜப்பூர் மன்னனுக்குச் சொந்தமாயிருந்த கல்யாணிபுரம் என்னும் கோட்டையைக் கைப்பற்றினர். அச் செய்தியை அறிந்த பிஜப்பூர் சுல்தான் ஒருசபை கூட்டி அச் சபையிலுள்ளோரை நோக்கிச் 'சபையோர்காள்! மன அகங்காரம் படைத்த இவ்வற்ப மகாராஷ்டிரனைத் தகுந்தபடி சிட்சிக்கவேண்டும். அன்றேல் நமது அரசாட்சிக்குப் பெருத்த ஆபத்து உண்டாகும். அவனை அடக்கும் முயற்சியில் முன்வரத்தக்க வீரர்கள் எவராயினும் இங்கு உண்

டோ?'' என்று கேட்டான். அத்தருணம் அச்சபையோரில் ஒருவனும் பிஜப்பூர் சுல்தானுகிய அடில்ஷாவின் மனைவிக்கு நெருங்கிய பந்துவுமான அப்சுல்கான் என்பவன் எழுந்திருந்து, 'மகாராஜ்! சிவாஜி என்னும் அம்மலை எலிக்கு விலங்கிட்டுத் தங்கள் முன் கொண்டுவரும் சக்தி எனக்கு உண்டு, அவனுக்குத் தாங்கள் கொஞ்சமும் அஞ்சவேண்டியதில்லை' என்று அஞ்சா நெஞ்சுடையவனுப்க் கூறினன். பிஜப்பூர் சுல்தானும் அவனுடைய தைரிய மொழிக்கு மிகவும் மெச்சி 'அப்படியானுல் இப்போதே நமது சேனையுடன் நீ புறப்பட்டுப் போகலாம்' என்று கட்டளையிட்டான்.

அன்றைத்தினமே அப்சுல்கான், அடில்ஷா தன்னுடன் போக விடுத்த சேனையுடன் புறப்பட்டு, சிவாஜியிடம் போனன். அப்போது பிஜப்பூரில் மாரிக்காலமாயிருந்தது. போகிறவழியில் மகாராஷ்டிரரின் குலதெய்வமாகியபவானி தேவியின் கோயிலுள் நுழைந்து அத்தேவியின் விக்கிரகத்தை உடைக்க எத்தனித்தான். அவ் வெத்தனம் பயனற்றதாயிற்று. பிறகு பீமா நதியைத் தாண்டி அக்குச் சுற்றுப் பக்கங்களிலிருந்த ஹிந்துக்களின் கோயில்களை இடித்து அவற்றுள்ளிருந்த விக்கிரகங்களைத் துண்டு துண்டாக உடைத்தான். அவன் போன இடமெல்லாம் ''கொள்ளை, கொள்ளை'' என்னும் கூக்குரலாகவே இருந்தது.

அப்சுல்கானின் தகாத செய்கைகளைத் தமது ஒற்றர் மூலமாயறிந்த சிவாஜி பெரிதும் மனம் வருந்தி அவனை அடக்கும் உபாயமென்ன வென்று போசித்துக்கொண்டிருந்தார். பவானி தேவியைத் தியானித்தார். தமது அன்னையின் புத்திமதியைக் கேட்டார்.

பிறகு மகாராஷ்டிரரில் தமக்கு அத்தியந்த நண்பராயிருந்த இருவரை அப்சுல்கானிடம் சென்று அப்சுல்கானை

எதிர்க்கத் தாம் சக்தியற்றவரென்றும், அதனால் அவனுடன் தாம் சமாதானம் செய்துகொள்ள விரும்புவதாகவும், அவ் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அப்சுல்கான் நிராயுதபாணி யாய்த் தாம் குறிக்கும் இடத்தில் வந்தால் தமக்குப் பிஜப் பூர் சுல்தானுக்கும் சமாதான உடன்படிக்கைக்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாமென்றும் கூறும் படி சிவாஜி சொல்லி அனுப்பினர்.

சிவாஜியின் எண்ணத்தைத் தூதுவர் மூலமாய் அறிந்த அப்சுல்கான் அகமகிழ்ச்சி கொண்டு தன் கையில் சிக்கும் சிவாஜியை அடியோடு தூக்கும் தருணம் அதுவே என்று தீர்மானித்துச் சிவாஜியின் வேண்டுகோளுக் கிசைந்து சிவாஜி குறித்த இடத்தை அடைந்தான். தாம் குறித்த மண்டபத்தில் வீற்றிருந்த அப்சுல்கானைக் கண்ட சிவாஜி கண்ணீர்விட்டு அழுது மிகப் பயந்தவர் போல் பாசாங்கு செய்து வெகு வினயத்துடன் அவனுக்குச் சலாம் செய் தார். சலாம் செய்கையில் பிஜப்பூர் சுல்தானிடம் தான் சொல்லிவந்த சபதம் நிறைவேறும் காலம் நெருங்கிற்று என்னும் இறுமாப்புக் கொண்டு ஒருவாறு சந்தோஷத் தால் தன்னையே மறந்திருந்த அப்சுல்கானைச் சிவாஜி திடீ ரெனத் தம் கையில் மறைத்து வைத்திருந்த புலி நகம் என் னும் ஆயுதத்தால் குத்திக் கொன்றார்.

சிவாஜி அப்சுல்கானைக் கொன்ற செய்கை அவரை யொத்த வீரருக்கு அழகல்லவென்று அநேக மகம்மதிய சரித்திராசிரியர் இகழ்ந்து கூறுகின்றனர். இந்திய சரித்தி ரம் எழுதியுள்ள அநேக ஆங்கிலேய சரித்திராசியர்களும் அவர்கள் அபிப்பிராயத்தையே ஆமோதிக்கின்றனர். ஆனால் மகாராஷ்டிர சரித்திராசிரியர்கள் அப்சுல்கான்

இறந்ததைப்பற்றி வேறு விதமாகச் சொல்லுகின்றனர். அவ்வரலாறு பின் வருமாறு :—

"சிவாஜியைக் காணும்படி அவர் குறித்த மண்டபத்திற்குவந்த அப்சுல்கான் சிவாஜியின் வார்த்தையை எளிதில் நம்பி நிராயுதபாணியாய் வரவில்லை. அவன் காற்சட்டையில் வாள் ஒன்றைச் சமயத்திற்கு உதவியாயிருக்குமென்று ஒளித்து வைத்திருந்தான். தான் மண்டபத்தில் உட்கார்ந்திருக்கும்போது தன்னை எதிர்கொண்டு தனக்கு அஞ்சலி செய்யும் பாவனையுடன் வந்த சிவாஜியை அப்சுல்கான் கழுத்தை அழுத்திக் கொல்ல எத்தனித்து அந்நிமிஷமே தான் ஒளித்து வைத்திருந்த கத்தியை யெடுத்து ஓங்கிச் சிவாஜியின் தலையின்மீது அடித்தான். அந்த அடி தம்மீது படாதபடி ஒருவாறு தடுத்துச் சிவாஜி தம்மிடமிருந்த புலிநகத்தால் அப்சுல்கானை அடிவயிற்றில் குத்திக் கொன்றார். சிவாஜி தம் உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தை நீக்கும் பொருட்டே தமக்கு எதிரியாய் நின்ற அப்சுல்கானைக் கொல்லும்படி நேரிட்டது. அவ்விதம் சிவாஜி அப்சுல்கானைக் கொன்றிராவிடில் அப்சுல்கான் சிவாஜியைக் கட்டாயம் கொன்றே இருப்பான்."

அப்சுல்கான் இறந்ததும் அவன் துணைக்கென்று வந்திருந்த பிஜப்பூர் சுல்தானின் சேனைமீது மகாராஷ்டிர வீரர்கள் வீழ்ந்து அச்சேனையைத் தும்சம் செய்தனர். அவர்கள் கொண்டுவந்திருந்த அநேகம் பொருள்கள் அப்பொழுது மகாராஷ்டிரர் கைவசப்பட்டன.

சிவாஜிக்கும் பிஜப்பூர் சுல்தானுக்கும் அநேக யுத்தங்கள் நேர்ந்தன. அந்த யுத்தங்களிலெல்லாம் அபஜயமடைந்த பிஜப்பூர் சுல்தான் ஒன்றும் செய்ய முடியாமல்

அப்போது சிவாஜி கைப்பற்றியிருந்த நாடுகளுக்கு அவரே அதிகாரியா யிருக்கச் சம்மதித்தார்.

தென்னிந்தியாவில் சிவாஜியைத் தலைமையாக வகித்துள்ள மகாராஷ்டிரர் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதை அக்காலத்தில் டில்லி பாதுஷாவாக இருந்த ஔரங்கசீப் அறிந்தார். அவர் சிவாஜியை அடக்கினு லொழியத் தட்சிண பீடபூமியில் தமது அரசாட்சி சரிவர நடவாதென்று தெரிந்துகொண்டு அவரை அடக்கும்படி 1663-ஆம் வருஷம் தட்சிணத்து மொகல்ராஜ்ஜியப் பிரதிநிதிபா யிருந்த ஷையிஸ்டகானை அனுப்பினர். ஔரங்கசீப்பின் கட்டளையின்மீது அவருடைய தாய் மாமனான ஷையிஸ்டகான் மொகல் சேனையொன்றுடன் புறப்பட்டுப் பூனா நகருள் நுழைந்து அங்கோரிடத்தில் தங்கினான். அத் தருணம் அவன் வந்ததை அறிந்த சிவாஜி தமது அத்யந்த உயிருக்கு உயிரான சில போர் வீரர்களுடன் இரவில் ஊர்கோலம் போகிறவர்கள்போல் வேடந்தரித்து ஷையிஸ்டகான் தங்கியிருந்த இடத்திற்குள் நுழைந்தார். அச்சமயம் ஷையிஸ்டகானும் அவனைச் சேர்ந்தவர்களும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தனர். சிவாஜி தம் நண்பர்களுடன் உள் நுழைந்த ஆரவாரத்தைக் கேட்டு ஷையிஸ்டகான் விழித்துக்கொண்டான். ஆனல் அவனுடைய சேனவீரர்கள் அநேகர் நித்திராவஸ்தையினின்றும் நீங்கினரில்லை.

இவ்வித ஆபத்தான சந்தர்ப்பத்தில் ஷையிஸ்டகானுக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. அவன் திக்பிரமை கொண்டவனயினன். சிவாஜியைச் சிறைப்படுத்தவந்த ஷையிஸ்டகான் உயிர் பிழைத்தால் போதுமென்று திடீரென்று தான் படுத்திருந்த அறையின் ஜன்னலின் வழியாகக் குதித்துத் தப்பியோடுகையில் சிவாஜியின் வீரரில் ஒரு

வன் அவன் கைவிரல்களில் இரண்டைத் துண்டித்துவிட்டான். இந்தச் செய்கையை யறிந்த ஔரங்கசீப் மிகுந்த கோபாவேஷங் கொண்டு சிவாஜியை எவ்விதத்திலாவது அடக்கவேண்டும் என்று நிச்சயித்துவிட்டார். மனிதர் எத்தனத்தால் ஆவது ஒன்றுமில்லை; யாவும் கடவுள் செயல்.

1664-ம் வருஷம் ஷையிஸ்டகானை ஓடச்செய்தபிறகு, சிவாஜி அக்காலத்தில் கிழக்கிந்திய ஆங்கிலேய வியாபாரிகள் (East India English Merchants) தங்களுக்குப் பண்டசாலையாக ஏற்படுத்தியிருந்த சூரத்திற்குச் சென்று அவ்வியாபாரிகள் சேமித்து வைத்திருந்த திரண்ட திரவியத்தைத் தமது வசப்படுத்தினர்.

சிறிது காலத்திற்குப் பிறகு ஔரங்கசீப் டிலவர்கான், ஜயசிங் என்பவர்களைத் திரண்ட சேனையுடன் அனுப்பிச் சிவாஜியின் கொட்டத்தை அடக்க முயன்றார். அவ்விரு வீரர்களும் தங்கள் சேனைகளுடன் புறப்பட்டு வந்து பூரண்டர் கோட்டையை முற்றுகை செய்தார்கள். அதுவேயுமன்றிச் சிவாஜியின் இராஜ்யபார நிர்வாகத்திற்குத் தகுந்த இடமாயிருந்த இராஜகிரிக் கோட்டையும் அவர்கள் கையில் சிக்குந் தருணத்தில் இருந்தது. அதனால் சிவாஜி அவர்களிடம் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளச் சம்மதித்தார். அவ்வுடன்படிக்கையினால் சிவாஜி மொகலாயர்களிடமிருந்து கைப்பற்றிய சுமார் இருபது கோட்டைகளை விட்டுவிடவும், பிஜப்பூர் சுல்தானுக்கு விரோதமாய் மொகலாயர்களுடன் சேர்ந்து சண்டை செய்யவும், அவ்வாறு சண்டை செய்வதற்காக நாலிலொருபாக வரியாகிய 'சவுத்' (Chauth) என்னும் வரியைப் பிஜப்பூர் இராஜ்ஜியத்தில்

சில ஜில்லாக்களில் சிவாஜி தமக்கென்று வசூலித்துக் கொள்ளவும் ஓர் உடன்படிக்கை ஏற்பாடாயிற்று.

1666-ம் வருஷம் சிவாஜி ஔரங்கசீப்பின் வேண்டு கோளின்படி டில்லிக்குச் சென்றார். அவ்விடத்தில் டில்லி பாதுஷாவாகிய ஔரங்கசீப் தம் நிலைமைக்குத் தகுந்த மரியாதை செய்வாரென்று நம்பினர். ஆனால் சிவாஜி நினைத்திருந்தபடி ஔரங்கசீப் அவரைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்கவில்லை. அது காரணமாக, சிவாஜி மனத் தாங்கலுற்று ஔரங்கசீப்பை அவர் எதிரிலேயே அவமதித்துப் பேசினர். அதற்கு ஔரங்கசீப் ஒன்றும் பதில் சொல்லாமல் சிவாஜியைத் தமது அரண்மனையிலேயே சிறைசெய்தார். அச்சிறையினின்றும் சிவாஜி தம் தந்திரத்தால் தப்பித்துக்கொண்டு சந்நியாசி வேடத்துடன் பூனைவை யடைந்தார். அது முதற்கொண்டு அவர் மொகலாயரிடம் இழந்த கோட்டைகளை மறுபடியும் கைப்பற்றலானர். அவ்வாறு கைப்பற்றுந் தொழில் வெகு துரிதமாய் நடந்தது.

இதையறிந்த ஔரங்கசீப், அப்போது தக்ஷிணதேசத்திற்குச் சுபேதாராயிருந்த தம்முடைய புதல்வன் முயாஜிம் (Muazzam) என்பவனைச் சிவாஜிக்குவிரோதமாக அனுப்பினர். சிவாஜிக்கும் முயாஜிமுக்கும், ஔரங்கசீப்பின் ஏற்பாட்டின்படி ஒருவித சமாதானஉடன்படிக்கை நிகழ்ந்தது. அவ் வுடன்படிக்கையின்படி சிவாஜி அதுவரையில்கைப்பற்றியிருந்த நாடுகளுக்கு அரசன் என்னும் பட்டத்தைப்பெற்றார். அவருடைய புதல்வன் சாம்பாஜி மன்சப்தார் ஆயினன். இதன் பின்னர்ச் சிவாஜிக்குப் பீபாரில் ஒரு பெரிய ஜாகீர் கொடுக்கப்பட்டது.

1669-ம் வருஷம் பிஜப்பூர் சுல்தானும் கோலகொண்டா சுல்தானும், சிவாஜிக்கு வருஷம் ஒன்றுக்கு மூன்று

1K0/00

லக்ஷமும், ஐந்து லக்ஷமும் அவரவர் தனித்தனியே கப்பங் கட்டுவதாகச் சம்மதித்தனர்.

சிறிதுகாலம் சிவாஜிக்கும் மொகலாயருக்கும் சமாதானம் ஏற்பட்டிருந்தது. ஆனல் மகாராஷ்டிரர்களும், மொகலாயரும் ஒத்து வாழும்படியான சந்தர்ப்பம் பங்கப்படுவதற்கு அநேக காரணங்கள் ஏற்பட்டன. அவற்றில் முக்கியமானவை ஔரங்கசீப் பாதுஷாவின் மத வைராக்கியமும், சிவாஜியின் சுயராஜ்ய ஸ்தாபனமும், ஹிந்துமத பரிபாலனமுமே முக்கிய காரணங்களாகும்.

சிவாஜி இன்னும் அநேக கோட்டைகளைப் பிடித்துத் தம் கைவசப்பட்ட நாட்டின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தினர். மொகல் ஆளுகைக்குட்பட்டிருந்த காந்தேஷ், பீரார் என்னும் நாடுகளில் சிவாஜி திறை இறுத்தார். தெற்கே இருந்த பெத்தனுள் ராஜன் வருஷா வருஷம் சிவாஜிக்குக் கப்பங் கட்டும்படி நேரிட்டது.

இவ்விதம் சிவாஜி நாளுக்கு நாள் வெற்றியடைந்து வரவே அவருக்குப் பட்டாபிஷேகம்செய்துகொள்ளவேண்டும் என்னும் எண்ணம் உதித்தது. அவ்வெண்ணத்தின்படி 1674-ம் வருஷம இராஜகிரிக்கோட்டையில் வெகு ஆடம்பரத்துடன் சிவாஜி பட்டாபிஷேகம் செய்துகொண்டார். அது முதற்கொண்டு அரசன் என்னும் பெயருடன் அவர் தாம் கைப்பற்றிய நாடுகளை அரசாளத் தொடங்கினர்.

சிறிது காலம் சென்றது. 'போதுமென்ற மனமே பொன் செய்யு மருந்து' என்று எண்ணித் திருப்தியடையலாம். சிவாஜி மேலும் மேலும் அநேகநாடுகளைக் கைப்பற்ற எத்தனித்தார். வேலூர்க்கோட்டையும் செஞ்சிக்கோட்டையும் அவர் கைவசப்பட்டன. நருமதை நதிக்குத் தெற்கே

யுள்ள நாடுகளில் சவுத் என்னும் நாலிலொன்றாகிய வரியை சிவாஜி வசூலித்தார். அதுவேயு மன்றி மொகலாயருக்கு விரோதமாகப் பிஜப்பூர் சுல்தானோடுசேர்ந்து யுத்தம் செய்ததால் அத்தேசத்துச் சுல்தான் அவ்வுதவிக்குக் கைமாறாக அவன் ஆதீனத்திற் குட்பட்டிருந்த சில நாடுகளைச் சிவாஜிக்கு இனாமாகக் கொடுத்தான்.

சிவாஜி, சிதறுண்டு அடிமைத் தொழில் பூண்டு தம் காலத்தை வறிதே கழித்த மகாராஷ்டிரர் உள்ளத்தில் தேசாபிமானம், மதாபிமானம் என்னும் உணர்ச்சியை உண்டாக்கி, அவர்கள் உதவியால் ஹிந்து மதத்தைப் பரிபாலித்து ராஜ்ஜிய ஸ்தாபனம் செய்து, "தமது நாட்டிற்கும் மதத்திற்குமாக யுத்தம் செய்து ஹிந்துக்கள் உயிரை விடுவதற்குச் சம்மதிப்பார்கள்" என்னும் உண்மையை நிலைநாட்டி, அன்னியநாட்டாரும் இதரமதஸ்தரும் ஹிந்துக்களை அவமதியா திருக்கும் வண்ணம் செய்து, கற்றோரும் மற்றோரும், பகைவரும் நண்பரும் ஒருமிக்கப்புகழ்ந்து கூறும் வண்ணம் வீரச் செயல்களைச் செய்து, கடைசியாக 1680-ம் வருஷம் தமது ஐம்பத்து மூன்றாவது பிராயத்தில் இவ்வுலகவாழ்வைவிட்டு நீங்கினார்.

சிவாஜிக்கும் ஔரங்கசீப் பாதுஷாவுக்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளை இதோடு நிறுத்திச் சிவாஜி செய்த இராஜரீக சீர்திருத்தங்களையும், அவருடைய குண விசேஷங்களையும் இனிக்கூறுவோம்.

சிவாஜியின் இராஜ்யபாரம்.

சிவாஜிக்கு யுத்தத்தில் வீரந் தன்மை பொருந்தியிருந்தது மன்றி இராஜ்ஜியபாரம் செய்வதிலும் நிபுணத்துவம் மிக்கிருந்தது. இவ்விரு குணங்களும் ஒருவரிடம் ஒருங்கே அமைந்திருந்தாலன்றி, அவர் நெடுங்காலம் சமாதானமாய்

அரசாட்சி செய்ய இயலாது என்பது யாவரும் அறிந்தவிஷயமே யாகும். ஏனெனில், வீரத்தன்மை மட்டும் பொருந்தியவன் தான் பகை மன்னரிடம் சண்டையிட்டுக் கைப்பற்றிய நாடுகளை ஆள முடியாமல் தயங்குவான். இராஜ்ஜிய பாரநிபுணத்துவம் பொருந்தியவன் தன்னுட்டைக்கைப்பற்றத் தன்னை எதிர்த்துவரும் பகையரசர்களை வெல்வதற்கு முடியாமல் தன்னுட்டை இழந்து மிகவும் வருந்த நேரிடும்.

அரசாளும் திறமையும், வீரமும் சிவாஜியிடம் பொருந்தியிருந்ததால் அவர் சேனை பலமும் அளவற்ற திரவியமும் அமையப்பெற்றிருந்த மொகலாயரை எளிதில் எதிர்த்தார். அவர்களும் அவர் விஷயத்தில் மனத்தினுள் சிறிது அஞ்சியே இருந்து வந்தார்கள்.

மூன் பக்கங்களில் கூறியுள்ள சம்பவங்களிலிருந்து சிவாஜியின் வீரத் தன்மையும், சமயோசித புத்தி சாமர்த்தியமும் நன்கு தெரிந்ததன்றோ? இனி, அவர் இராஜ்ஜியபாரத்தில் வகித்திருந்த நிபுணத்துவத்தைப் பற்றியும் ஒருவாறு விளக்கிக் கூறுவோம்.

வருஷா வருஷம், பயிர் வேலை யொழிந்த சமயங்களில் மகாராஷ்டிரர், தம்தம் மட்டக் குதிரைகள் மீதேறிச் சென்று பிறர் பொருள்களை வேண்டிய மட்டும் கொள்ளையடித்துக் கொண்டுவந்து, அக்கொள்ளைப் பொருள்களை மாரிக்காலத்தில் சாப்பிட்டு வந்தார்கள். சிவாஜி தமது புத்தி சாதுரியத்தால் அவர்களுடைய அவ்வித நடவடிக்கையை அறவே யொழித்து அவர்களை வேறு வழியில் திருப்பினர். மாரிக்காலத்தில் அவர் தமதுசேனையில் சேர்ந்திருந்த வீரர்களுக்குத் தக்கஇடமும், சப்பளமும் கொடுத்து வந்தார். ஒருவருஷத்தில்நான்குமாதங்கள் இப்படியொழியமிகுந்து நிற்கும் எட்டுமாதங்களிலும், சிவாஜி சாம்வசூலிக்

கிற சவுத், சர்த்தஷ்முகி என்னும் வரிகளைக்கொண்டு அவர் களைப் பிழைக்கச் செய்தார். மகாராஷ்டிர சேனையின் தளகர்த்தர்கள் சேனுவீரர் வசூலிக்கும் பொருள் விஷயத் தில் நியாயமான கணக்குத் தயாரித்து வைக்குமாறு ஏற் பாடு செய்தார்.

மகாராஷ்டிரர் ஆண்டுவந்த நாடு முழுவதும் சுயராஜ் ஜிய மென்று சொல்லப்பட்டது அது ஒழிந்த மகா ராஷ்டிரரின் ஆதீனத்திற்குட்பட்டு, சவுத்; சர்த்தஷ்முகி என்னும் இரு வரிகளையும் கொடுக்கும் அன்னிய நாடுகள் மொகலாய தேசமெனப்பட்டன.

சுயராஜ்ஜியத்தில் சிவாஜி, மொகலாயர் செய்தபடி நிலங் களைக் குத்தகைக்கு விடவில்லை. சுயராஜ்ஜியம் முழுவதும் தற்சாலம் ஜில்லா என்று வழங்குவன போன்ற பிராந்தியங் களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது ஒவ்வொரு பிராந்தியத் திலும் ஒவ்வொரு பலத்த மலைக் கோட்டை இருந்தது அம்மலைக்கோட்டையில் சிவாஜியின் பிரதிநிதியும், அவருக் குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களும் இருந்து அப்பிராந் தியத்தின் நிர்வாக விஷயங்களைச் சரியாக நடத்திவந்தனர்.

நிலவரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர் அனைவரும் பிராமணர்களேயாவர். அவ்வித உத்தியோகஸ்தரை நியமிப் பதற்குச் சிவாஜிக்கும் அவரைச் சேர்ந்த உத்தியோகஸ்த ருக்கு மாத்திரமே அதிகாரமுண்டு. வரி வசூலிக்கும் பிரா மணர்கள் தாங்கள் வசூலித்த வரியைக் கணக்குடன் சர்க் கார் கஜானாவுக்கு அனுப்புவது வழக்கமா யேற்பட்டது.

சுயராஜ்ஜியத்திற்கு அதிபதியாகிய சிவாஜி எல்லா விஷயங்களைப் பற்றியும் "அஷ்டப் பிரதானம்" என்னும் சபையாரோடு கலந்து ஆலோசிக்கவேண்டியது அவசியமா

யிருந்தது. அச்சபைக்குத் தலைமை வகித்து நின்றவர் பீஷ்வா என்னும் பிரதான மந்திரியாவர். சுயராஜ்ஜியத்தில் பெரிய உத்தியோகஸ்தர்களைத் தலைமுறை தலைமுறையாக ஒரு வம்சத்தில் பிறந்தவர்களுக்கே கொடுப்பதைச் சிவாஜி வெறுத்தார். அதுவேயு மன்றி இராணுவ உத்தியோகஸ்தரும், இதர உத்தியோகஸ்தரும் ஒரே குலத்தவராயிருந்ததில்லை. அப்படி இருந்ததால் மகாராஷ்டிர சுயராஜ்ஜியத்திற்குக் கெடுதிசெய்வதற்கு அவர்களால் இயலவில்லை.

சவுத், சர்தேஷ்முகி என்னும் இருவரிகள் சுயராஜ்ஜியம் ஒழிந்த மகாராஷ்டிர ஆளுகைக்குட்பட்ட மொகலாய தேசங்களில் வசூலிக்கப்பட்டு வந்தன. அத் தேசத்து மன்னர் அவ்வரிகளைக் கொடுக்கத் தவறினால் மகாராஷ்டிரர் அவைகளைக் கட்டாயத்தின்பேரில் வசூலித்து வந்தார்கள். சிவாஜியின் இராஜ்ஜியபார நிபுணத்துவ விஷயங்களில் முக்கியமானவை இவைகளே யாகும்.

சிவாஜியின் குண விசேஷங்கள்.

மகம்மதிய சரித்திராசிரியர்களே சிவாஜியின் குண விசேஷங்களைப்பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். பகைவரே புகழ்ந்து கூறும் குணவிசேஷங்களையுடைய சிவாஜி சிறு வயதிலிருந்தே தேசாபிமானமும் உடையவராயிருந்தார். ஒருவருக்கு அடங்கி அடிமைத் தொழில் பூண்டொழுகுவதால் எவ்வளவு மேன்மை வரக்கூடியதாயிருந்தாலும் அதை அவர் முற்றும் வெறுத்தார். அது விஷயமாகவே அவருக்கும் அவர் தந்தைக்கும் ஒற்றுமை இல்லாது போயிற்று. அவர் தம் தந்தை வார்த்தையை மட்டும் தட்டினாரேயன்றித் தாய் வார்த்தைக்குக் குறுக்கு ஒன்றும் சொல்லவில்லை. "தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை",

என்னும் முன்னோரது கூற்றை முற்றும் கைப்பற்றி வந்தார். பலவித பாவங்களுக்கும் இருப்பிடமாகிய கோபத்திற்கு அவர் கிஞ்சித்தும் இடங்கொடுக்கவில்லை. அவர் தாம் செய்து முடிப்பதாக எடுத்துக்கொண்ட விஷயங்கள் முடியும் வரையில் மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண் டுஞ்சார்; எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; செவ்வி அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார். எவரும் அஞ்சி நடுங்கும்படியான விஷயங்களில் பிரவேசிப்பதே அவர் சுபாவம். அதற்கேற்றபடி மனோதைரியமும்வலிமையும் அவருடன் பிறந்திருந்தது.

அவர் காலத்தில் அவரைப்போல் குதிரைச் சவாரி செய்வதில் வல்லவர்கள் எவரும் இருந்ததில்லை என்பது சில சரித்திராசிரியரின் துணிபு. கோட்டைகளை முற்றுகை செய்து தம் கைவசப்படுத்துவதில் அவர் நிகரற்றவர். தம் பகைவரைத் தந்திரத்தில் தம்மால் வெல்லக்கூடுமானால் அவர்கள்மீது அமர் புரிவதில் அவருக்கு இஷ்டம் இராது.

இந்து மதத்தைத் துவேஷித்த மகம்மதியர்களின் ஸ்திரீகள் யுத்தகாலங்களிலாவது, மற்றெந்தக் காலங்களிலாவது, தம்கையிற் சிக்கினால் ஒருவிதத் தீமையும் நேரிடாமல் அவர்களைப் பாதுகாத்து அவர்களின் சொந்த ஊருக்கு அனுப்பிவிடுவார். சிவாஜி எந்தக் காலத்திலும், மகம்மதியரின் வேத புத்தகமாகிய குரானையும், தேவாராதனை செய்யும் மசூதியையும் இகழ்ந்து பேசினதே இல்லை.

ஆறுவது அத்தியாயம்.

சிவாஜியின் மைந்தன்.

"சிங்கார வனமதில் உதிப்பினுங் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாதுமோ

திரை எறியும் வாவியில் பூத்தாலு மேகோட்டி
செங்கஞ்ச மலராதுமோ

அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான
தானையின் கன்றதுமோ

ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர்பேரி யோராவரோ

சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாலக்கி ராமமாமோ

தடமேவு கடல்நீரி லேஉப்பு விளையினுஞ்
சாரசர்க் கரையாதுமோ

மங்காத செந்தமிழ்க் குறுழனிக் குபதேசம்
வைத்தமெஞ் ஞானகுருவே

மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே." குமரேசசதகம்.

சிவாஜி இறந்துபோன பிறகு அவர் குமாரனுகிய சாம்பாஜி பட்டத்திற்கு வந்தான். சிவாஜி இறந்துபோன பிற்பாடும் ஔரங்கசீப்மகாராஷ்டிரருடன் யுத்தம் செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. அவர்களை அடக்கும் வரையில் தட்சிண தேசத்தில் தமது ஆளுகை சமாதானமாக இராது என்னும் பூரண நம்புக்கையுடன் அவர்களை யடக்குவதற்கென்றே ஔரங்கசீப் 1682-ஆம் வருஷமும், 1683-ஆம் வருஷமும் பலத்த சேனைகளை அனுப்பினர். அவ்விரு

சேனைகளும் அங்கு அப்போது மகாராஷ்டிரர்களுடன் செய்த யுத்தங்களில் தோல்வியடைந்தன. சண்டையில் இறந்துபோன மொகலாய சேனவீரரைத் தவிர மிஞ்சிநின்ற மற்றைய வீரர்களே மகாராஷ்டிரர் மலைச்சரிவுகளிலும் பள்ளத் தாக்குகளிலும் ஒளிந்திருந்து தாக்கினர்கள். அதனல் அவ்வீரு சேனைகளும் நிலைகெட்டு அழிந்துபோயின. ஆனபோதிலும் ஔரங்கசீப் தாம் பிடித்த பிடியை விடவே இல்லை. இருபது வருடம் வரையில் அவர்களுடன் போராடினர். ஆனல் அவர்களே முழுவதும் அடக்குவது அவரால் முடியாத காரியமா யிருந்தது. அவருடைய கடைசி காலத்தை அவர் அவர்களுடன் போர் புரிவதிலேயே கழித்து ஹிந்துஸ்தானத்திற்குத் திரும்பிவராமல் தட்சிணத்திலேயே மரிக்கும்படி நேர்ந்தது. 1698-ஆம் வருஷத்திலிருந்து 1701-ஆம் வருஷம் வரையில் மகாராஷ்டிரருக்கு விரோதமாசச் சென்ற மொகலாயர் வெற்றியடைந்தனர். ஆனல், 1701-ஆம் வருஷத்திற்குப் பிறகு மகாராஷ்டிரர் தாங்கள் இழந்த நாடுகளைத் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டனர்.

சிவாஜிக்குப் பின்பட்டத்திற்கு வந்த சாம்பாஜி சிவாஜியைப்போல் சுத்த வீரனல்லன். இராஜ்ஜியபாரத்தை அவனல் தாங்க முடியவில்லை. அவன் சங்கேஸ்வரம் என்னும் இடத்தில் தன் மனதிற்குகந்த திராட்சை ரசபானம் செய்தவண்ணம் தன் காலத்தைச் சல்லாபமாய்க் கழித்துவந்தான். அவன் கீழடங்கிய குடிகள் அனைவரும் அவனுடைய கொடுங்கோல் அரசாட்சியை வெறுத்தனர்.

ஔரங்கசீப்பின் சேனவீரர் சிலர் கள்ளத்தனமாய்ச் சங்கேஸ்வரத்திற்குச் சென்று, சிற்றின்பசாகரத்தில் ஆழ்ந்துகிடந்த சாம்பாஜியையும், அவனுக்குத் தூர்ப்போதனை சொல்லிக்கொண்டிருந்த கலுஷா என்னும் மந்திரியையும்

தங்கள் கைவசப்படுத்தி, இரவோ டிரவாய்க் கொண்டு போய் ஔரங்கசீப்பின் முன்னர் நிறுத்தினர்கள். அப் பொழுது யானைமீதேறியிருந்த ஔரங்கசீப் கீழே இறங்கிக் கடவுள் தம்மிடம் காட்டிய பட்சத்திற்காக அவரைஸ்தோத் தரித்தார். பிறகு அவர் தமதுகையிற் சிக்கிய இருவருடைய நாக்களையும் அறவே அறுத்து அவர்களைக் கொடுரவதை செய்து சொல்லும்படிகட்டளையிட்டார். கொலையுண்டிறந்த அவ்விருவர்களின் தலைகளையும் இரு கொம்புகளில் நாட்டித் தட்சிண தேசத்துப் பிரதான நகரங்களில் பவனி வரும் படியாகவும் ஏற்பாடு செய்தார்.

இராஜகிரிக் கோட்டை ஔரங்கசீப்பின் வசப்பட்டது. கொலையுண்டிறந்த சாம்பாஜியின் புதல்வன் சாகு என்பவன் டில்லியிலுள்ள மொகலாயர் அரண்மனையில் அநேக வருஷங்களாக நிறுத்தி வைக்கப் பட்டான்.

இராஜகிரிக் கோட்டையும், சாகுவும் தமதுவசப்பட்டதும், மகாராஷ்டிரர் நிலைகுலைந் தழிந்தனர் என்று ஔரங்கசீப் எண்ணிவிட்டார். அவர் எண்ணியது பிசகு. சாம்பாஜியைக் கொலைசெய்த விஷயத்தை அறிந்த மகாராஷ்டிரர் ஒன்று கூடினர். அவர்களுக்குத் தலைவனாக இருந்தவன்— கொலையுண்டிறந்த சாம்பாஜியின் சகோதரனை இராஜாராம் என்பவன்— அநேக விஷயங்களில் மொகலாயர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தான். அதை அறிந்த ஔரங்கசீப் ஜுல்பிகர்கான் (Znlphi Karkhan) என்னும் தமது தளகர்த்தனைச் செஞ்சிக் கோட்டையிலிருந்த இராஜாராமைக் கைப்பற்றிக் கோட்டையை முற்றுகையிட அனுப்பினர். அத் தளகர்த்தனுக்கும், இராஜாராமுக்கும் நட்புண்டாயிற்று. அதனால் ஜுல்பிகர்கான் டில்லி பாதுஷாவின்

சட்டலையின்படி நடவாமல் தன்னிஷ்டம்போல் காலத்தை வளர்த்தி நின்றான். இப்படி அவன் காலதாமதம் செய்வ தை அறிந்த ஔரங்கசீப் கோபங்கொண்டு முற்றுகையை வெகு விரைவில் முடிக்கும்படி ஆக்ஞாபித்தார். ஔரங்க சீப்பின் கோபம் இத்தன்மையது என்பதை நன்கு அறிந் திருந்த ஜுல்பிகர்கான் செஞ்சிக்கோட்டையை மும்மூர மாய் முற்றுகையிட ஆரம்பித்து அக்கோட்டை தன்வசப் படுவதற்குமுன் இராஜாராமைத் தப்பியோட விடுத்தான். செஞ்சிக்கோட்டை கடைசியாக மொகலாயர் வசப்பட் டது. ஆனல் மொகலாயர் அதனல் அடைந்த பிரயோஜ னம் ஒன்றுமில்லை என்றே கூறலாம்.

செஞ்சிக் கோட்டையிலிருந்து தப்பியோடிய இராஜா ராம் நெடுங்காலம் ஜீவித்திருக்கவில்லை. அவனுக்குப்பிறகு அவன் மனைவி தாராபாய் என்பாள் யாவரும் மெச்சத் தகுந்த தைரியத்துடனும் சாமர்த்தியத்துடனும் மகாராஷ் டிர சேனைகளுக்குத் தலைமைவகித்து மொகலாயருக்கு விரோதமாய்ப் போர்புரிய ஆரம்பித்தாள். அநேக புதிய கோட்டைகள் எழும்பின. தாராபாயின் உத்தரவின்மீது தட்சிண தேச முழுவதும் பயிர்செய்வதற்கின்றிக் கரம் பாயின. அதைக் கண்ட ஔரங்கசீப் தமக்கென்று அமைத் திருந்த பாசறையை விட்டுத் திகிலினல் வெளியே வந்தா ரில்லை. அவர் கண்முன்பாகமொகலாயசேனவீரர் கொள்ளை யடிக்கப்பெற்றுப் பெரிதும் வருந்தினர். தட்சிண தேச முழுவதும் பஞ்ச முண்டாயிற்று. கொள்ளை நோய்கள், தலைகாட்ட லாயின. 1706-ஆம் வருஷம் ஔரங்கசீப் ஒன்றும் செய்ய இயலாமல் ஆமத் நகரம் சென்றார்.

ஏழாவது அத்தியாயம்.

ஔரங்கசீபின் ஆளும் முறைமை.

"இசையா தெனினு மியற்றியோ ராற்ற
லசையாது நிற்பதா மாண்மை — ***" — நாலடியார்.

டில்லியில் அரசாண்டுவந்த மொகல் பாதுஷாக்களில் ஔரங்கசீப்பைப்போல் மகம்மதிய மதத்தில் மிகுதியும் பற்றுடையவர் எவரும் இருந்ததில்லை. சிறு பிராயத்திலிருந்தே அவர் மகம்மதிய வேதமாகிய குரானைக் கைவிடாமல் வாசித்துக்கொண்டேயிருந்தார். அவ்வேதத்தில் கண்ட மதசம்பந்தமான விதியின்படி இம்மியும் பிசகாமல் நடக்கவேண்டுமென்பதே அவருடைய சித்தாந்தம். அவர் இறக்கும்வரையில் அவ்விதமே செய்துவந்தார். அவருடைய மதப்பற்றை விளக்க இரண்டொரு விஷயங்களைப்பற்றி மாத்திரம் இங்குக் கூறுகிறோம்.

1647-ஆம் வருஷம் ஷாஜஹான் தமதுகுமாரர் ஔரங்கசீப்பைப் பாக் (Balk), பதக்ஷான் (Badakshan) என்னும் நாடுகளைக் கைப்பற்றவேண்டுமென்று சேனையுடன் அனுப்பினர். சேனையுடன் புறப்பட்ட ஔரங்கசீப் அவ்வருஷம் மேமீ 25-உ பாக் என்னும் இடத்தை அடைந்தார். அத்தேசத்துச் சுல்தான் அப்துல் அசீஸ்கான் என்பவன் சேனைக்கும், மொகலாய சேனைக்கும் பலத்த யுத்தம் நடந்தது. இருதிறத்தாரில் அநேகர் மாண்டனர். பொழுதும் சாய்ந்தது. சண்டை ஓய்வதற்கு வழியில்லை. அச்சமயத்திலும் ஔரங்கசீப் தமது நித்யகர்மானுஷ்டானங்களைச் சரிவர முடிக்கவேண்டும் என்னும் கருத்துடன் தாம் ஏறியிருந்த யானையினின் றிழிந்து தரையில் மண்டியிட்டு உட்

கார்ந்து ஜபம் செய்தார். அச் சமயத்தில் அவர் தமது உயிரையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. மும்முரமாக யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போதும் ஔரங்கசீப் ஜபம் செய்வதைத் தவிர்க்கவில்லை என்னும் செய்தி பகை மன்னனுக்குத் தெரிந்தது. அவன் உடனே சண்டையை நிறுத்தி, 'அத்தகைய மதப்பற்றும், வைராக்கியமும்உடைய ஔரங்கசீப்புடன் நான் சண்டையிட்டால் அழிந்து போவேன் என்பது திண்ணம்' என்று கூறினான்.

அவருக்கு மகம்மதிய மதத்தின்மீதிருந்த பற்றே இதர மதங்களையும் மதஸ்தரையும்இகழும்படி தூண்டிற்று. அதுவு மல்லாமல், ஷீயா, சுன்னி என்னும் இருபிரிவினராகிய மகம்மதிய மதஸ்தருள்ளும் ஷீயாக்களை அவர் வெறுத்தார்.

இவ்விதம் ஔரங்கசீப் தமது மதப்பற்றால் இந்துக்களின் கோயில்களை இடித்தது மல்லாமல் அவர்கள் மீது ஜெசியா என்னும் தலைவரியையும் சுமத்தினர். அதுவு மன்றி அவர் தம்முடைய மதஸ்தரில் ஒரு பிரிவினராகிய ஷீயாக்களையும் பலவிதங்களில் இந்துக்களைத் துன்புறுத்தியது போலவே துன்புறுத்தினர்.

மத வைராக்கியத்தால் அவர் இந்துக்கள்மீது தலைவரி ஏற்படுத்தியபோது, அவருடைய முக்கிய நண்பரில் ஒருவராகிய இராஜ ராஜசிங் பின்வருமாறு கடிதமொன்று அவருக்கு எழுதி அனுப்பினர்.

"மகாராஜ்! தங்கள் இரண்டாம் பாட்டனாராகிய அக்பர் பாதுஷா, மொகல் ராஜ்ஜியத்தின் விஷயங்களில் நீதி நெறி வழாது, இந்துக்களையும், மகம்மதியரையும், கிறிஸ்தவர்களையும் சமமாக நடத்தினர். அவர் காலத்தில் குடிகள்

க்ஷேமமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தார்கள். அவருடைய அரசாட்சிக்குக் குறை கூறுகிறவர் எவருமிலர். ஜிஹாங்கீருப், ஷாஜஹானும் அவர் வழியைப் பின்பற்றி நடந்தனர் ஆனால், தாங்கள் மதவிஷயத்தில் அவரது கொள்கையை அறவே யொழித்து வேறு விதமாக நடப்பதால் அநேகருக்குத் தங்கள் மீதும், தங்கள் ஆளுகைமீதும்பற்றில்லாமற் போய்விட்டது. தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாகாணத்துக் குடிகள் அனைவரும் படுகிற அவஸ்தைகள் அளவிட முடியாதவைகளாயிருக்கின்றன. தங்கள் இராஜ்ஜியத்தில் நாளுக்குநாள் ஜனத்தொகை குறைந்து கொண்டேவருகிறது உலகத்திற் கெல்லாம் இருப்பவர் ஒரே கடவுளாவர். அவர் எல்லோருக்குமே கடவுளாவர். அவர் மகம்மதியருக்கு மாத்திரம் கடவுள் அல்லர். அவர் முன்னிலையில் எல்லா மதஸ்தர்களும் ஒரே தன்மையர்கள்தாம், இதர மதஸ்தரை இகழ்ந்து அவர்களுடைய நடையுடை பாவனைகளை இசழ்வது யாவர்க்கும் பொதுவான கடவுளுக்குச் சிறிதும் சம்மதியா யிராது என்பதைத் தாங்கள் உணர்வீராக.''

இக்கடிதத்திலிருந்து, பொது ஜனங்கள் ஔரங்கசீபையும், மத சம்பந்தான அவர் செய்கையையும், எவ்விதம் கருதினர்க ளென்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

ஔரங்கசீபிற்கு மதவைராக்கியமே யன்றி எவர்மீதும் சந்தேகப்படுங் குணமும் இருந்தது. தமது ஆளுகைக் குட்பட்ட மாகாணங்களின் இராஜப் பிரதிநிதிகளை அவர் பெரிதும் சந்தேகித்தார். அதனல் அவர்களுடைய நடவடிக்கைகளை அறிந்து அவ்வப்போது தமக்குத் தெரிவிக்கும்படி இராஜப் பிரதிநிதிகள் அறியாதவாறு அநேக ஒற்றர்களை அனுப்பி வைத்தார். அவ்வொற்றர்கள் மாகாண ராஜப்பிரதிநிதிகள் டில்லி பாதுஷாவுக்கு விரோதமாகச் செய்யும் காரி

யங்களைக் கொஞ்சமும் விடாமல் ஔரங்கசீப்பிற்கு எழுதி அனுப்புவார்கள் அவர்கள் வார்த்தையையும் முழுவதும் நம்பாமல் மாகாணப்பிரதிநிதிகளைப்பற்றி அவர்கள் எழுதிய விஷயங்கள் உண்மையா அல்லவா என்பதைக் குறித்துத் தீர விசாரித்துக் குற்றவாளிகளென்று அவருக்குத் தோன்றும் மாகாணப் பிரதிநிதிகளைத் தகுந்தபடி சிட்சிப்பார். அவருக்குத் தமது குமாரர்கள் மீதும், குமாரத்திகள்மீதும் நம்பிக்கை இருந்ததில்லை. தாம் தமது தகப்பனாரையும், சகோதரரையும் செய்தது போலவே தம்மையும் தமது புதல்வர் செய்வார்கள் என்று நினைத்தார் போலும். அப்படி அவர் நினைப்பதற்கு அவர் இருந்த காலமிலை காரணமாயிருந்தது. அவர் அவ்விதசந்தேகத்தன்மை வாய்ந்தவரான படியால் எவரும் அவரோடொருவர் நெருங்கிப் பழகினதில்லை; அவர் அருகில்வரவும் எல்லோரும் பயப்படுவார்கள்.

ஔரங்கசீப் மற்ற மொகல் பாதுஷாக்களைப்போல அல்லாமல் புத்தி சாதுரியமும், சுயேச்சையான எண்ணமும் இல்லாதவர்களையே தமது உத்தியோகஸ்தர்களாகத் தெரிந்தெடுப்பார். அவ்விதம் அவர் செய்ததற்கு முக்கிய காரணம் யாதெனில், அத்தன்மைவாய்ந்த மனிதரே அவருக்கு அடங்கிப் பயபக்தியுடன் நடப்பதுமன்றி மொகல் ராஜ்ஜியத்திற்குத் தைரியமாய் ஒரு கெடுதியும் செய்யத் துணியமாட்டார்கள் என்கிற எண்ணமேயாம்.

ஔரங்கசீப் டில்லி பாதுஷாவாகச் சிம்மாசனமேறிய நாள் முதல் இறக்கும் வரையில் இராஜபோக நுகர்ச்சியில் தவது கவனத்தைச்செலுத்தாமல், அன்றன்று முக்கியமான அரசாங்க விஷயங்களையெல்லாம் தாமே ஆலோசித்து ஒருவருடைய உதவியுமின்றிச் செய்து முடிப்பார்.

அவர் தைரியத்திலும், போர் செய்யுந் திறமையிலும், அவருடைய இரண்டாம் பாட்டனாராகிய அக்பரை ஒத்திருந்தார். ஆனால், அவர் அக்பரைப்போல் இந்துக்களையும், இராஜபுத்திரர்களையும் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்னுங் கருத்துடன் அவர்களுக்கு மொகலாய ராஜாங்கத்தில் உத்தியோகம் கொடுத்து அவர்களைத் தமது நண்பர்களாசக் கொள்ளாமல், மத வைராக்கியத்தால் அவர்களை மகம்மதிய மதத்திற் சேருமாறு நிர்ப்பந்தப் படுத்தியும், அவர்கள்மீது ஜெசியா என்னும் வரியைப் போட்டும் அவர்களைத் தமது பகைவர்களாகச் செய்துகொண்டார். அநேக சமயங்களில் அவர் பகைவருக்கு விரோதமாகத் தாமே சேனைத் தலைமை வகித்து நடத்தினார். 'புகழைக் கருதினால் உயிருக்கு ஆபத்து வருகிறதே என்று அஞ்சுதல் கூடாது" என்று அவர் அடிக்கடி கூறுவது வழக்கம். அவர் எவ்வித ஆபத்திலும் நிதானத்தையேகைக்கொண்டொழுகுவார். பரபரப்புடன் எக்காரியத்தையும் செய்யார்.

அவர் எவ்வித கடினமான வேலைகளைச் செய்தாலும் எளிதில் இளைப்படைய மாட்டார். யுத்த காலங்களில் உணவையும் பெரிதாகக் கருதமாட்டார். எவ்வளவு தூரம் குதிரைச் சவாரி செய்தாலும் அவர் சலிப்படைவதில்லை. அவர் தமது பகைவர்நாட்டைக் கைப்பற்றக் கருதித் தமது முக்கிய தளகர்த்தரை அவர்களுக்கு விரோதமாகச் சேனையுடன் அனுப்பி அத்தளகர்த்தரால் ஒன்றும் இயலாத காலத்துத் தாமே முன்னின்று சேனைகளை நடத்தி வெற்றி பெறுவார். அக்காலங்களில் இராஜபோகத்தைக் கருதிக் கொண்டு அவர் அரண்மனையில் தங்குவதில்லை.

ஔரங்கசீப் இராஜரீக தந்திரத்தில் மிகுந்த நிபுணத்துவம் வாய்ந்தவர். அநேக சமயங்களில் அவர் தந்திரத்தினு

லேயே தமக்கு நேரக்கூடிய ஆபத்துக்களிலிருந்து தப்பி யிருக்கிறார். ஒருசமயம் இராஜபுத்திரர்கள் அவருக்கு விரோ தமாய்க் கிளம்பியபோது அவர்களை அடக்கும் பொருட்டு அவர் தமது குமாரனுகிய அக்பரைச்சேனையுடன் அனுப்பி வைத்தார். அவன் அவருக்குத் துரோகம் செய்யவேண் டும் என்னும் சிந்தையுடன் இராஜபுத்திரர்களுடன் சேர்ந்து கொண்டு தன் தந்தையையே எதிர்க்க ஆரம்பித்தான். அதை அறிந்த ஔரங்கசீப் அவனைத் தகுந்தபடி தண்டிக் கக் கருதித் தந்திரமொன்று செய்தார். அவர் அநாம தேயக் கடிதம் ஒன்றெழுதி அதை இராஜபுத்திரர்கள் கூடா ரமடித்துத் தங்கியிருந்த இடத்தில் போடுவித்தார். அக் கடிதம் அவர் யோசித்திருந்தபடி ஓர் இராஜபுத்திரன் கை யிற்பட்டது. உடனே அவன் தன் சேனபதியிடம் தான் கண்டெடுத்த காகிதத்தைக்கொடுத்தான். அதில் எழுதி யிருந்த விஷயங்களைக் கண்ணுற்ற சேனபதி பெரிதும் திகி லடைந்து அக்பரையும், அவன் சேனையையும் அவ்விடத்தை விட்டுத் துரத்தினன். அக்பர் தன் தந்தை முகத்தைக் காண்பதற்கின்றிப் பாரசீகத்திற்குப் போய்விட்டான். அவ் வாறு சென்ற அக்பர் மறுபடியும் திரும்பி இந்தியாவுக்கு வரவேயில்லை. இராஜபுத்திர சேனபதி அக்பரை வெருட் டத் தக்கவாறு ஔரங்கசீப் எழுதிய கடிதத்தில் என்ன இருந்தது? ஔரங்கசீப் வெகு தந்திரசாலியாகையால் அக் கடிதத்தில், அக்பர் கபடன் என்றும், அவன் இராஜ புத்திர வீரரைத் தனது தந்தை ஔரங்கசீப்புக்குக்காட்டிக் கொடுக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன், அவர்க ளோடு சேர்ந்ததாகப் பாவனை பண்ணுகிறனென்றும், அவனை இராஜபுத்திரர்கள் தங்களோடு சேர்த்துக்கொண் டால் கட்டாயம் தீங்கு நேரிடுமென்றும் யாரோ எழுதியது

போல் எழுதியிருந்தார். இராஜபுத்திரர்கள், அக்காலத்தில் மகம்மதியர் மீதிருந்த சந்தேகத்தாலும் ஔரங்கசீப் தந்திர சாலி என்று தெரிந்திருந்ததாலும் அக் கடிதத்தில் கண்ட விஷயங்கள் உண்மையா யிருக்குமென்றே நம்பினர்கள்.

ஔரங்கசீப் யுத்தத்தில் மிகுந்த வல்லவரா யிருந்தது போலவே, இராஜரீக விஷயங்களைப்பற்றிக் கடிதங்கள் எழுதுவதிலும், மதசம்பந்தமான விஷயங்களை வாசிப்பதிலும், தேர்ச்சியடைந்தவரா யிருந்தார். மொகல் மாகாணங்களில் அரசாண்டுவந்த தமது பிரதிநிதிகளுக்கும், இன்னும் இதர உத்தியோகஸ்தர்களுக்கும், மொகல் மாகாணங்களில் தமக்குப் பதிலாக அரசாண்ட தமது புத்திரர்களுக்கும் அவர் அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டே இருப்பார். அவர் தமது புதல்வர்களுக்கு எழுதியகடிதங்களில் பெரும்பாலன புத்திமதியே அதிகமாயிருக்கும்.

மகமதிய வேதமாகிய குரானில் கண்ட விஷயங்களில் ஒரு சிறிதும் தவறாமல் நடக்க வேண்டுமென்பதே அவருடைய முக்கிய கொள்கை. அக் கொள்கையை அவர் தம் குடிகளிற் பலரும் கைக்கொள்ள வேண்டுமென்று தம்மால் கூடியவரையில் பிரயத்தனம் செய்தார். அவ்விஷயங்களில் பிசகினவர்களைத் தண்டிப்பதில் அவருக்கு வெகுபிரியம்.

தமக்குமுன் அரசாண்டுவந்த சில மொகல் பாதுஷாக்களைப் போல் சோம்பலா யிருப்பதற்கு அவர் பிரியப்படவில்லை. எப்போதும் வேலை செய்துகொண்டே இருக்க வேண்டுமென்பது அவருடைய வைராக்கியம். அதனல் இராஜரீக நிர்வாக விஷயங்களைச் செய்து முடிந்த பிறகு அவருக்கு வேலை யொன்றும் இல்லாவிட்டால் அவர் கொரான் என்னும் வேதத்தை எழுதுவார். அவ்விதம் இரண்டு பிரதிகள் எழுதி முடித்து அவைகளை மகம்மதிய

புண்ணிய ஸ்தலமாகிய மெக்கா (Mecca) மெதினு (Medina) என்னும் இடங்களுக்கு அனுப்பி வைத்தார் அதுவுமல்லாமல் தொப்பிகள் தைத்து அவர் விற்பது வழக்கமா யிருந்தன. அவருடைய சோம்ப லின்மையைக் காண்பிக்கும் பொருட்டு அவர் அனுசரித்துவந்த நித்திய விதியைப் பின்வருமாறு கூறுகிறோம்.

1. காலை 5—7-30 மணி. படுக்கையை விட்டெழுந்ததும் ஜபதபமுடித்தல், மதவிஷயமான நூல்களை வாசித்தல் முதலியன

2. காலை 7-30—8-30 நியாய பரிபாலனம், பிராதுகளை விசாரிப்பது.

3. காலை 8-30—9-15 தமது படுக்கை யறையின் கீழ்ப்புரத்திலிருந்து ஜனங்கள் கூறும் குறைகளைக்கேட்டு அக்குறைகளை நிவர்த்தித்தல்.

4. காலை 9-15—11. தர்பார்.

5. காலை 11—45 தம்மைக் காண வருபவருடன் வார்த்தையாடல்.

6. காலை 11-45—2. பகற்போஜனம், அந்தப்புரத்தில் பகல் தூக்கம்.

7. 2—2-30 ஜுகர் (Zuhar) என்னும் ஜபம் செய்தல்.

8. மாலை 2-30—5-30 தமது அந்தரங்க அறையில் படிப்பதும், இராஜநிர்வாக விஷயங்களைப் பார்ப்பதும், அசர் (Asar) என்னும் ஜபம் செய்வதும்.

9. மாலை 5.30—6-40 ஜபதபங்கள்.

10. 6-40—7-40 திவானிகாஸ் என்னும் மாளிகையில் போய்ச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தல்.

11. 7-40—8. இராஜரீக சபை கலைதல். இஷா என்னும் ஜபம் செய்தல்.

12. இரவு 8—அந்தப்புரம். கடவுளைத் தியானம் செய்தல், மதசம்பந்தமான நூல்களை வாசித்தல்.

13. இரவு 10 நித்திரை புரிதல்.

சிற்பம், சங்கீதம், நடனம், காவியம் இவைகளில் ஔரங்கசீப்புக்குக் கொஞ்சமேனும் விருப்பமில்லை. அவர் சிம்மாசனம் ஏறியவுடனே அரண்மனையிலிருந்த சங்கீத வித்வான்களை உத்தியோகத்தினின்றும் நீக்கிவிட்டார். இவ்விதம் நீக்கப்பட்ட வித்வான்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பல்வேறு சங்கீதக்கருவிகளை, ஒரு பிணந்தூக்கும் பல்லக்கில் வைத்து அதைத் தூக்கிக்கொண்டு ஔரங்கசீப் பின் அரண்மனைக்கு அருகே இருந்த சாலை மார்க்கமாய்த் துக்க முகத்துடன் போயினர். அதைப் பலகணி வழியே பார்த்த ஔரங்கசீப் தமது அருகிலிருந்த பிரபுக்களிற் சிலரை, 'அஃது என்ன?' என்று வினவினர். அதற்கு அவர்கள், 'மகாராஜ்! தங்களால் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்ட சங்கீத வித்வான்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய ஆதரவில்லாமையால் சங்கீதமே இறந்துவிட்டதென்று சங்கீதக் கருவிகளைக் கொண்டுபோய்ப் புதைக்கப் போகிறார்கள்' என்றார்கள். ஔரங்கசீப் அதைக் கேட்டுச் 'சரி' அப்படியானால் அவர்கள் ஆழத்தோண்டி அவைகளைப் புதைக்கட்டும். அவ்விதம் செய்தால் அக்கருவிகள் திரும்பவும் மேல் எழும்பமாட்டா?' என்றாராம்.

இச்சிறு சம்பவத்திலிருந்து சங்கீதத்தில் ஔரங்கசீப்புக்கு இருந்த வெறுப்பு நமக்கு உள்ளங்கை நெல்லிக் கனி

போலத் தெரிகிறதல்லவா? சிற்பத்தொழிலில் அவருக்கு விருப்பமின்மையை அவர் காலத்தில் கண்கவரும் சிறந்த கட்டடங்கள் நிருமிக்கப்படாததனால் நாம் தெரிந்து கொள்ளக் கிடக்கின்றது. அவர் தமக்கென்று கட்டிக்கொண்ட கல்லறையும் மிகச் சாதாரணமானதே.

அவருக்கு ஆடம்பரம் என்பது ஆகாது. அவர் மற்ற மொகலாய அரசர்களைப்போல் இல்லாது வெகு சாதாரணமான உடையையே அணிந்திருந்தார். கடவுள் விஷயத்திலேயே அவர் தமது கவனத்தைச் செலுத்தியதால், அவர் உண்ணும் உணவு தேகத்திற்குப் புஷ்டியைத் தரத்தக்கதாய் இருந்ததில்லை. திராட்சை ரச மதுபானத்தை அவர் கனவிலும் பருகினதில்லை. அவரை அவருடைய எழுபத்தெட்டாவது பிராயத்தில் பார்த்த காமெல்லி கராரி (Gemelli Carrari) பின்வருமாறு அவரைப்பற்றி எழுதியிருக்கிறார்.

"ஔரங்கசீப் நெடிய உருவினரல்லர். அவர் தேகம் பருத்திருக்கவில்லை. வயது தளர்ந்து போனதால் அவர் முதுகு வளைந்திருந்தது. அவருடைய நரை நீண்டு தாடி சுருண்டிருந்தது அவர் தரித்திருந்த உடை வெள்ளை மஸ்லினால் ஆயது. அவருடைய தலைப்பாகையை ஒரு பருத்த விலையுயர்ந்த மரகதக்கல் அலங்கரித்து நின்றது. பெரும்பாலும் அவர் தமது சபையோர்களின் நடுவில் தடியொன்று ஊன்றிய வண்ணம் நிற்பார். தமக்குக் கடிதம் எழுதும் மனுக்களைத் தாமே வாசித்துப் பார்த்து அவ்விண்ணப்பங்களைப் பற்றிய தம்முடைய அபிப்பிராயத்தைத் தமதுகைப்படவே எழுதுவது வழக்கமாயிருந்தது. அப்படி எழுதுகையில் அவர் புன்சிரிப்புடனேதான் இருப்பார். மகம்மதி

யர் அனைவரும் எல்லா பாதுஷாக்களையும் விட அவரையே பெரிதும் பாராட்டி வியந்தனர்.”

இத்தகைய குண விசேஷங்கள் வாய்க்கப் பெற்ற ஔரக்கசீப் மத வைராக்கியமின்றி இருந்திருப்பாரானால் அவர் அரசாட்சி எவ்விதம் நடந்திருக்கும்? அவர் காலத்தில் மொகல் இராஜ்ஜியம் க்ஷீணமடைய ஆரம்பித்ததற்கு அவருடைய மத வைராக்கியமே முதற் காரணமாயிருந்தது. அவர் அரசுரிமை பெற்றதால் மொகல் ராஜ்ஜியம் அடைந்த நன்மை ஒரு சிறிதும் இல்லை. ஆனால், அவரே மத வைராக்கியமின்றித் தளகர்த்தராகவாவது, பிரதான மந்திரியாகவாவது, பள்ளிக்கூடத்து உபாத்தியாயராகவாவது உத்தியோகம் வகித்திருந்தால், அத் துறைகளில் அவர் மிகுந்த பிரக்யாதி பெற்றிருப்பார் என்பதற்கு எத்துணையும் ஐயமில்லை. மொகல் ராஜ்ஜிய முடிவுக்கென்றே அவர் டில்லி பாதுஷாவாக வந்தார் போலும்!

ஔரங்கசீப் கவிவாணர்களை இகழ்ந்தாரேனும் அவர் காலத்தில் அநேக கவிகள் பிரசித்தி பெற்று உலவலாயினர். அதற்குக் காரணம் ஔரங்கசீப்பின் அருமைப் புதல்வி ஜேப்-உன்,நீசா ஆவள். கவிவன்மையை இகழ்ந்த ஔரங்கசீப்புக்கு அத்தகைய புதல்வி வாய்த்தது அக்காலத்துப் புலவர் செய்த புண்ணியமே யாகும்.

ஔரங்கசீப்புக்கு அவர் முதல் மனைவி தில்ரஸ்பானு விடம் 1639-ஆம் வருஷம் பிறந்த அவர் மூத்த மகளே ஜேப்-உன்-நீசா என்பவள். ஔரங்கசீப் தமக்குப் பிறந்த பெண் மக்கள் யாவரினும் அவளையே பெரிதும் நேசித்தார். அவளும் அவருடைய அந்தியகாலத்தில் அவருக்கு வேண்டிய உபசரணைகளைத் தானே செய்து முடித்து வந்தாள்.

அவளுக்குச் சிறுபிராயத்திலிருந்தே பாரசீகநூல்களில் பிரியம் அதிகம். அவள் தனக்கு ஏழுவயதான போது கொரான் என்னும் மகம்மதிய வேதத்தைப் பாராயணம் செய்து தன் தகப்பனரிடம் ஒப்புவித்தாள். அத் தினத்தை ஔரங்கசீப் ஒரு நற்றினமாகக் கொண்டு டில்லிக்கு அரு காமையி லிருந்த ஓர் மைதானத்தில் மொசலாய சேனவீரர் களுக்கு விருந்தளித்தார். அநேக பிரபுக்களை வரவழைத்து அவரவர்கள் அந்தஸ்துக் கேற்றபடி சன்மானமளித்தார். அன்றையதினம் அவர் ஏழைகளுக்கு முப்பதாயிரம் பொன் நாணயங்களைப் பகிர்ந்து கொடுத்தார். பின்னர், அவர் இரண்டுநாட்கள்வரை எல்லாருக்கும்,விடுமுறை அளித்தார்.

அதன் பிறகு அவள் அரபி பாஷையைக் கற்கத் தொடங்கி நான்கு வருஷத்தில் அதில் மிகுந்த பாண்டித்தி யம் அடைந்தாள். அவள் படித்தது மல்லாமல் கவிகள் கட் டும் சாமர்த்தியமும் வாய்ந்திருந்தாள்.

முதல் முதல் அம்மங்கை நல்லாளைத் தம்முடைய பேர னும், தாராஷுகோவின் மைந்தனுமான சுலேமான்ஷு கோ என்பவனுக்கு மணம்புரிவிக்க வேண்டுமென்று ஷாஜ ஹான் விரும்பினர். ஆனல் ஔரங்கசீப்பின் அருமை மகள் அவளை மணப்பதில் பிரியப்படவில்லை. அதற்கேற்றபடி சுலேமான்ஷுகோவும் இறந்துவிட்டான்.

ஆனல் அவளை மணம்புரியச் சுற்றுப் பக்கத்திலுள்ள தேசங்களிலிருந்து அநேகர் முன் வந்தனர். அவர்களில் முக்கியமானவன் ஈரான் தேசத்து இளவரசன் மீர்ஸாபாக் என்பவன். அவன் அவளை மணம்புரிய எவ்வளவோ முயன் றான். எனினும், அவனுடைய நடையுடை பாவனைகள் அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்காத படியினல் அவன் எடுத்துக்கொண்ட அம் முயற்சி வீணுயிற்று.

ஔரங்கசீப் ஜேப்-உன்-நீசா மீது மிகுந்த பிரியம் வைத்திருந்தபடியால் அவளை அவர் அவுளிஷ்டம்போல் இருக்க விட்டு விட்டார். அவள் தனக்குத் தெரிந்த வித்துவான்களைத் தன்னிடம் வரவழைத்து அவர்களுடைய வித்துவத் தன்மையை வியந்து அவர்களுக்குப் பரிசளித்து அனுப்புவாள். அவளுக்குத் தன் சிற்றப்பனுகிய தாராஷுகோமேல் பிரியம் அதிகம். ஏனெனில் அவனும் அவளைப் போல் கவி பாடுவதில் வல்லவனு யிருந்ததுமன்றி அக்காலத்திய இலக்கியக் கடலுள் ஆழ்ந்து நந்தான். ஜேப்-உன்நீசா ஔரங்கசீப்பின் ஆலோசனை சபைக்கு முகமூடியுடன் வந்து அவருக்கு வேண்டிய ஆலோசனையை அனேக சமயங்களில் சொல்லியது முண்டு.

ஔரங்கசீப்பைப் போலவே அவளும் மகம்மதியமதத்தில் பற்று மிகுந்து விளங்கினுள். ஆனல், அவரைப்போல் அவள் அவ்வளவு வைதீகமும், வைராக்கியமும் உடைய வளாய் இருந்ததில்லை. அவள் மத விஷயங்களில் வாதம் செய்வதற்குச் சிறிதும் பின்தங்கமாட்டாள். அவள் வாதங்களைக் கேட்ட சிலர் மகம்மதிய மத விஷயத்தில் அவளுக்கிருந்த கொள்கைகளையே அனுசரிக்க ஆரம்பித்தனர்.

ஔரங்கசீப் அவள் செலவுக்கென்று வருஷாவருஷம் நாலுலட்சம் ரூபாய்கள் கொடுப்பது வழக்கம். அவள் அப்பணத்தைத் துர் வினியோகம் செய்ததே இல்லை. தன்னை அடுத்த வித்துவான்களுக்கும், ஏழைகளுக்கும், தாய்தந்தையற்றசிறுவர்களுக்கும், விதவைகளுக்கும், மெக்கா, மெதினு என்னும் மகம்மதிய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ய விரும்புவர்களுக்கும் அப்பொருளில் முக்கால்பங்கு கொடுத்து மகிழ்ந்தாள். அதுவுமல்லாமல் பாரசீக பாஷையிலிருந்து சிறந்த நூல்களை மொழி பெயர்த்து எழுதுவ

தற்கு விரும்பி அது விஷயத்தில் மிகுந்த பணம் செலவழித்தாள். அவளுடைய கவி வன்மையையும், உதாரத்துவத்தையும் கேட்ட அநேக வித்துவான்கள் தாங்கள் எழுதிய நூல்களை அவ்வப்போது அவளிடம் அனுப்பித் தக்க பரிசு பெற்று வந்தார்கள்.

1662-ம்வருஷம் திடீரென்று ஔரங்கசீப் நோயுற்றுப் பெரிதும் வருந்தினர். அதனால் அவர் தமது குடும்பத்துடன் டில்லியை விடுத்து லாகூர்க்குப் போய் அங்குச் சில காலம் தங்கும்படி நேரிட்டது. ஜேப்-உன்-நீசாவும் அவருடன் சென்றிருந்தாள். அந்நகரின் பிரதிநிதியின் புதல்வன் அகில்கான் என்பவன் அவளை எவ்விதத்தி லாயினும் மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவ்விஷயத்தில் பெரிதும் முயன்றான். அம் முயற்சியில் அவன் சித்தி பெறவேயில்லை. சில வருஷங்களுக்குப் பிறகு அவள் தன் தந்தைக்குச் சில விஷயங்களில் வெறுப்பை உண்டாக்கினதால் அவர் அவளைச் சாலிம்கிர் என்னும் கோட்டையில் அடைத்து வைத்தார். அநேக வருஷகாலமாக அவள் அச் சிறைச்சாலையிலேயே சிறை இருக்கும்படி நேரிட்டது. அக் காலத்தில் அவள் பாரசீக பாஷையில் எழுதிய பாக்கள் துன்ப மிகுதியைக் குறிக்கின்றன. அவள் விடுதலை யடைந்த பின்னர், டில்லியில் ஒரு ஏகாந்தமான இடத்தில் தங்கி அனேக பாக்கள் எழுதினாள். அவள் ஐம்பதாவது வயதில் அதாவது 1869-ம் வருஷம இறந்துபோனாள். அவள் லாகூரில் தனக்கென்று அமைத்திருந்த ஒரு பூங்காவனத்தில் அவள் விருப்பத்தின்படி அவளுடைய பிரேதத்தை அடக்கம் செய்தனர். அவ்விடம் தற்போது பாழடைந்து கிடக்கின்றது. 1724-ம் வருஷம், அவள் இறந்து முப்பத்தைந்து வருஷம் ஆன பிறகு, அவள் வித்வத் தன்

மையைப் புசழ்ந்த சிலர் அவள் எழுதிய பாக்களை ஒன்று கத் தொகுத்து உலகத்திற்கு ஈந்தனர்.

அவளுடைய சரித்திரத்தையும், அவள் எழுதிய பாக் களையும் நன்கு அறிந்த சிலர், அவளைக் கிரேக்க நாட்டில் கவி பாடுவதில் வல்லவளாயிருந்து கலியாணம் செய்து கொள்ளாமலே இருந்துஇறந்துபோன சாப்போ(Sappho) என்பவளுக்கு ஒப்பிடுகிறார்கள்.

எட்டாவது அத்தியாயம்.

அழிவுக்கு அடிப்படை.

"தீங்குவந் தடையு மாறும் நன்மைதான் சேரு மாறுந்
தாங்களேசெய் வினையி னுலே தத்தமக் காய வல்லால்
ஆங்கவை பிறரால் வாரா வழுதநஞ் சாண்டினுக்கும்
ஒங்கிய சுவையின் பேத முதவினுர் சிலநுழண்டோ?"

கந்தபுராணம்.

அரசியலைப்பற்றி ஔரங்கசீப்புக்குத் தெரிந்த விஷயங்கள் அக் காலத்தில் வேறு எந்த மன்னருக்கும் தெரியாது. அவரை ஒருநாள் அவருடைய நண்பர் ஒருவர், 'மகாராஜ்! தாங்கள் இவ்விதம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருந்தால் தமது தேகம் என்னத்திற்காகும்? சுகம் அனுபவிக்க வேண்டிய தாங்கள் இவ்விதம் கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை' என்றார். அதைக் கேட்ட ஔரங்கசீப் நகை புரிந்து, 'நண்பரே! பிறர் நன்மையடையும் பொருட்டே யன்றி நான் சுகம் அனுபவிப்பதற்காகக் கடவுள் என்னை இவ்வுலகத்திற்கு அனுப்பவில்லை. என் ஆளுகைக் குட்பட்ட குடிகளின் மன மகிழ்ச்சிக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதையே என் முக்கிய தொழிலாகக் கொண்டு நான் நடக்க வேண்டியவனாயிருக்கிறேன். மனம் எப்போதும் சுகத்தையே நாடும். அந் நாட்டத்தை ஒழிப்பதன்றோ சங்கோன் மன்னனுக்கு அழகாகும்' என்றார்.

மொகல் ராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் ஔரங்கசீப்பின் பிற்காலத்தில் மிகுந்த பரப்புற்றிருந்தது. ஏறக்குறைய இந்தியா முழுவதும் அரசாண்ட மொகல் சக்கரவர்த்தி அவர் ஒருவரே என்று கூறலாம். எனினும் அவர் காலத்திலேயே மொகல் ராஜ்ஜியம் க்ஷீணமடைய ஆரம்பித்தது.

மொகல் இராஜ்ஜியம் நெடுநாள் நிலைத்திருப்பதற்கு இந்துக்களின், முக்கியமாய் இராஜபுத்திரர்களின், நட்பு மொகல் சக்கரவர்த்திகளுக்கு அவசியமாயிருந்தது. ஆனால், ஔரங்கசீப் மத வைராக்கியத்தில் பிடிவாத முடையவராயிருந்தபடியால். இந்துக்களின் கோயில், கொத்தளங்களை இடித்துத் தகர்த்தது மல்லாமல் அவர்கள்மீது ஜெசியா என்னும் தலை வரியையும் ஏற்படுத்தினர். அவ் விரு விஷயங்களே இந்துக்களை அவரிடமிருந்து பிரித்தன. இதுவு மன்றி முன் யோசனையில்லாமல் ஜோட்பூர் தேசத்து அரசனும், தமக்கு நெருங்கிய நண்பனுமான ஜஸ்வந்த்ராவ் இறந்த பிறகு ஔரங்கசீப் அம் மன்னனுடைய இரு குமாரர்களையும் தமது அரண்மனைக்குக் கொண்டுபோய் மகம்மதியர்களாகச் செய்வதற்குத் தகுந்த பிரயத்தனங்களைச் செய்தார். அதனால் இராஜபுத்திரர்களுக்கு அவர் மீதிருந்த வெறுப்பு அதிகமாயிற்று.

அவர் யுத்த வல்லமையினால் மகாராஷ்டிரரின் கோட்டை கொத்தளங்களைத் தமதுகைவசப்படுத்தினர். ஆயினும், அவர் கைவசப்பட்ட கோட்டைகள் யாவும் மீண்டும் மகாராஷ்டிரர் வசமே சேர்ந்தன. ஏனெனில், மொகலாய சேனவீரரின் யுத்த வன்மை குறைந்திருந்தது. மொகல் தளகர்த்தர்கள் அநேகர் தங்கள் சுயநலத்தைப் பாராட்டி எதிரிகளுடன் இரகசியமாய் உடன்படிக்கை செய்து கொண்டு எதிரிகளின் கோட்டைகளை முற்றுகை யிடுவதில் தாமதித்தனர். இச் சந்தர்ப்பத்தில், ஜஸ்வந்த்பிகர்கானுக்கும், இராஜாராமுக்கும் ஏற்பட்ட சம்பந்தம் அறியத் தக்கது. மொகலாய தளகர்த்தர்கள் யுத்தம் செய்ய ஆரம்பிக்கும் காலங்களிலெல்லாம், மகாராஷ்டிர வீரர்கள் மட்டக் குதிரைகளின். மீது ஏறித் திடீரென்று நாலா திசைகளிலும்

சூழ்ந்துகொண்டு அவர்களிட மிருக்கும் பொருள்களைச் சூறையாடிக் கொண்டு போவார். அம் மகாராஷ்டிர வீரரைப் பிடித்துத்தகுந்தபடி தண்டிப்பதற்கு மொகலாய தளகர்த்தர்களால் கூடாது போயிற்று. அம் மொகலாய தளகர்த்தர்களும் இராஜபோக நுகர்ச்சியையே யுத்த காலங்களிலும் அனுபவித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் யுத்தத்திற்குப்போகும்போது தங்களுடைய மனைவிமக்களையும் உடன் கொண்டு போவது வழக்கமாயிருந்தது. அதனல் சேனைகளின் செலவு அதிகப்பட்டது.

ஔரங்கசீப் தம்முளவில் ஆடம்பரத்தில் வெறுப்புற்றவரா யிருந்தபோதிலும் இந்திய ஜனங்கள் மொகலாய அரசாட்சியை நன்குமதிக்கவேண்டும் என்னும் எண்ணத்தினல் மற்ற விஷயங்களில் தமது முன்னோர்களைப் போலவே டம்பத்துடன் இருக்க வேண்டியவராயிருந்தார். யுத்தகளத்தில் அவர் கூடாரம் அடித்துத் தங்கும் இடமும் டில்லியிலிருந்த அவருடைய அரண்மனையின் அலங்கரிப்பைநிகர்த்தது.

இன்ப நுகர்ச்சியைக் கருதாது தமதுகாரியத்திலேயே கண்ணுயிருந்த வலிமையும் பிடிவாத குணமும் அமைந்த மகாராஷ்டிர வீரர்கள் முன், யாவராலும் வெறுக்கத்தக்க பழக்க ஒழுக்கமுள்ள அக்காலத்திய மொகலாய சேனவீரர்களால் ஒன்றும் செய்வதற்கு இயலாது போயிற்று. உதாரணமாக, அவர்கள் ஔரங்கசீப்பின்காலத்தில் மகாராஷ்டிரரின் கோட்டைகளைப் பிடிக்கும்போ தெல்லாம் மிக்க பணச்செலவும், மிக்க உயிர்ச்சேதமும் ஏற்பட்டன. மொகலாயர் யுத்தத்தில் வல்லவரா யிருந்திருப்பின் மகாராஷ்டிரரை வெகுசீக்கிரத்தில் அடக்கி இருக்கலாம்;பணமிகுதியும், சேனபலமும் அமைந்த அவர்கள் முன் மகாராஷ்டிரர் தமது வலிமையில் நிலைகுலைந்து அழிந்து போயிருப்பார்கள்.

நாள் ஏறஏற மொகலாய யுத்த வீரர்கள் அமர்க்களத்தில் தாங்கள் கூடாரம் அடித்துத் தங்கியிருக்கும் இடத்தை விட்டுச் சிறிது எட்டியடி வைப்பதுங்கூடத் தங்களுக்கு ஆபத்து விளைவிக்கத் தக்கதா யிருந்தது.

மொகல் கஜானாவில் பணங் குறையலாயிற்று. குடிஜனங்கள் வரி கொடுப்பதைத் தம்மால் கூடிய வரையில் தவிர்த்தார்கள். அதுவு மல்லாமல் மாகாணத்திலிருந்த மொகல் ராஜப் பிரதிநிதிகள், டில்லி ஆட்சியை ஒழுங்குப் படுத்தாமல், வேண்டிய மட்டும் தங்களுடைய சொந்த உபயோகத்திற்குத் தாங்கள் குடிகளிடமிருந்து வசூலித்த வரியைத் தங்கள்வசமே வைத்துக்கொண்டார்கள். மொகல் சக்கரவர்த்தியிடம் அவர்களுக்கு இருந்தபயமும் அடியோடு நீங்கிற்று. வரவர அவர்கள் தங்களையே பலப்படுத்திக் கொண்டு ஔரங்கசீப்புக்கு விரோதமாகக் கிளம்ப ஆரம்பித்தனர். மொகல் உத்தியோகஸ்தர்கள் யாதொரு பயமுமின்றி இலஞ்சம் வாங்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய யோக்கியதை குறையலாயிற்று. தேச நன்மைக்கென்று உழைத்தவர் ஒருவரு மில்லை. இராஜரீக விஷயங்களை அவர்கள் ஒரு சிறிதும் கவனிக்கவே இல்லை.

மகம்மதிய மதத்தில் சுன்னி (Sunni) கொள்கைகளை அனுசரித்து வந்த ஔரங்கசீப் ஷீயா (Shia) கொள்கைகளைக் கொண்டு வந்த தட்சிண தேசத்துச் சுல்தான்களை முற்றும் அழிக்கவேண்டும் என்னும் எண்ணத்துடனே தென்னிந்தியாவிற்கு வந்தார். அவர் தமது எண்ணத்தின் படி நாளடைவில் பிஜப்பூர், கோலகொண்டா என்னும்இவ் விரண்டு ஊர்களின் சுல்தான்களை மறுபடியும் தலைகாட்டக் கூடாத விதமாய் அடக்கினார். இங்கு ஔரங்கசீப் தமது மத வைராக்கியத்தால் மொகலாய இராஜ்ஜிய நன்மையை

யும் கோரினு ரில்லை. அச்சுல்தான்கள் அடங்கிப் போன விஷயம் மொகலாய ஆட்சிக்கே கெடுதி விளைவிக்க ஆரம் பித்தது. அதுகாறும் அவ்விரு சுல்தான்களும் மகாராஷ்டி ரரைத் தங்களாற் கூடிய வரையில் அடக்கி வந்தார்கள். தட்சிணத்தில் மகம்மதிய அரசர்கள் இல்லாமற் போகவே மகாராஷ்டிரர் முன்னிலும் பன்மடங்கு வலிமையுடன் மொகலாயரை எதிர்த்து வெற்றி யடைந்து வந்தனர்.

எவர்மீதும் சந்தேகங்கொள்ளும் ஔரங்கசீப்பின் தன்மை மொகல் அரசாட்சிக்கு இறுதியில் கெடுதி விளை விக்க லாயிற்று. தாம தமது தகப்பனார் ஷாஜஹானைச் செய்தது போலவே தமது புத்திரர்களும் தம்மைச் செய் வார்களென்று நினைத்து, அவர்கள் மீது சந்தேகமுற்று அவர்களுக்கு அதிகாரம்கொடுத்து அரசாங்கவிஷயங்களைக் கற்றுக்கொடுக்காமல் நிறுத்தினர். மேலும், அவர்மொகல் ராஜ்ஜியத்தை அளவு கடந்து ஐம்பத்திரண்டு வருஷம் அர சாண்டார். அவ்விரு காரணங்களால் அவருடைய புதல் வர்கள் அவர் இறந்த பிறகு இராஜ்ஜிய நிர்வாகத்திற்கு அருகரல்ல ராயினர். மொகல் ராஜ்ஜியத்திற்குச் சீக்கியர், ஜாட்டர், மகாராஷ்டிரர் ஆகிய இவர்களால் ஆபத்து நேர லாயிற்று; ஔரங்கசீப்புக்குப் பிறகு தகுந்த பாதுஷா டில் லியில் சிம்மாசனம் ஏறவில்லை. அக்காரணங்களால் மொகல் ராஜ்ஜியம் நிலைகெட்டு அழியுந் தருணத்திலிருந்தது.

ஒன்பதாவது அத்தியாயம்.

ஔரங்கசீபின் கடிதங்கள்.

ஒருவருடைய குண விசேஷங்களை அறிவதற்கு அவர் தமது நண்பர்களுக்கும், பிறருக்கும் எழுதும் கடிதங்களும் சாதனங்களாகும். அதனால் இங்கு ஔரங்கசீப்பைப் பற்றிய இதர விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதற்கு, அவர் எழுதிய சில கடிதங்களை மொழிபெயர்த்து எழுதுகிறோம்.

ஔரங்கசீப் தமது தகப்பனாரைச் சிறைச்சாலையில் அடைத்த பிறகு தாம், அவருக்கு எழுதிய கடிதம்:—

நான் உமது விஷயத்தில் நடந்து கொண்ட விதத்திற்குக் காரணம் இதுவேயாகும். நீங்கள் என்மீது மிகுந்த அன்புவைத்திருப்பதாகவும், தாராஷுகோவின் நடத்தைக்காக அவன் மீது அதிக வெறுப்புற்றிருப்பதாகவும் நடித்துத் தாராஷுகோவுக்கு உதவியாக இரண்டு யானைகளின் மீது பொன் நாணயங்களை அனுப்பினதாக நான் தகுந்தவர்களிடமிருந்து கேள்விப்பட்டேன்.

தாராஷுகோ என்னுடைய உயர் நிலையை அழிக்க முடியாமல் செயலற்றுப் போகும் வரையில் தாங்கள் அவ்விடத்தில்தான் இருந்து தீரவேண்டும் அவனால் எனக்கு யாதொரு கெடுதியும் நேரிடாதென்று நிச்சயமாகத் தெரிந்த பிறகுதான் நான் தங்களை நேரில்வந்து என் கையினாலேயே விடுதலை செய்வேன்.”

ஷாஜஹான் ஏழுவருஷகாலம் சிறையிலேயே யிருந்து 1666-ஆம் வருஷத்தில் தொடக்கத்தில் அதாவது அவருடைய 76-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார். அவ்வேழு வருஷ

காலமும் அவர் தம்மிஷ்டப்படி இராஜபோக நுகர்ச்சியை அநுபவிப்பதற்கு ஔரங்கசீப் தடை யொன்றும் செய்ய வில்லை. ஷாஜஹான் இருந்த விடத்தில் ஷாஜஹானின் மூத்த குமாரத்தி பீகம்சாஹிபாவும், அவருடைய ஸ்திரீகளும் அவருடன் இருந்து வந்தனர். அவர் விருப்பத்திற் கேற்ற படி சமயற்காரர்கள் சமைத்துப் போட்டார்கள். அவர் மனங் களிக்க ஒருபுறம் நாட்டியப் பெண்கள் நாட்டியம் செய்தனர். சங்கீத நிபுணத்துவம் பொருந்திய சில பெண் கள் பாடல் பாடினர்கள். அவ்வப்போது மகம்மதிய குருக் கள் அவரிடம் வந்து கொரான் வாசிக்க அவர் அதை மிக வும் பக்தியுடன் சிரவணம் செய்துகொண் டிருந்தார். ஔரங்கசீப அடிக்கடி அவரிடம் இராஜரீக விஷயங்களைப் பற்றி ஆலோசிப்பார். நாளடைவில் தனயனும், தந்தையும் நண்பராயினர். ஷாஜஹான் தமது அந்திய காலத்தில் தமது விஷயத்தில் ஔரங்கசீப் செய்த குற்றத்தைப் பொறுத்து அவரை ஆசீர்வதித்தார். அவர் இறந்ததும் ஔரங்கசீப் வெகு ஆடம்பரத்துடன் அவர் பிரேதத்தைக் கொண்டுபோய்த் 'தாஜ்மஹாலில்' அடக்கம் செய்தார். நிற்க.

ஒரு சமயம் ஔரங்கசீப் பிணிவாய்ப் பட்டுப் பெரி தும் வருந்துகையில் காம்பாக்ஷா என்னும் இளவரசருக் கும், தமது குமாரர்களில் ஒருவரான ஆஸாம் இளவரசருக் குமாக இரண்டு கடிதங்கள் எழுதினர். அவ்விரண்டு கடி தங்களாலும் ஔரங்கசீப்பின் சிறந்த கடவுள் பக்தி இத் தகையது என நன்கு விளங்குகிறது.

அவர் ஆஸாம் இளவரசருக்கு எழுதிய கடிதம்.

'மகனே! நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் சுகமாய் இருப்பீர்களாக. நானோ வயோதிகனுய் விட்டேன். என்

னுடைய தேக உறுப்புக்கள் யாவும் பலமற்றுப் போயின. நான் பிறக்கும்போது என்னைச் சுற்றிலும் அநேகர் இருந்தனர். ஆனால் இப்பொழுது நான் தனியே போகப்போகிறேன். நான் எக்காரணம்பற்றி இவ்வுலகத்திற்கு வந்தேனென்று தெரியவில்லை. நான் கடவுளை மறந்து வீணே கழித்த காலங்களை நினைக்க எனக்குத் துன்பமிகுதியாகிறது. நான் எனது தேசத்திற்கும், குடி ஜனங்களுக்கும்யாதொரு நன்மையும் செய்யவில்லை. என்னுடைய வாழ்நாட்கள் யாவும் வறிதே கழிந்தன. கடவுளோ என் அருகில் இருக்கிறார். ஆனால் அஞ்ஞான, விருளால் மூடப்பட்ட நான் அவர் ஜோதியைக் காண்பதற்கில்லை. இவ்வுலக வாழ்க்கை அநித்தியம். கழிந்த நிமிஷம் திரும்பவருவதில்லை. எனக்கு என்னிடமிருந்த நம்பிக்கை முற்றும் அற்றுப் போய்விட்டது. என்னை இதுகாறும் வருத்தி வந்தஜ்வரம் பறந்தோடியது. நான் நரம்புந் தோலுமா யிருக்கிறேன்..... மொகலாய சேனவீரர் திகிலடைந்து என்னைப் போலவே தைரிய மிழந்திருக்கின்றனர்.....நான் பிறக்கும் போது எதும் கொண்டுவரவில்லை. ஆனால் நான் போகும்போது பாவ மூட்டையைச் சுமந்து கொண்டு போவேன். மறு உலகத்தில் நான் அநுபவிக்கவேண்டிய துன்பங்கள் எவ்வளவோ.....? நான் என்மீதே நம்பிக்கை யற்றிருக்கும் போது பிறர் மீது நம்பிக்கை வைப்பது எப்படி? எது வரினும் எது போகினும் கவலைப்படாதவனே மகா தீரனும்...

இக் கடிதத்தை ஔரங்கசீப் தட்சிணத்திலிருந்து எழுதினர். தட்சிணத்தில் இருக்கும்போது தட்சிணதேசத்துச் சுல்தான்களிடம் அவர் புரிந்த யுத்தங்களில் அடிக்கடி அவர் அடைந்த தோல்வியும், மிகுந்த பணச் செலவும், மகாராஷ்டிரரின் வலிமையும் அவரை உலக வாஞ்சையின்

மீது ஒருவாறு விரக்தி யடையச் செய்தன. அவ்விரக்தியே அக் கடிதம் முழுவதும் வியாபித்திருக்கிறது.

அவர் காம்பாக்ஷா என்னும் இளவரசனுக்கு எழுதியகடிதம்.

'என் அன்புமிக்க காம்பாக்ஷா! நான் இப்போது தனியே போகிறேன். எனது உதவியற்ற நிலைமைக்காகப் பெரிதும் வருந்துகிறேன். வருந்திப் பயனென்ன? நான் பிறருக்கு இழைத்த துன்பம் யாவும் ஒன்று சேர்ந்து, என் பாவ மூட்டையைப் பெரிதாக்கின. பிறக்கும்போது யாதுங்கொண்டுவராத நான் இறக்கும்போது பெரிய பாவ மூட்டையைச் சுமந்துபோக வேண்டியவனாயிருக்கிறேன்... நான் எங்கு நோக்கினும் அங்கு கடவுள் இருக்கிறார். நான் யாவரும் இழுத்தக்க பாவியானேன். மறு உலகத்தில் எனக்கு எவ்விதத் தண்டனை இருக்கிறதோ அறியேன்..... மகம்மதியர் வீணே கொலையுண் டிறப்பதைத் தவிர்த்து வீண் அபவாதத்தை என்மீது சுமத்தாதிருப்பாயாக. நான் உன்னையும், உன் புதல்வர்களையும் கடவுளிடம் ஒப்புவித்திருக்கிறேன்.....நோயுற்றிருக்கும் உன் தாயார் உதயபுரி என்னுடன் இறக்கத் தயாராயிருக்கிறாள்...''

முன் கடிதத்தைப் போலவே இக் கடிதமும், ஔரங்கசீப்பின் துன்பம் நிறைந்த மன நிலைமையைக் கண்ணாடி போல் எடுத்துக் காண்பிக்கிறது. இராஜரீக விஷயமாக அவர் தமது சகோதரர்களைக் கொன்ற விஷயமும், தகப்பனாரைச் சிறையி லடைத்த விஷயமும், இந்துக்களை மத விஷயமாக இம்சித்த விஷயமும், ஒன்று சேர்ந்து அவர் மனதைக் கலக்கின. இவைகளை எல்லாம் முன்னிட்டுத் தம்மை மன்னிக்கும்படி கடவுளை வேண்டினார்.

1665-ஆம் வருஷம் ஜயசிங்கருக்கும், சிவாஜிக்கும் ஏற்பட்ட புரந்தரன் கோட்டை உடன்படிக்கை விஷயங்

களே அறிந்த ஔரங்கசீப் சிவாஜிக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்திலிருந்து அவர் சிவாஜியை வெகு மரியாதையுடன் நடத்தியதாகத் தெரிகிறது.

சிவாஜிக்கு ஔரங்கசீப் எழுதிய கடிதம்.

"சிவாஜிக்கு,

எனது தளகர்த்தராகிய ஜயசிங்கருக்கும், உமக்கும் ஏற்பட்ட புரந்தரன் உடன்படிக்கையைப் பற்றி அவர் எனக்குத் தெரிவித்திருக்கிறார். ஆது காரணத்தைக் கொண்டு நான் இக்கடிதத்தை உமக்கு எழுதலானேன். புரந்தரன் கோட்டை உடன்படிக்கைகள் யாவும் எனக்குச் சம்மதமே. நீரும் அவ்வுடன்படிக்கையில் கண்ட நிபந்தனையின்படி நடந்துகொண்டு எம்மிடம் மிகுந்த விசுவாசத்துடன் இருப்பீர் என்று நான் நம்புகிறேன். இதுவரையில் நீர் எனக்கும், என் இராஜ்ஜியத்திற்கும், குடிஜனங்களுக்கும், எனது சேனவீரர்களுக்கும் செய்துள்ள அபராதங்கள் அனைத்தையும் நான் அறவே மறந்து உம்மை மன்னிக்கிறேன். அதுவேயுமன்றி எனது தளகர்த்தர் ஜயசிங்கர் என்னைக் கேட்டுக் கொண்டபடியே சர்தேஷ்முகி, சவுத் என்னும் வரிகளே மெகலாய நாடுகள் சிலவற்றில் வசூலித்துக்கொள்ள உமக்கு அதிகாரமும், மனமுவந்து கொடுத்திருக்கிறேன்; உமது புதல்வன் சாம்பாஜிக்கு 'ஐயாயிரம் குதிரைப் படைத் தலைவன்' எனப் பட்டம் அளித்திருக்கிறேன். அன்றியும் நான் இக் கடிதத்துடன் உமக்கு மரியாதை செய்யவேண்டும் என்னும் ஆவல் கொண்டு அரச உடுப்பு ஒன்று அனுப்புகிறேன். அதைப் பெற்றுக்கொள்வதே நீர் எனக்கு மிகுந்த மரியாதை செய்வதாகும்"

ஔரங்கசீப் மகாராஷ்டிரரின் முன்னேற்றத்தைக் கண்டு ஒருவாறு அஞ்சினரென்று இக்கடிதத்தினால் புலப் படுகிறது. அஞ்சாதிநந்திருப்பா ராயின் 'மலை எலி' என்று மகம்மதியர் இகழ்ந்து கூறிய சிவாஜியை மதித்து அவருக்குக் கடிதம் ஒன்று வரைந்து, அஃதோடு அரச உடுப்பொன்றும் ஔரங்கசீப் அனுப்பி யிருக்க மாட்டார்.

* * * * * *

மொகல் இராஜ்ஜிய உரிமையின் பொருட்டுத் தமது சகோதரர்கள் ஒருவரோ டொருவர் அமராட எத்தனிக் கையில், ஔரங்கசீப் தமது சகோதரன் மூரத்பாட்சாவுக் குப் பின் வருமாறு கடிதமொன்று வரைந்து அவனைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டார். அவருடைய தந்திரத்தை யும், சமயோசித புத்திபையும் அறிவதற்கு அக் கடிதமும் ஒரு தகுந்த சாதனமாகும். அதாவது:—

என்னருமைச் சகோதரனே!

இராஜ்ஜியபார நிர்வாகத்தில் எனக்கு மிகுந்த வெறுப் பேற்பட்டிருப்பதை நான் உனக்குத் தெரிவிக்கவேண்டி யது அவசியமல்லவென்று நினைக்கிறேன். தாராவும் (Dara) ஷுஜாவும் (Shuja) மொகலாய இராஜ்ஜிய பாரத்தை வகிக்கவேண்டு மென்னும் அவா மிகுதியினால் பெரிதும் வருந்துகின்றனர். ஆனால், என் உள்ளமோ இவ் வரித்திய உலகவாழ்வை வெறுத்துப் பக்கிரி (Fakir) யாக இருந்து என் வாழ்நாட்களைக் கழிக்க எண்ணித் தூண்டுகி றது. மொகலாய இராஜ்ஜிய உரிமையை நான் இழக்க விரும்பினும், என் மூழுமனத்தோடு நேசிக்கும் உன்னை என்னுற் கூடியவரையில் முன்னுக்குக் கொண்டுவர வேண்டு மென்னும் இஷ்டம் எனக்கிருக்கிறது. தாரா (Dara) அர சாளத் தகுதியற்றவன் என்பது நீ அறியாத விஷயமன்று.

அவன் மகம்மதிய மதத்துவேஷி; அதுவேயு மன்றி, அவனே மொகலாயப் பிரபுக்கள், மந்திரி பிரதானிகள் முதலியோர் பகைக்கின்றார்கள். ஷுஜாவும் (Shuja) அவனைப்போலவே மதப்பற்றற்றவன் அவன் மொகல் சிங்காதனத்தை அடைவதற்கு அருகனல்லன். மொகலாய இராஜ்ஜியத்தை ஆளக்கூடிய வல்லமையும், புத்தி சாதுரியமும் உன்னிடமே அமைந்திருக்கின்றன என்று நான் சொல்வது மிகையாகாது. நான் ஒருவனே உன்னைப்பற்றி இவ்விதம் சொல்லுகிறேனென்று நினையாதே. அரண்மனையின் பிரதான பிரபுக்களும் உன்னை உன்னுடைய நிகரற்ற யுத்தவன்மைக்காகப் பெரிதும் மதிக்கிறார்கள். நீ தலைநகருக்கு வரவேண்டு மென்று உன்னை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறதாக நான் கேள்விப்படுகிறேன். நான் உன்னை வேண்டிக்கொள்வது யாதெனில், நீ மொகல் பாதுஷாவான பிறகு, எனக்கு உன்னுடைய ராஜ்ஜியத்தில் ஒரு தனியிடத்தில் வெகு அமைதியுடன் பக்கிரியாக இருந்து காலத்தைக் கழிக்க உத்திரவு கொடுக்க வேண்டுமென்பதே. என்னுடைய இந்த வேண்டுகோளுக்கு நீ இசைந்தால், நான் உன்னோடு சேர்ந்துகொள்ளுவேன்; என்னுடைய சேனை முழுவதையும் உன்னுடைய கட்டளைக்குக் காத்திருக்கச் செய்வேன். உன்னுடைய நன்மையைக் கோருவதற்கு அத்தாட்சியாக இக்கடிதத்துடன் இலட்சரூபாய் அனுப்பி இருக்கிறேன் அத்தொகையை அதி திருப்தியுடன் ஏற்றுக்கொள். இனி, நீ தாமதம் செய்தல் கூடாது; சூரத் கோட்டையை உடனே கைப்பற்றிக்கொண்டு அக்கோட்டையில் புதையலாக வைத்திருக்கும் அளவற்ற திரவியத்தை உன் வசப்படுத்திக்கொள்." என்பதே.

"இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே"

என்னும் முன்னோர் கூற்றை ஔரங்கசீப் நன்கு ஆராய்ந்தறிந்திருந்தார் என்பது இக் கடிதத்தால் நன்கு புலப்படுகிறது. இனிய மொழிகளே மிகுந்திருந்த அக் கடிதத்தை வாசித்த மூரத் பாட்சா முன் பின் யோசியாமல் அவரோடு சேர்ந்து கொண்டான். அவ்விருவரும் ஒன்று சேர்ந்ததான் தாராவையும், ஷுஜாவையும் போர்க்களத்தில் புறங்காட்டி யோடச் செய்தனர். என்பதை நீங்கள் முன்னமே வாசித்திருக்கிறீர்கள். ஔரங்கசீப் தமது காரியத்தில் தாம் ஊர்ஜிதமான சித்திபெற்ற பிறகு அவர் மூரத் பாட்சாவுக்கு இழைத்த கெடுதியைப் பற்றியும் முன்னமே நீங்கள் வாசித்திருக்கிறீர்கள்.

இந்த ஒரு கடிதத்திலிருந்து நாம் ஔரங்கசீப்பின் தூர்க்குணங்களில் சிலவற்றை ஒருவாறு அறிந்து கொள்ளலாகும். அவர் வஞ்சநெஞ்சம் படைத்தவர்; சகோதர வாஞ்சையற்றவர்; சுயநலமே பெரிதெனக் கருதுபவர்; சமயோசித புத்தி சாதுர்யமும், தந்திரமும் வாய்ந்தவர்.

———

பத்தாவது அத்தியாயம்.

பல பெரும் விஷயங்கள்.

"கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணுள் வேந்தன்.
றன்னுயி ரென்னுந் ததுதியின் றாம்."—மணிமேகலை.

இதுகாறும் நாம் முக்கியமாய் ஔரங்கசீப்பின் இளமைப்பருவத்தில் நடந்த சம்பவங்களையும், இராஜரீக முறைமைகளையும், இராஜ்ஜிய விஸ்தீரணத்தையும், அந்த இராஜ்ஜியம் க்ஷீண மடைந்ததற் குரிய காரணங்களையும், அவர் எழுதிய சில முக்கிய சடிதங்களையும் பற்றி எழுதினேம். இனி அவர் காலத்தில் நடந்த சிற்சில விஷயங்களையுங் கூறி இச் சரித்திரத்தை முடிப்போம்.

ஔரங்கசீப்புக்கு முன்னிருந்த இதர மொகலாய சக்கரவர்த்திகளை விட ஔரங்கசீப்பைப் பற்றி நமக்கு அதிகந் தெரியவில்லை. ஆனல், அவ்விதம் தெரிந்துகொள்ளாததற்கு ஔரங்கசீப்பே காரணமாவர். அவர் காலத்திலிருந்த சரித்திராசிரியர்களும், அரண்மனை உத்தியோகஸ்தர்களும் அவரைப்பற்றி எழுதியிருந்த அநேக நூல்களை அவர் அழித்து விட்டார். அதுவு மல்லாமல் அவர்கள் தம்மைப் பற்றி எழுதாதிருக்கவும் கட்டளைபிட்டார். எனினும், அவரைப் பற்றிக் கூறும் நூல்கள் சில நிலைத்திருந்து நமக்கு அநேக விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றன. அந்நூல்களில் முக்கியமானவை பாதுஷா நாமா (Padisha Namah) ஆலம் கீர் நாமா (Alamgir Namah), மாசிரி அலங்கிரி (Masitri-

Alamgiri) என்பவையே இந்நூல்கள் மொகலாய அரசாங்கத்து உத்தியோகஸ்தரால் எழுதப் பெற்றவை. காபி கான் (Khaphi Khan) என்பவர் இரகசியமாய் எழுதி வைத்த நூலும், ஔரங்கசீப்பின் தளகர்த்தனுகிய தளபதிராவின் குமாஸ்தாவான பீமசேனர் எழுதிவைத்த நுஷ்காயி - தில்காஷா (Nush-kha-i-Dilkasha) என்னும் நூலும், கூர்ஜ்ஜரத்தில் வசித்து வந்த ஈஸ்வரதாஸ் நாகர் என்பவர் எழுதியுள்ள பத்தூ-ஹத்தி அலங்கிரி (Fatuhat-i-Alamgiri) என்னும் நூலுமே ஔரங்கசீப்பின் சரித்திரத்தைப் பின்னும் விளக்கமாகத் தெரிவிப்பனவாகும்.

இன்னும் அவரைப்பற்றி அவர்காலத்தில் இந்தியாவுக்கு வந்து சிலகாலம் தங்கியிருந்த ஐரோப்பிய யாத்திரிகர்கள் அவ்வப்போது எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் டெவர்னியர் (Tavarnier)பெர்னியர் (Bərnier,) தீவ்நாட் (Thevenot) முதலியோராவர்.

ஔரங்கசீப்பின் காலத்தில் நடந்த நாம் மேற்கூறிய சம்பவங்களை இந்திய சரித்திராசிரியர்களுடைய நூல்களிலிருந்தும், ஐரோப்பிய யாத்திரிகர்கள் எழுதிவைத்ததிலிருந்தும் ஒருவாறு தெரிந்து கொள்ளுகிறோம்.

* * * *

ஔரங்கசீப் இராஜ்ஜிய பரிபாலன விருப்பத்தால் தாம் நினைத்திருந்தபடி பக்கிரியாகாமல் தாராஷுகோ, ஷுஜா மூரத் என்னும் தமது சகோதரர்களின் இரத்தத்தைச்சிந்தி அந்த இரத்த வெள்ளத்தில் நடந்து சென்று சிம்மாசனம் ஏறினர். ஆயினும், அவர் மனம் நிம்மதி அடையவில்லை. சகோதரரைக் கொன்ற வருத்தம் அவரைத் துன்பக் கடலுள் ஆழ்த்தியது. கடைசியாகத் தாம் செய்த பாவத்திற்குப் பரிகாரமாகத் தாம் சிம்மாசனமேறிய நாள் முதற்

கொண்டு கோதுமை ரொட்டி, மாமிசம், மச்சம் முதலிய வற்றை உணவாகக் கொள்வதைத் தவிர்த்தார். மதுபானம் சாப்பிடுவதே இல்லை என்று பிரதிக்ஞை செய்துகொண்டார்.

அது முதற்கொண்டு அவருக்கு மதவிஷயத்தில் பற்று அதிகமாயிற்று. உண்மையில் அவர் பிரஜாதிகாரம் பெற்ற பக்கிரியானர். 1665-ம் வருஷம் இந்தியாவில் வால் நட்சத் திரம் (Comet) ஒன்று ஆகாயத்தில் நான்கு வாரங்கள் வரை தோன்றியிருந்தபோது ஔரங்கசீப் சோள ரொட்டி யும், தண்ணீரும் உட்கொண்டு வந்ததுமன்றி இரவில் வெறுந் தரையில் குளிராதபடி புலித் தோல் ஒன்றைப் போர்த்துக் கொண்டு தூங்கினர். அதனல் அவருடைய தேக சுகம் கெட்டது. அது முதற்கொண்டு அவர் தேகம் பருக்கவே யில்லை.

* * * *

* * * * *

கடைசி முறை ஔரங்கசீப் கோல கொண்டாவை முற் றுகை செய்த காலத்தில் ஒருநாள் மொகலாய சேனவீரர் திடீரென்று கோட்டையுள் நுழைந்து சந்தோஷ கோஷம் செய்தனர். அதை அறிந்த அந் நாட்டுச் சுல்தான் அபுல் ஹாசனுடைய (Abul Hasson) அமீர்களில் ஒருவரான அப்துர் ரஸாக் Abdur Razaak) என்பவர், சேணமிடப் பெற்றிராத குதிரை யொன்றின் மீது தாவி உட்கார்ந்து, பன்னிரண்டு சேனவீரர்கள் பின்தொடர ஓடோடிச்சென்று மொகலாயர் கோட்டையுள் நுழையும் மார்க்கத்தில் நின்று தம் உயிரையும் ஒரு பொருட்டாக மதியாமல் மொகலாயர் களுடன் சண்டை செய்தார். தம்மால் கூடியதைச் செய்து முடித்துக் சாயமடைந்த தேகத்துடன் அவ்விடத்தை விட்

டகன்ரூர். மறுதினம் அவர் அக்கோட்டைக்குக் கூப்பிடு தூரத்திலிருந்த தென்னை மரத்தடியில் தாமாகவே பிரக்ஞை யில்லாமல் விழுந்து கிடந்தார். அவர் தேகத்தில் எழுபது காயங்களுக்கு மேலிருந்தன.

அவர் இருந்த நிலைமையை நேரிற் கண்ட ஔரங்கசீப் பெரிதும் மகிழ்ந்து, 'அபுல் ஹாசனுக்கு அப்துர் ரஸாக் கைப்போல் நன்றியுள்ள வேலைக்காரன் இன்னொருவன் இருப்பின் கோலகொண்டா முற்றுகை இவ்வளவு சீக்கிரம் முடிந்திராது' என்று கூறி அவர் காயத்தை ஆற்றும்படி கட்டளையிட்டு இரண்டு இரண வயித்தியர்களை அனுப்பினார். பதினாறு நாட்கள் கழிந்தன. பிறகு காயமடைந்த அப்துர் ரஸாக் சற்றுக் குணமடைந்தார். அதைக் கண்ட ஔரங்க சீப் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. செய்ந் நன்றி மறவாத அப்துர் ராஸாக்கின் புத்திரர்களுக்கு ஔர ங்கசீப் தம்மிடம் அநேக உத்தியோகங்கள் கொடுத்தார். அப்துர் ரசாக்குக்கு அது பிரியத்தைக் கொடுக்கவேயில்லை. படுக்கையில் படுத்த வண்ணம், 'எந் நன்றி கொன்றூர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு' என்னும் கருத்திற் கிணங்க, 'அபுல் ஹாசனின் உப்பைத் தின்று ஔரங்கசீப்பினிடம் உத்தியோகத்தில் அமருதல் கூடாது' என்றூர் அப்துர்ரசாக்.

சுயநலமே பெரிதெனக் கருதிய அக்காலத்தில் அபதுர் ரஸாக் தன் எஜமானன் அபுல்ஹாசனிடம் நன்றி மிகுந்த வராய் விளங்கினர். அவ்வித சுபாவ முடையவரைக் கண் டால் ஔரங்கசீப்புக்கு ஆனந்த மூண்டாவது வழக்கம்.

* * * *

* * * * *

ஔரங்கசீப் உண்ணும் சமயத்தில், அவரண்டையில் அந்தப்புர ஸ்திரீகளும், கோஷாக்களும் தவிர வேறு எவரும் இருப்பதில்லை. அதுவேயு மன்றி அவர் தமது உறவினர் இல்லத்திலும் உண்பதில்லை. ஒருநாள், அவருடைய பிரதம மந்திரியாகிய சாபர்கான் (Zafar khan) தான் தனக்கென்று புதிதாகச் சமைத்துக்கொண்ட மாளிகையைச் சுற்றிப் பார்க்க அவரை வரவழைத்தான். அவரும் அவன் வேண்டுகோளுக் கிசைந்து அவனுடைய புதிய மாளிகைக்குச் சென்றார். அப்போது அவருக்குச் சுமார் ஏழு லட்சம் பெறக்கூடிய தங்க நகைகளும், மற்றும் பல வஸ்துக்களும் யானைகளும், ஒட்டகங்களும், குதிரைகளும், வெகுமானமாகக் கிடைத்தன.

சாபர்கான் தன் வார்த்தையை அசட்டை செய்யாமல் அங்கு வந்த ஔரங்கசீபுக்கு வெகு விமரிசையாய் விருந்தளித்தான். ஆனால், அவர் அம்மாளிகையில் உண்பதற்கு இசையாமல் தமது அரண்மனைக்குத் திரும்பி வந்துவிட்டார். சாபர்கான் மனைவி அவருக்கென்று சமைத்து வைத்திருந்த அறுசுவை உண்டி அனைத்தையும் அவருடைய அரண்மனைக்கு அனுப்பிவைத்தாள். அவ்வுணவை உண்ட ஔரங்கசீப் அதன் உருசிபாகத்திற்காக மிகவும் மெச்சி வியப்படைந்து அதைக் கொண்டுவந்த கோஷாவுக்கு ஐநூறு ரூபாயும், சமையல் செய்தவர்களுக்கு ஆயிர ரூபாயும் பரிசாகத் தந்தார்.

இரு வாரத்திற் கொருமுறை ஔரங்கசீப் வேட்டையாடக் காட்டுக்குப் போவது வழக்கம். போகும்போது அவர் பட்டத்து யானைமீது இவர்ந்து செல்வார் வேட்டை முடியும் வரையில் அதன் மேலேயே இருப்பார். வன விலங்குகள் அனைத்தையும் அவருடன் செல்லும் குதிரை

வீரர் அவர் முன் துரத்துவார்கள். அவ்விதம் தம் எதிரில் வரும் சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்களை அவர் சுட்டுக் கொல்லுவார். வேட்டையாடித் திரும்பி வருகையில் அவர் யானையைவிட்டு இறங்கிப் பல்லக்கேறி வருவார் அச் சமயங்களில் இருநூறு அல்லதுமுந்நூறு குதிரை வீரர்கள் அவர் முன் வரிசைக்கிரமமாகச் செல்லுவர்.

* * * *

* * * * *

மொகல் பாதுஷாவின் பட்டமகிஷியும், இதர அந்தப் புர ஸ்திரீகளும் அரண்மனையை விட்டு வெளியிற் போவ தில்லை. அவர்கள் தங்கள் தேகசௌக்கியத்தின் பொருட்டுச் சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்குப் போய் இரண் டொருநாள் தங்கியிருப்பார்கள். அவர்கள் தமது உறவினர் களைப் பார்க்க விரும்பினால் அதற்குப் பாதுஷா உத்திரவு வேண்டும். அவர்கள் அவ்விதம் தங்கள் உறவினர்களைப் பார்க்கப் போகையில் சில கோஷாக்களையும், பத்துப் பன் னிரண்டு அடிமை ஸ்திரீகளையும் உடன் அழைத்துக் கொண்டு திரையால் சுற்றிலும் மூடப் பெற்ற பல்லக்கில் உட்சார்ந்து போவார்கள். அவர்கள் பாரசீக தேசத்து ஸ்திரீகளைப்போல் இரவில் புறப்படுகிறதில்லை.

* * * * *

* * * * * *

ஔரங்கசீப் டில்லியில் சிம்மாசனமேறிய பிறகு அச் செய்தியைக் கேள்விப்பட்ட வெளி நாட்டரசர்கள் அவரு டைய நாட்டுக்குத் தத்தம் தூதுவரை (Ambassadors) அனுப்பினர். அவர்களில் முக்கியமானவர்கள் மெக்கா என்னும் புண்ணிய ஸ்தலத்தின் ஷெரீப் (Sheriff) அரே பிய நாட்டரசன், பஸ்ஸோரா நாட்டரசன், எதியோபி

யபி அரசன் முதலியோர் அனுப்பி வைத்த தூதுவர்களை யாவர். அக் காலத்திய வழக்கப்படி அவர்கள் தத்தம் நாட்டில் காணப்படும் அபூர்வ வஸ்துக்களை ஔரங்கசீப்புக்கு வெகுமானமாகக் கொண்டு வந்தனர். தம்மை நாடிவந்த தூதுவரை ஔரங்கசீப் தம்மால் கூடிய வரையில் சந்தோஷப்படுத்தி அனுப்பினர். ஆசியா முழுவதும் நல்ல பேர் எடுக்க வேண்டுமென்பது அவருடைய நோக்கமல்லவா?

ஷாஜஹான் இறப்பதற்குச் சில மாதங்களுக்குமுன் ஔரங்கசீப் தமது தூதுவரில் ஒருவனைப் பாரசீக தேசத்து (Persia) அரசனிடம் அனுப்பினர். அத் தூதுவன் அந் நாட்டை அடைந்த நாளிலிருந்து ஒரு மாதம் வரையில் அவனுக்கு விருந்து முதலிய மரியாதைகள் நடந்தன. ஒவ் வொரு நாளிலும் இரவும் பகலும் பாணவேடிக்கை தான் கடைசியாக அத் தூதுவன், பாரசீக தேசத்துச் சுல்தான் சிம்மாதனத்தில் சபையோர் புடைசூழ வீற்றிருக்கையில், ஔரங்கசீப் கொடுத்தனுப்பிய வெகுமானத்தை அவன் முன் வைத்தான். அவன் தன் முன் வைத்த அப்பொருள் களைச் சுல்தான் வெகு அலட்சியமாக எடுத்துத் தன் சமஸ் தான உத்தியோகஸ்தர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். அவன் அப் பொருள்களில் தனக்கென்று வைத்துக்கொண் டது ஒரு வைரமே. பிறகு அந்தச் சுல்தான் தூதுவனைத் தன்னருகில் அழைத்து, அவனை ஓர் ஆசனத்தில் அமர்வித் துப் பல விஷயங்களைப் பற்றிச் சிறிதுநேரம் பேசிக்கொண் டிருந்து விட்டுப் பிறகு அவனைப் பார்த்து, 'நீ சுன்னி என் னும் மதப்பிரிவைச் சேர்ந்தவனே என்று? வினவினன். அதற்கு அத்தூதுவன் 'ஆம்' என்று விடை பகர்ந்தான்.

சுல்தான்:—அப்படியானால் உன் நாமதேயமென்ன?

தூதுவன், ஷாஜஹான் பாதுஷா எனக்குப் போபக் சான் (Baobhakkhan) என்று பெயரிட் டழைத்தார். அதுவேயு மன்றி அவர் எனக்குச் சமஸ்தானத்தில் ஒரு வேலையும் பார்த்துக் கொடுத்தார்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட சுல்தான் நெற்றி நரம்பு கள் புடைக்க மிகுந்த சீற்றத்துடன், 'அவ்விதம் நன்மை கள் செய்த ஷாஜஹான் பாதுஷாவை அவர் தம் ஆபத்தில் கைவிட்டுப் பிதூர்த் துரோகியாகிய ஔரங்கசீப்புக்குப் பணிவிடை செய்யும் நீயே சண்டாளன். தனது சகோதரர், பந்துமித்திரர் முதலியோரைக் கொன்று அவர்களுடைய இரத்த வெள்ளத்தில் நீந்திச் சென்று டில்லியில் சிம்மாசன மேறிய ஔரங்கசீப் மொகல் சிம்மாசனத்துக் கருகனே? அவன் தன் வல்லமையால் கைப்பற்றிய தொன்றுமில்லை. அவன் அவ்விதத் தீச் செயல்கள் புரிய நீயும் அவனுக்கு உடந்தையாய் இருந்தாய் போலும்! ஆதலால் இனி உன் முகத்தில் மீசையும், தாடியும் இருப்பது தகுதியல்ல' என்று சொல்லி அத்தூதுவனை அக்காலத்திய முறைப்படி அவமானம் செய்ததற்கு அடையாளமாக அத்தூதுவனின் தாடியையும் மீசையையும் க்ஷவரம் செய்வித்தான்.

சுல்தான் தன்னை அவ்விதம் செய்வான் என்று அத் தூதுவன் எதிர் பாராததினால் ஆச்சரியமும், தக்கமும் ஒருங்கே எய்தினன். பிறகு அந்தச் சுல்தான் ஔரங்கசீப் புக்குப் பரிசிலாக நூற்று ஐம்பது அழகிய குதிரைகளும், பொன் வெள்ளி முதலியவற்றால் அலங்கரித்திருந்த ஜமுக் காளமும், விலையுயர்ந்த பட்டினாலாய அரைக் கச்சைகளும், இன்னும் பலவித அபூர்வ வஸ்துக்களும் கொடுத்து அத் தூதுவனுக்கு உத்திர வளித்தான். ஔரங்கசீப் கொடுத் தனுப்பிய பரிசிலைக் காட்டிலும் இவன் கொடுத்தனுப்பிய பரிசில் ஏறக்குறையப் பதின்மடங்கு அதிகமாயிருந்தது.

போபக்கான் மிகவும் வருத்தத்துடன் அப்பரிசிலைப் பெற்று ஆக்ராவுக்குத் திரும்பி வந்து பாரசீக சமஸ்தானத்தில் நடந்த விஷயங்கள் அனைத்தையும் ஆதியோடந்தமாய் ஔரங்கசீப்பிற்குத் தெரிவித்தான். அவ் விஷயங்களைக் கேட்டதும் ஔரங்கசீப்புக்கு அடங்காக் கோபம் பொங்கி வழிந்தது. அவர் அவன் கொடுத்தனுப்பிய குதிரைகளையும், விலை உயர்ந்த பரிசில் பொருள்களையும் இதரபொருள்களையும் பலர் முன்னிலையில் தீக்கிரையாச்கினர்.

* * * * * *

* * * * * *

ஔரங்கசீப்பினிடம் உத்தியோகத்தில் அமரு முன் ஜஸ்வந்தசிங் என்னும் இராஜபுத்திர வீரர் ஒருவர் தாராசு கோவுடன் சேர்ந்து அவரும், காசிம்கான் என்பவனும் ஒருபெரியசேனையுடன் ஔரங்கசீப்பையும், மூரத் பாட்சாவையும் எதிர்த்தனர். இருதிறத்தாருக்கும் 1658-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் பதினைந்தாம் தேதி உஜ்ஜினி நகரத்திற்குத் தெற்கே பதினான்கு மைல் தூரத்திலுள்ள தர்மத் என்னும் இடத்தில் பலத்த யுத்தம் ஒன்று நடந்தது. அந்த யுத்தத்தில் ஜஸ்வந்தசிங் தோல்வியடைந்து தம்முடன் சென்ற இராஜபுத்திர சேனைவீரர்களில் ஐந்நூறுபேருடன் திரும்பிவிட நேர்ந்தது. ஜஸ்வந்தசிங் வீரா வேசத்துடன் தான் போர் புரிந்தார். அதிர்ஷ்டம் ஔரங்கசீப் பக்கம் இருக்கும்போது யாரால் என்னசெய்ய முடியும்?

ஜஸ்வந்தசிங் அவ்விதம் தோல்வியுற்றுத் திரும்பி வருவதைக் கேள்விப்பட்ட இராஜாசத்தர்சாலின் புதல்வியாகிய அவர் மனைவி அவரை எதிர்கொண்டழைத்து அவருக்கு மரியாதை செய்வதற்குப் பதிலாக அவரை ஊருக்குள் வராமல் தடுத்தாள். 'அபஜய மடைந்த பிறகு உயிர் தரு

வாதிருப்பவனும் ஓர் ஆண் மகனே? இனி அவனை நான் என் கணவனென்று அழையேன். அவனும் என் மாளி கைக்குள் நுழைய வேண்டுவதில்லை. எந்தையின் மருமகன் பேடி யென்று உலகம் இகழ்வதை நான் எவ்விதந் தடுக்க முடியும்?' என்று கோபாவேசத்துடன் கூறினாள்.

சில நிமிஷங்கள் சென்ற பிறகு அவள் மறுபடியும் தன் ஆட்களைக் கூவி, 'தோல்வியுற்ற என் கணவன் உயிருடன் இருப்பினும் இறந்தவனாவான். அதனால் நான் உயிருடன் இருப்பது சரியல்ல. உடன் கட்டை ஏறுவதற்கான ஆயத்தம் செய்யுங்கள்' என்றாள். கணவனைக் கண்டபடி வைதாள். பைத்தியம் பிடித்தவள்போல் ஏதேதோ பிதற் றினாள். அத்தருணம் அவள் தாய் அங்கு வந்து அவளைத் தேற்றியிராவிட்டால் அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக் கும்; அல்லது அவள் உடன் கட்டை ஏறியிருப்பாள்.

* * * * *

* * * * * *

ஜஸ்வந்த சிங்கால் தமக்கு இராஜரீக காரியங்கள் சில நிறைவேற வேண்டியிருக்குமென் றெண்ணிய ஔரங்கசீப் அவர் தம்முடன் யுத்தம் செய்ததையும் பொருட் படுத்தா மல் பலவாறு முயன்று அவரைத் தம்முடைய இராணுவ உத்தியோகஸ்தராக அமர்த்திக் கொண்டார். உப்பிட்ட வரை உள்ளளவும் நினைக்கும் சுபாவம் இராஜபுத்திரரிடம் இருந்ததால், ஜஸ்வந்த சிங்கும் ஔரங்கசீப்பினிடம் உத்தி யோகத்தில் அமர்ந்திருந்த வரையில் அவருடைய நன்மை யைக் கோரினவரா யிருந்தார். அவருக்காக அவர் சிற் சில சமயங்களில் தமது குலத்தோராகிய இராஜபுத்திரருக்கு விரோதமாகவும் யுத்தம் செய்யும்படி நேர்ந்தது. சில வரு டங்கள் சென்றன. ஔரங்கசீப் அவரைப் பிஷாவருக்கு

(Peshawer) இராஜப் பிரதிநிதியாக அமர்த்தியிருந்தார். அந்நாட்டின் சீதோஷ்ண ஸ்திதி அவர்கள் தேக சௌக்கியத்திற்குப் பெரிதும் கெடுதி விளைவித்தது. அவ் விஷயத்தை அவர் ஔரங்கசீப்புக்குக் கடிதமூலமாய் எழுதித் தெரிவித்துத் தம்மை டில்லிக்கு அழைத்துக் கொள்ளும்படி அவரை எவ்வளவோ மன்றாடினர். ஔரங்கசீப்போ பின்னும் கொஞ்ச காலம் அவரை அங்கிருக்கும்படி வற்புறுத்தினர். அந் நாட்டில் அவர் குமாரனுகிய ஜகத்சிங் இறந்து போனன். அவன் இறந்து போனதைக் குறித்து ஜஸ்வந்தசிங் பெரிதும் வருந்தி அதே துக்கத்தினுல் 1678-ம் வருஷம் டிசம்பர் மாதம் பத்தாந்தேதி பிஷாவர் நாட்டில் உள்ள ஜம்பித் என்னும் இடத்தில் காலமாயினர்.

ஜஸ்வந்தசிங் இறந்துபோன பிறகு அவர் மனைவியர் பெற்ற இரண்டு குழந்தைகளில் உயிர் பெற்றிருந்த குழந்தையின் பெயர் அஜித்சிங் என்பது. அக் குழந்தையே சிம்மாசனம் ஏறவேண்டும் என்னும் கொள்கையைக் கைக்கொண்ட நன்றியறிதலுள்ள ஜஸ்வந்தசிங்கின் மந்திரிகள் சிலர் 1679-ம் வருஷம் பிப்ரவரி மாதம் இருபத்தாறும் தேதி டில்லிக்குச் சென்று அங்கிருந்த ஔரங்கசீப் பாதுஷாவை அணுகித் தமது கொள்கையை ஈடேற்றி வைக்கப் பெரிதும் வேண்டினர். ஔரங்கசீப் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இசையவில்லை. ஆனல் அவர் அவர்களை நோக்கி, 'உமது அரசிளங் குமரனுக்கு அரசாளும் வயது வரும் வரையில் அவன் என்னுடைய அரண்மனையின் அந்தப்புரத்தில் வளர்ந்து வரட்டும். பிறகு அவனுக்கு நாமே மூன்றின்று முடிசூட்டுகிறோம்' என்றார்.

அவ் வார்த்தைகளைக் கேட்டதும் அவர்கள் மிகுந்த விசனத்துடன் தங்கள் நாட்டிற்குத் திரும்பினர். ஔரங்க

★ சென்னை-600

சீப் அவர்களுடைய வேண்டுகோளுக் கிசைந்த விஷயத்தை அறிந்த இதர இராஜபுத்திர வீரர்கள் கோபம் மிகுந்தவர்களாய், 'அவ்விதம் சொல்ல ஔரங்கசீப்பிற்கு என்ன அதிகாரம் உண்டு? கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? நமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ளும் சக்தி நம்மிடத்திலேயே இருக்கும்போது நாம் ஏன் அம்மொகல் பாதுஷாவைக் கெஞ்சிக் கூத்தாட வேண்டும். நம்மால் ஆனதை நாம் பார்க்கலாம்' என்று ஔரங்கசீப்புடன் யுத்தம் புரிய ஆயத்தமாயினர். அது சமயம் அவர்களுடன் துர்க்கதாஸ் என்னும் சிறந்த இராஜபுத்திரவீரன்—ஜஸ்வந்த சிங்கைத் தன்னுயிர்போல் பாவித்து அவருக்குப் பிறகு அவருடைய குடும்பத்தாரை மொகலாய ஆபத்திலிருந்து காக்கவேண்டும் என்று பிரதிக்ஞை செய்துகொண்ட தீரன்—சேர்ந்திராவிட்டால் அந்த இராஜபுத்திரர்களின் எண்ணம் ஈடேறியிராது. மொகலாயருக்கும், துர்க்கதாஸ் தலைமை வகித்திருந்த இராஜபுத்திரருக்கும் இருபத்தைந்து வருடகாலம் மூண்ட யுத்தம் நடந்தது.

ஜஸ்வந்தசிங்கின் அரசிளங்குமாரனுகிய அஜித்சிங்கைக் காப்பாற்றவே இராஜபுத்திரர் விடாது போர் செய்கின்றனர் என்பதை அறிந்த ஔரங்கசீப் அப்பாலகனைத் தம் வசப்படுத்த அவனிருந்த கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டார். அத்தருணம் இராஜபுத்திரர் காட்டிய வீரா வேசம் இத்தகைமைத் தென்று எடுத்துரைக்க இயலாது. அவர்கள் கூட்டங் கூட்டமாய்த் தம்முடைய இன்னுயிர் மீது இச்சையையாது மொகலாய வீரர்களைக் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தினர்கள். அவர்களும் மொகலாயரால் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள். இந்தச் சமயத்தில் மனோவன்மையும், புத்தி சாதுர்யமும், வீரத்தன்மையும்

சிறந்து விளங்கிய துர்க்கதாஸ் தேர்ந்த நாற்பது இராஜபுத் திர வீரருடன் அஜித்சிங் என்னும் குமரனைக் கூட்டிக் கொண்டு வெளியேறி விட்டான். அதை யறிந்து அவனைப் பின் தொடர்ந்து வந்த மொகலாய சேனையை அவன் முன் னேறவொட்டாமல் தடுத்து அப் பாலகனை 1679-ஆம் வரு ஷம் ஜூலைமாதம் இருபத்துமூன்றுந்தேதி மார்வார் (Mar war) நாட்டில் ஓரிடத்தில் சுகமே கொண்டுபோய்ச் சேர்ப் பித்தான். மனிதர் நடமாட்டம் அதிகமில்லாமலிருந்த அபூ மலையின் சிகரத்தில் மாளிகை யொன்றில் யாதொரு இடை யூறுமின்றி அவ்வரசகுமாரன் இருந்துவந்தான். துர்க்கதா வின் வீரச் செயல்களை விரிக்கின் பெருகுமாதலின் இஃ தோடு நிறுத்துவோம்.

* * * *

* * * * *

ஔரங்கசீப் சிம்மாசனமேறிய நான்காவது வருஷம் (அதாவது 1662-ஆம் வருஷம் மேமாதம் பன்னிரண்டாந் தேதியிலிருந்து ஜூன்மாதம் இருபத்து நான்காந்தேதி வரையில்) பிணிவாய்ப்பட்டுப் பெரிதும் வருந்தினர். அப் போது அவர் இறந்துபோவார் என்று அநேகர் நினைத்த னர். டில்லி நகர் முழுவதும் மிக்க ஆரவாரமா யிருந்தது. ஆனல் அவர் நாளடைவில் சுகமடைந்தார் மறுவருடம் அவர் தமது தேக சௌக்கியத்தின் பொருட்டுத் தம் அருமை மகள் ஜேப்—உந்—நீஸாவுடன் காஸ்மீரத்துக்குச் சென்று அங்கு 1663-ஆம் வருஷம் ஏப்ரல்மாதம் 23-ஆம் தேதியி லிருந்து செப்டம்பர்மாதம் இருபத் தொன்பதாம் தேதி வரையில் தங்கியிருந்தார். அவர் அங்குத் தங்கியிருந்த கால மெல்லாம் தமது அரசாட்சிக்குப் பகைவர் என்ன கெடுதி செய்தார்களோ; என்ன நேர்ந்ததோ என்றஞ்சியிருந்தார்.

ஔரங்கசீப் தமது தந்தையின் ஆளுகையில் தக்ஷிணத்திற்கு இராஜப் பிரதிநிதியாக அனுப்பப்பட்ட விஷயத்தை முன்னமே கூறியிருக்கிறோம். அங்கு இருக்கும் கோல கொண்டா, பிஜப்பூர் முதலிய நாடுகளின் சுல்தான்களுக்கு யுத்தம் நேர்ந்த விஷயம் நமக்குத் தெரிந்ததே. அது சமயம் கோலகொண்டா நாட்டுச் சுல்தானின் பிரதம மந்திரியாகிய மீர்ஜும்லா, தனக்கும் தனது சுல்தானுக்கும் ஏற்பட்ட விரோதத்தால் அந்நாட்டை ஔரங்கசீப்புக்குக் காட்டிக்கொடுக்க முன் வந்தான். தக்ஷிணத்தில் அவன் ஔரங்கசீப்புக்குச் செய்த உதவிக்கு அளவில்லை. அதனால் ஔரங்கசீப் அவன்மீது அத்தியந்த பிரியம் வைத்து அவனை வங்காளத்திற்கு இராஜப் பிரதிநிதியாகத் தம் தந்தையின் உத்தரவின்மீது நியமித்தார். அது முதற்கொண்டு மீர்ஜும்லா (Mirjumla) பல விஷயங்களிலும் ஔரங்கசீப்பின் மனங் கோணுமல் நடந்து வந்தான்.

மொகல் ராஜ்ஜிய உரிமையின் பொருட்டு ஔரங்கசீப்புக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் நேர்ந்த யுத்தத்தில் மீர்ஜும்லா ஔரங்கசீப்புக்கு வலக்கையேபோல்இருந்து வந்ததோடு யுத்த விஷயங்களில் சமயோசித ஆலோசனைகளையும் சொல்லிக்கொண்டு வந்தான்.

மீர்ஜும்லா ஔரங்கசீப்பின் சகோதரனை ஷுஜாவைப் போரில் தோற்கடித்து வங்காளத்தினின்றும் துரத்தினான். அவ்விதம் துரத்தப்பட்ட ஷுஜா தன்னைத்தான் காத்துக்கொள்ளும் பொருட்டு வங்காளத்திற்குக் கீழ்த்திசையிலிருந்த அரக்கான் (Arakkan) என்னும் நாட்டு மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். அடைக்கலம் புகுவோரை ஆதரித்து அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்வதன்றோ நீதி மன்னர்க் கழகு? அவன் அவ்விதம் செய்

யாமல் அவனை அவமரியாதையாக நடத்தினான். அதைக் கேள்விப்பட்ட ஔரங்கசீப்புக்குக் கோபம் உண்டாயிற்று. "ஷுஜா எனக்கு எதிரியாயினும் அவன் இராஜகுலத்துதித்தவன் தானே. அவனை என்க்காகவேனும் மரியாதையாக நடத்தாமல் இகழ்ந்த அந்த அரக்கான் நாட்டு மன்னனை அடியோடு தொலைக்க வேண்டுமென்று நான் கங்கணங் கட்டிக்கொண்டேன். அவனைச் சிட்சித்துப் புத்தி கற்பித்தால் இதர நாட்டு மன்னர்கள் நம்மையும் நமது குலத்தோரையும் மரியாதையாக நடத்த முன்வருவார்கள்" என்று அவர் தம் அருகிலிருந்த மீர்ஜும்லாவுக்குத் தெரிவித்தார். அவன் அவர் ஆணையைச் சிரசின்மேல் வகித்து அரக்கான் மன்னனோடு யுத்தம் செய்யச் சேனைகளைத் தயாரித்தான். பிறகு, அவன் அந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அங்கு அநேக இடங்களைச் சூறையிட்டான். ஆனால் மீர்ஜும்லாவினால் தன்னுடைய சேனைகளை ஒரு நிலைக்குக்கொண்டுவர இயலவில்லை.....அந்த யுத்தத்தில் நேர்ந்த களைப்பாலும், தேக அசௌக்கியத்தாலும் அத்தளகர்த்தன் 1663-ம் வருஷம் வங்காளத்திற்கு வந்து பிணிவாய்ப்பட்டு இறந்துபோனான்.

இவ் விஷயம் "தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்" என்னும் பழமொழிக்கு இலக்காக இருக்கிறது. ஔரங்கசீப் இராஜ்ஜிய உரிமையின் பொருட்டுத் தமது சகோதரன் ஷுஜாவைப் பகைத்தாரேனும், அவனை இதர நாட்டு மன்னன் இகழ்ந்தான் என்பதைக் கேட்ட மாத்திரத்தில் அவர் சீற்றம் உற்றவராய் அவ்வாறு அவமதித்த அம் மன்னனைச் சிட்சிக்கப் பிரயத்தனப்பட்டார். அவரிடத்துள்ள நற்குணங்களில் இஃதொன்றாகும்.

* * * * * * *
* * * * * *

ஔரங்கசீப் தமது சகோதரர்களைக் கடுமையாக நடத்திக்கொன்றுரேனும் அக் காலத்தில் மகம்மதியர் வழக்கப்படி அவர்களுடைய பெண் மக்களைத் தமது புதல்வர்களுக்கு மணம் செய்வித்தார். இம்மண வினைகளால் ஔரங்கசீப்பிற்குப் பின் மூன்றும் தலைமுறையில் அவருடைய இரத்தம் அவர் அநியாயமாய்க் கொன்ற சகோதரர்களின் இரத்தத்தோடு கலந்திருந்தது என்பர் சரித்திராசிரியர்.

* * * * * *
* * * * *

மகமத் ஆசாராம் (Mohomed Azam) என்னும் மொகல் அரசிளங்குமரன் ஆமதாபாத்தில் தன்சேனையுடன் தங்கியிருக்கையில் அவனுடைய சேனை வீரர்களில் சிலர் ஔரங்கசீப்பை அடைந்து, 'மகராஜ்! புறங் கூறுவதில் சிறந்து விளங்கும் மகமத்பெக் (Mahomed Beg) என்பவன் எவ்விதமாகவோ உமது குமாரன் ஆசாமினுடைய நண்பனுயினன். அவனால் எங்கள்மீது வீண்பழிகள் சுமத்தப்படுகின்றன. நாங்கள் படும்பாடு கடவுளுக்குத்தான் தெரியும். அவனுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணுங்கள், என்று மன்றாடினர்.

அதைக் கேள்வியுற்ற ஔரங்கசீப் ஆமதாபாத்திலிருந்த அப் புறங்கூறும் துஷ்டனைத் தம் அண்டையில் நடத்திக் கொண்டுவரச் சாடட்கான் (Sadat Khan) என்பவனுக்கு ஆக்ஞாபித்துப் பின்வருமாறு அவனிடம் கூறினர். "அவனை நடத்திக்கொண்டுவர நான் ஆக்ஞாபித்ததற்குக் காரணம் அவனுடைய புறங்கூறும் தூர்க்குணமேயாகும். கெடுதி விளைவிக்கக்கூடிய துஷ்ட நடவடிக்கைகளில் முதன்

மையானது புறங்கூறுவதே யாகும். பெரியோர்கள் புறங் கூறும் துர்க்குணத்தைப் பெரிதும் இகழ்ந்து கூறி இருக் கிறார்கள். கொலை செய்வதினும் புறங் கூறுவது கொடிய பாவமாகும். கடு விஷமுடைய சர்ப்பத்தின் மேற்பாகம் பல நிறங்களோடு பளபளவென்று மின்னிக் கண்களைக் கவருகிறது. ஆனால் அதனிடம் மனிதரைக் கொல்லும் விஷமிருக்கிறது. அதைப்போலவே புறங் கூறுகிறவனின் கூற்றுக்கள் கேட்பதற்கு இனிமையா யிருப்பினும் அவற் றால் விளையும் கேடுகள் அநேகம் அன்றோ?

* * * * * *

ஔரங்கசீப் தாம் தமது தகப்பனார் விஷயத்தில் நடந்து கொண்டது போலவே தமது புத்திரர்களும் தம் விஷயத்தில் நடந்து கொள்வார்கள் என்று சந்தேகித்து அவர்கள் தம்மிடம் அவ்விதம் நடந்து கொள்ளாத விதம் தம்மால் ஆனவரையில் முயன்று வந்தார்.... .....தூர தேசங்களில் இராஜப் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டிருப் பவர்கள் கடிதம் ஒன்றும் இரகசியமாக யாருக்கும் எழுதப்ப டாது என்று கட்டளையிட்டிருந்தார். அவர்கள் தம் வார்த் தையைமீறி எழுதுகிறார்களா என்பதை அறியும்பொருட்டு இரகசியமாகச் சில உத்தியோகஸ்தரை நியமித்திருந்தார். ஒருநாள் அவருக்குப் பின் வருமாறு கடிதம் ஒன்று முல்த் தான் (Mul-tan) மாகாணத்திலிருந்து வந்தது.

'மகாராஜ்! முல்தானுக்கு இராஜப் பிரதிநிதியாக அனுப்பியுள்ள உமது குமாரர் மகம்மத் முயாஸீம் பக தூர்ஷா (Mahammat Muazzam BahadurShah) உமது கட்டளைக்கு விரோதமாய் மைக்கூடு பேனு முதலியவைகளை இரவில் தமது படுக்கையறைக்குக் கொண்டுபோகிறார். அத னால் அவர் எழுதுவது என்ன வென்றும் யாருக்கு எழுது

கிறார் என்றும் தெரியவில்லை. அந்தப் புரத்தில் அவர் குடும்ப சமேதராய் இருக்கும்போது நான் அங்கு நுழைவது மரியாதை யல்லவே. இவ்விஷயத்தில் உமது கட்டளையை வெகு ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.''

அக்கடிதம் எழுதிய ஆள் யார் என்பதை எளிதில் தெரிந்துகொண்ட ஔரங்கசீப் அந்த ஆளுக்குப் பின் வருமாறு பதில் எழுதி விடுத்தார்.

''அரசிளங் குமாரனின் அந்தப்புர அறைக்குப் போக அதிகார மில்லாத நீ, அவ் அரசிளங் குமரன் தன்னுடன்மைக் கூட்டையும், எழுதுகோலையும் எடுத்துக் கொண்டு போகக் கூடாது என்று தடுப்பதில் அவனுக்கு என்ன குறைவு ஏற்படப் போகிறது. இனி எக காரணத்தாலும் எழுதும் கருவிகளை அரசிளங் குமரன் தன் அந்தப்புர அறைக்குக் கொண்டு போகாதபடி தடுத்துவிடவேண்டும். நானும் அங்கிருக்கும் நாஸருக்கு (Nazir) எழுதுங் கருவிகளை வெளி யறைகளில் அவ் வரசிளங் குமரன் கையெழுத்துப் போடுகிற வரையில் அவன் எதிரில் வைத்திருந்து பிறகு எடுத்துக் கொள்ளவேண்டியது என்று எழுதியிருக்கிறேன். நீ மூடத்தனமுள்ள என் குமாரனை நெருங்கி, அவன் இதுகாறும் சிறைப்பட்டு ஏதோ கடவுள் கிருபையால் தப்பியும் அவனுக்குப் புத்தி வராத விஷயம் மிகவும் விசனிக்கத் தக்கதென்றும், இப்போதும் அவனைச்சிறையிலிடுவது எனக்குக் கஷ்டமான காரியமல்ல வென்றும் எடுத்துச் சொல்வாயாக. அப்போதாகிலும் அவனுக்குப் புத்தி வருகிறதாவென்று பார்ப்போம்.''

ஔரங்கசீப் இவ்விதம் தமது குமாரர்களைச் சந்தேகித்து அவர்கள் சுயேச்சையாய் யாதொரு காரியத்தையும் செய்யக் கூடாதபடி தடுத்ததனால், அவர்கள் அவருக்குப்

பிற்பாடு இராஜரீக விஷயங்களை அறியாதிருந்தனர். அதனால் மொகல் இராஜ்ஜியம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது என்று கூறலாம். அவர்களுடைய அழிவிற்குக் காரணமாயிருந்தவர் அப் பிள்ளைகளுடைய தகப்பனாராகிய ஔரங்கசீப்பே என்று ஒருவாறு நாம் துணிந்து கூறலாம்.

* * * *

ஔரங்கசீப் காலமாயினவுடன் அவர் அருகிலிருந்த மொகல் உத்தியோகஸ்தர்கள் அவருடைய பிரேதத்தைப் படுக்கையினின்றும் அகற்றியபோது அப்படுக்கையிலிருந்த தலையணையின்கீழ் ஔரங்கசீப் கைப்பட வரைந்த கடிதமொன்று அகப்பட்டது. அதுதான் அவர் எழுதிய மரண சாசனமாகும். அக்கடிதத்தை மொகல் உத்தியோகஸ்தர்கள் வெகுஆவலுடன் எடுத்துப்பின்வருமாறு வாசித்தனர்.

'கடவுளுக்குப் புகழ்ச்சியும் அவருடைய அடியவர்களுக்கு அவரால் ஆசீர்வாதமும் உண்டாவதாக. நான் இறந்தபிறகு என் விருப்பம் இன்னதென்பதைப் பிறர் அறிந்துகொள்ளும்பொருட்டு இம் மரண சாசனத்தில் சில விஷயங்களை எழுதுகிறேன்.

முதலாவது: கொடிய பாவியாகிய என் நன்மையின் பொருட்டு ஆஸான் என்னும் மகாத்மாவின் கல்லறையின் மீது துணி ஒன்று போடவேண்டியது. ஏனெனில், பாவக் கடலில் மூழ்க மீள வழி யறியாது விழிக்கும் என்போலியர் அத்தகைய மகான்கள் மூலமாக மன்னிப்புப் பெறவேண்டியது அவசியமாயிருக்கிறது. இப்புண்ணிய செய்கையைச் செய்வதற்காக வேண்டிய திரவியத்தையும், மற்றவைகளையும் அலிஜா (Alijah) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டாவது: நான் தொப்பிகள் தைத்துவிற்று அதனால் அடைந்த லாபம் நான்கு ரூபாயும், இரண்டணாவுமாகும். என்னுடைய மகல்தார் அயாபெக்கிடம் (Aia Beg) அத்தொகையைக் கொடுத்து வைத்திருக்கிறேன். அதை அவனிடமிருந்து பெற்று ஆதரவற்ற என் சவத்தை மூடுவதற்குத் துணி ஒன்று வாங்கி நியமப்படி மூடிச் செய்ய வேண்டியவற்றையும் செய்யுங்கள்.

நான் குரான் எழுதினதற்குக்கூலியாகஅடைந்தரூபாய் நானூற்று ஐந்தும் என்னுடைய பணப்பையில் இருக்கிறது. அத்தொகையை எடுத்து நான் இறந்துபோகுந் தினத்தில் பக்கிரிகளுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள். அத்தொகையை வேறு எவ் விஷயத்திற்கும் உபயோகிக்கவேண்டாம்.

மூன்றாவது: இதர வஸ்துக்களை என்னுடைய குமாரனும், மொகல் சிம்மாசன மேறத்தகுந்தவனுமான அலிஜாவின் குமாஸ்தாக்களிடமிருந்து பெற்று, அலிஜாவின் இஷ்டப்படிக்கு எனக்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளைச் செய்துவிடுங்கள்.

நான்காவது: என்னைக் கல்லறையில்புதைக்கும்போது என் தலையைத் தொப்பியினால் மூடாமல் வெறுமையாய் விட்டுவிட வேண்டியது. ஏனெனில் பாவியாகிய என்னைப் போன்றவர்கள் யாவருக்கும் பெரிய பாதுஷாவாகிய கடவுளிடம் போகையில் தலைக்கு ஒன்றும் இல்லாமற் போனால் தான் அவருடைய கிருபாகடாட்சம் கிடைக்கும்.

ஐந்தாவது: என்சவப்பெட்டியின்மேற்புறத்தைக்காஸி (Gazi) என்னும் வெள்ளைத்துணியால் மூடுங்கள். என் சவத்தின் முன்புறத்திலாயினும், பின்புறத்திலாயினும் ஆடல் பாடல் முதலிய அட்டகாசங்கள் வேண்டாம்.

ஆறுவது: எனக்குப் பின் மொகல் சிம்மாசனத்தில் ஏறுபவர் எவராயினும் என் சொற்படி நடந்து எனக்குக் குற்றேவல் செய்துவந்த வேலைக்காரர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் துன்பம் விளைவிக்கக் கூடாதென்பது மரண காலத்தில் எனக்கு இருக்கும் விருப்பமாகும். அவர்கள் என் ஆஜ்ஞைக் குட்பட்டிருந்தபோது எத்தனைப் பிழைகள் செய்திருந்த போதிலும் அப்பிழைகளை என் பொருட்டு மன்னிக்க வேண்டுமென்பது என் இஷ்டமாகும்.

ஏழாவது: குமாஸ்தா வேலை செய்வதிலும், யுத்த காலங்களில் போர்செய்வதிலும் பாரசீகர்களைப் போன்று சிறந்தவர் எவருமிலர். அவர்கள் உமாயூன் பாதுஷாகாலத்திலிருந்து இதுவரையில் எக்காரணம் பற்றியும் சண்டைக்குப் பயந்து முதுகுகாட்டி ஓடவில்லை. அதுவுமன்றி கீழ்ப்படியாமை, துரோகசிந்தை முதலிய தூர்க்குணங்கள் அவர்களிடம் இல்லை என்பது நிட்சயம் ஆனால், அவர்கள் தங்களைப் பிறர் வெகு மரியாதையாக நடத்த வேண்டுமென்று விரும்புவார்கள். அவ்விஷயத்தைக் கவனித்துஅவர்களிடம் வெகு சாமர்த்தியமாய் நடந்துகொண்டால் மொகல் ராஜ்ஜியவிஷயங்கள் சரியாக நிறைவேறுவதற்குத் தடையில்லை.

எட்டாவது: எனக்குத் தெரிந்தமட்டில் துரானியர் போர் வீரர்களாகவே யிருந்துவருகின்றனர். திடீரென எதிரிகளைத் தாக்குவதிலும், இரவில் முற்றுகை இடுவதிலும், பிறரைக் கைதி செய்வதிலும் அவர்களைப்போல் நிபுணர்கள் எவர்களும் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியேயாகும். சமயத்திற்கேற்றபடி அவர்கள் பின்தங்கி ஓடுவதற்கும இஷ்டப்படுவார்கள். அவர்கள் ஹிந்துஸ்தானியரைப்போல், 'எங்கள் தலை போனாலும் போகட்டும். எங்கள் கால்கள் இருந்த இடத்தை விட்டுப் பெயரா' என்

...ணும்.

...ராநாட்டு சையத்துக்கு எவ்வளவு மாயாதை செய்யவேண்டுமோ அவ்வளவையும் மனங் கோணுமல் செய்யவேண்டியது அவசியம். அவரும், அவ ரைச் சேர்ந்தவர்களும் நமது தீர்க்கதரிசி மகம்மதுக்கு நெருங்கிய பந்துக்களாவர். நமது மகம்மதே ஓரிடத்தில் ஜனங்களைப் பார்த்து, 'நீங்கள் எனக்கு யாதொரு பிரதியுப காரமும் செய்ய வேண்டுவதில்லை அதற்குப் பதிலாக என் னுடைய குடும்பத்தைச் சேர்ந்தோரையும், இதர உறவின ரையும் மனப்பூர்வமாக நேசியுங்கள். அவ்விதம் செய்யின் இம்மையிலேயே அன்றி மறுமையிலேயும் உங்களுக்கு நன் மை யுண்டாகும்'.....என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார் என்பது ஞாபகத்தில் இருக்கவேண்டும்.

பத்தாவது: ஒரு இராஜாங்கத்தின் மன்னவன் எப் போதும் தன் ஆளுகைக் குட்பட்ட மாகாணங்களைச் சுற் றிப் பார்த்துக் கொண்டு இருப்பது அவசியமாகும். அவ் விதம் செய்யாமல் அவன் சோம்பலுற்றவனாய் ஓரிடத்தி லேயே தங்கியிருப்பானாயின் பல கெடுதிகள் அவனுக்கும் அவன் ராஜ்ஜியத்திற்கும் உண்டாகும்.

பதினொன்றுவது: அரசர் எக்காரணம்பற்றியும் தமது புதல்வர்களை நம்புதல் கூடாது. என் தகப்பனார் அவ்விதம் தாராஷுகோவை நம்பியிராதிருந்தால் அவருக்கு இவ் விதக் கெடுதிகள் நேர்ந்திரா.

பன்னிரண்டாவது: ஒரு நாட்டு மன்னன் அடிக்கடி தன்னுடைய ராஜ்ஜியத்தில் பல இடங்களிலும் நடக்கும் விஷயங்களை அவ்வப்போது தெரிந்துகொள்ள முயற்சிக்க

தம் செய்ய வேண்டியதாயிருந்தது.

இந்த மரணசாசனத்தை இப்பன்னிரண்டு விஷயங்களுடன் நிறுத்திவிடுகிறேன். ஏனெனில், பன்னிரண்டு என்னும் இலக்கம் சுபத்தைக் குறிக்கிறது என்பது முதுமொழி.

ஔரங்கசீப் பாதுஷாவின் அரசாட்சியின் இறுதியில் மொகல் இராஜ்ஜியம் வீழ்நிலை அடைந்ததாயினும், அக்காலத்திய இந்திய தேச சரித்திரம் படிக்கப் படிக்க இன்பந் தருவதாகும். அக்காலத்தில், மகாராஷ்டிரர் தலையெடுக்கலாயினர்; சீக்கியர் முதல்முதல் கிளம்பினர்; ஐரோப்பியவர்த்தகர்கள் வியாபாரநிமித்தம் இந்தியாவுக்கு வந்தனர்.

ஔரங்கசீப் கல்வியில் மேதாவி; எழுதுவதில் நிபுணர்; போரில் புறங்காட்டாத வீரர்; அஞ்சா நெஞ்சமும், ஆண்மையும் மிகுந்தவர்; இராஜ தந்திரத்தில் தேர்ந்தவர்; இராஜ்ஜியபார நிர்வாகத்தில் சிறந்தவர்; நடுநிலைமை தவறாத நியாயாதிபதி; ஏழைகள் மீது கருணையும் கடவுள் பக்தியு மிகுந்தவர். இத்தகைச் சிறந்த குணங்கள் நிரம்பப்பெற்ற அவர் மதவைராக்கியமுடையவராயிருந்த விஷயம் விசனிக்கத் தக்கதே! அது ஒன்றுமட்டும் அவரிடம் இல்லாதிருந்தால், "அவருக்கு முன்னிருந்த அக்பரும் சூரியன் முன் மின் மினிப் பூச்சிபோல் புகழொளியை இழந்துபோயிருப்பர்" என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

இஃதோடு எல்லாம் வல்ல இறைவனது திருவருளால் இச்சரிதத்தை முடிக்கின்றேம்.

— ஔரங்கசீப் சரித்திரம் முற்றுப்பெற்றது.

180100
சென்னை-600 008.